திங்கள் இருமுறை
அக். 1, 1970. 35 காசு

# தமிழரசு



## உறுதியான கட்டடங்கள்: நகரங்களில்-2

SANKAR IC CEMENT



மலிவு விலை நகர்ப்புற வீடு

### உறுதியானது, நிலையானது ஆனாலும் மலிவானது

# சங்கர் சிமெண்ட்

IS: 269

பாறை போன்று உறுதி நிலைத்திருக்கக் கூடியது

**ISI** மார்க்குடன் உத்தரவாதம் உள்ளது

### இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், தன் பில்டிங், சென்னை-2

23 ஆண்டுகள் நிலைத்து — இன்னும் வளர்ந்துகொண்டே போகிறது!

இலவச தொழில் நுட்ப ஆலோசனைக்கு: சிமெண்ட் சர்வீஸ் பீரோ, 'குரோவ்', சென்னை-18

FDSIC-1444TM



சேலம் உருக்காலைத் திட்டத் துவக்க விழாவில் தலைமையமைச்சர் திறந்து வைத்த நினைவுத்தூண்.

# தமிழரசு

மலர் 1 1970 அக்டோபர் 1 இதழ் 7

## இந்த இதழில்

காந்தியடிகள் கனவை
நன்வாக்கும் தமிழ்நாடு

சேலம் கனிந்தது
நீ எங்கே நான் அங்கே
சிங்கார வீடுகட்டச் செங்கல் சூளை
வாராயோ தோழி
இந்த மாதத்தில் என்ன செய்யலாம்
'தலை' யான செய்தி
காந்தி அண்ணல் காண வந்தால்
பழச்சாறு பருகலாமா

ஒட்டுநரே உரிமையாளர்
சீரணி விழாக்கள்
மற்றும் வழக்கமான சிறப்புகளுடன்

முதல்வர் எழுதும் தொடர் [illegible]ரை

இனியவை இருபது

**முகப்பில் :**

அண்ணல் காந்தியடிகள்
பிறந்தநாள் விழா அக். 2

**கடைசி அட்டையில் :**

சேலம் திட்டத் துவக்க விழாவில்
தொழிலமைச்சர், தலைமையமைச்சர்,
முதலமைச்சர், ஆளுநர்,
மத்திய இரும்பு உருக்கு அமைச்சர்.

# காந்தியடிகள் கனவை




"உரிமையிழந்து, வாழ்விழந்து கிடந்த நாட்டை உயர்த்தத் தோன்றிய உத்தமர் காந்தியடிகள், களராகிக் கிடந்த சமூகத்தைப் பார்த்துக் கண்ணீர் விட்டு, அதைப் புதுப்பிக்க உறுதி பூண்டு உழைத்தவர். அவரால் நாம் இன்று உரிமை வாழ்வின் இனிமையை அனுபவிக்கிறோம்.

"அவர் வாழ்க்கையில் கடைப்பிடித்துக் காட்டிய தூய்மையும், அன்பும், சமூக உணர்வும், நாட்டுப் பற்றும், தாய் மொழிப் பற்றுமே இன்று நம்மை ஓரின மக்களாகப் பிணைத்து நமக்குள் ஒற்றுமையை வளர்த்து வருகின்றன.

"அவர் இறுதி மூச்சுள்ளவரை போராடினார். அந்நியரை எதிர்த்து அவர் நடத்திய போராட்டந்தான் முற்றுப் பெற்றதேயொழிய, தாய் நாட்டுமக்களிடையே மண்டிக்கிடந்த அறியாமையையும், குறுகிய மனப் பான்மையையும், தன்னலத்தையும், சாதி சமய வேற்றுமைகளையும் எதிர்த்து அவர் நடத்திய போராட்டம் இன்னும் முற்றுப் பெறவில்லை.

"போர்க்களத்தில் வீர மரணம் எய்தும் மாவீரனைப் போன்று அவர் மறைந்துவிட்டார், அந்தக்கணத்தில் இருந்து அந்தப் போராட்டத்தை அவர் நம்மிடையே விட்டுச் சென்றுள்ளார். அவர் வழி நடந்து, அவரது தூயஉள்ளத்தையும், தொண்டு மனப் பான்மையையும் பெற்று, ஓயாது உழைத்து அந்தப் போராட்டத்தில் நாம் வெற்றி பெறுவது ஒன்றுதான் அவருக்குக் காட்டும் சிறந்த நன்றியாக இருக்கும் என நான் கருதுகிறேன்."

அண்ணலின் நூற்றுண்டு விழாத் தொடக்கத்தின் போது அமெரிக்க மருத்துவ மனையிலிருந்து அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் விடுத்தசெய்தியின் ஒரு பகுதி இது. ஆண்டு இரண்டுக்கு முன்பு அண்ணா விடுத்த செய்தியை, அவர் அடிச்சுவட்டில் இயங்கும் தமிழ்நாடு அரசு செயல் படுத்திக் காட்டுவதில் வியப்பேதுமில்லையே !

அன்று, அண்ணல் அறப் போராட்டத்தைத் தென் ஆப்பிரிக்க நாட்டில் தொடங்கிய போது அவர் உடனிருந்து உற்றுழி உதவியவர்கள் தமிழர்கள்.

இன்று, காந்தியடிகள் கனவையெல்லாம் நனவாக்கிக் காட்டுபவர்களும் தமிழ் நில மக்களேயாவர்.

வகுப்புக் கலவரங்களை, வேற்றுமைகளை அடியோடு வெறுத்தார் அண்ணல். வகுப்பு ஒற்றுமைகளில் முன்னணியில் நிற்கிறது தமிழ்நாடு.

இந்தியாவின் உயிர்நாடி கிராமங்களிலேதான் உள்ளது என்றார் உத்தமர் காந்தியடிகள்.

கிராமங்களின் மேம்பாட்டுக்காகத் தமிழ்நாடு நிறைவேற்றிவரும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களை இந்தியாவிலுள்ள எல்லா மாநிலத்தவர்களும் புகழ்ந்துரைக்கின்றனர்.

கிராமக் கைத் தொழிலாகட்டும் கதர்த் தொழிலாகட்டும் எதிலும் தமிழ்நாடு முதன்மை வகிக்கிறது.

கல்லூரிகளிலும் பயிற்று மொழி, தாய்மொழியாக இருக்கவேண்டும். தாய்மொழிக் கல்வியே வலிவான அறிவு வளர்ச்சிக்கு அடித்தளம் ஆகும் என்ற அண்ணலின் கொள்கையைச் செயலாக்குவதில் முன்னணியில் நிற்கிறது தமிழ்நாடு.

பிற்பட்டமக்களின் முன்னேற்றத்தைப் பெரிதும் வேண்டினார் காந்தியடிகள்.

பிற்பட்டமக்களின் நலத்தை வளர்த்திடத் தமிழ்நாட்டில் தனியானதொரு துறை ; திட்டங்கள்.

# நனவாக்கும் தமிழ்நாடு

மதுவிலக்குத் திட்டமாகட்டும் தீண்டாமை ஒழிப்பாகட்டும் காந்தியக் கொள்கைகள் எதிலும் ஏனைய மாநிலங்களுக்குத் தமிழ்நாடுதான் முன்னோடி.

ஏழை மக்களுக்குப் பட்டா நிலம் சட்டத்தின் மூலம் வழங்குவதில்—

எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி, மின்சார வசதி பெருக்குவதில்—

உணவு உற்பத்தியில் தன்னிறைவை அடைவதில்—

எல்லா மக்களும் கல்வியைப் பெற இலவசக் கல்வியை அளிப்பதில்—

காந்தியடிகள் கண்ட புதிய சமுதாயத்தை உருவாக்கி வருகிறது தமிழ் நாடு அரசு !

அவர் கனவை எல்லாம் நம் அரசு நனவாக்கி வருவதில் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் பெருமை உண்டு.

அந்தப் பெருமித உணர்வோடு, அனைத்து இந்தியாவுக்கும் வழிகாட்டும் வழியில் அனைத்துக் கட்சியின் சார்பில் அண்ணலின் பிறந்த நாள் விழாவை மிகச் சிறப்பாக ஆண்டு தோறும் கொண்டாடுகிறது நம் அரசு.

இந்த நேரத்தில் அண்ணலின் நூற்றுண்டு விழாவின் போது கடந்த ஆண்டில் நம் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டதை நினைவு கூர்வோம் :—

''காந்தியடிகளின் இலட்சியங்கள் சாகா வரம் பெற்றவை !

அவர் கொள்கைகள் நிலைத்து நிற்பவை !

அவர் தியாகம், காலத்தின் சுழற்சியில் உதயக் கதிர்போல் ஒளிவிடும் தன்மையுடையது !

அவர் வாழ்வு ஒரு வழிகாட்டி !

அவர் எளிமை ; இனிமை—எல்லாமே உலகத்தைக் கவர்ந்தவை !

அவர் எண்ணங்கள் ஈடேற ;

ஏழ்மை நாட்டை விட்டகல ;

அவர் ஏற்றிய விளக்கின் ஒளி அனைவருக்கும் கிட்ட

பாடுபடுவோம் !

பணிபுரிவோம் ! ''

## அண்ணல் மொழி

ஒரு புறம் மாட மாளிகைகளும் மறுபுறம் புருக் கூண்டுகள் போன்று இருக்கும் குடிசைகளும் உள்ள அவலக் காட்சி, சுதந்தர நாட்டில் ஒரு நாள் கூட நீடித்து இருக்கக் கூடாது. பணக்காரனுக்கு உள்ளதைப் போன்றே உரிமைகள் ஏழைக்கும் தரப்பட வேண்டும்.

* * *

மாப்பிள்ளை மணவறைக்குப் போவது போல் மக்களுக்காகச் சிறை செல்லப் பழகிக்கொள்ள வேண்டும்.

* * *

தமிழ் மக்கள் எனது குருதிக் கலப்புற்ற உடன் பிறந்தவர்கள். தென்னாப்பிரிக்காவில் உரிமைப் போரில் தமிழ் மக்கள் புரிந்த துணையைப் போல வேறெந்த இந்தியரும் புரியவில்லை. அவர்களுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

* * *

பணக்காரனாக இருப்பதைவிட ஏழையாக இருப்பதே பாக்கியம் என்பதை நான் உணருகிறேன். செல்வத்தைவிட வறுமையின் பயன்கள் உண்மையானவை.

* * *

இதுவரை நாம் பெண்களை இழிவாகக் கருதிவந்த காரணத்தால் நாம் இப்போது திறமையான பெண்கள் கிடைக்குமிடங்களில் ஆண்களுக்குப் பதிலாகப் பெண்களையே தேர்ந்தெடுக்க வேண்டும். பெண்களுக்குக் கல்வியளித்து நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்வதற்குத் தகுந்த திறமையை அளிக்க வேண்டும். இந்தச் சீர்திருத்தத்தை ஆண்கள் செய்ய வேண்டியது மிக அவசியம். இப்படி அவர்கள் செய்வது பெண்களின் பரிவுக்காகச் செய்வது அன்று. வெகு காலமாகச் செய்யத் தவறிவிட்ட நியாயத்தைச் செய்வதற்கே யாகும்.


முதல்வர் எழுதும்
இனியவை இருபது

# 5. இன்றைய இத்தாலி . . .

கடல் அலையென உயர்ந்தும், வீழ்ந்தும் இத்தாலி நாட்டின் அரசியல் மாறுதல்கள் அந்நாட்டுக் களம்புகு வீரர்களால் அமைந்த அத்தியாயங்களைப் பற்றி நான் கூறுவதற்கு முன்பு இன்று கண்ட இத்தாலியின் அரசியல், பொருளாதாரச் சூழ்நிலைகளை விவரித்து விடுவது நலமன்றோ !

இன்று இத்தாலியக் குடியரசு தன் எல்லைக்குள்ளேயே தனி உரிமை ஆட்சி பெற்ற குடியரசான ஸான்மரினோவையும், தனி உரிமை ஆட்சி பெற்ற வாடிகன் நகரத்தையும் பெற்றதாக அமைந்துள்ளது.

நேப்பிள்ஸ், லெக் ஹார்ன், லாஸ்பீஜியா, ஜினோவா, ஸவோனு ஆகிய எழில்மிகு இயற்கைத் துறைமுகங்கள் இத்தாலியின் மலைப்பாங்கான மேற்குக் கடற்கரையை, அணி செய்து கொண்டிருக்கின்றன. தாழ்வான ஏட்ரியாடிக் கடற்கரை, வெனிஸ், பேரி, பிரிண்டிஸி, டாரண்டோ ஆகிய இயற்கைத் துறைமுகங்களால் சூழப் பெற்றிருக்கிறது.

இத்தாலிய நாடு முழுவதும் இத்தாலி மொழி தான் ஆட்சி மொழியாகும். இது பெரும்பான்மையான மக்களால் பேசப்படுகிற மொழி. ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு மொழி பேசப்பட்டாலும், டஸ்கனி நாட்டு மொழியான டஸ்கன் தரம் வாய்ந்த இத்தாலி மொழியெனக் கூறப்படுகிறது. பீட்மாண்ட் பகுதிகளில் பிரெஞ்சு மொழி பேசப்படுகிறது. அயோஸ்டா பள்ளத்தாக்கில் இது இரண்டாவது ஆட்சி மொழியாக விளங்குகிறது. மேல்அடிகே பகுதிகளில் ஜெர்மன் மொழி பரவலாகப் பேசப்படுகிறது. லத்தீன்; வடக்கு, வடகிழக்குப் பகுதிகளில் பேசப்படுகிறது.

நடைபெறுகின்ற நாளேடுகளாயினும், கடைகளில் காணப்படுகின்ற நூல்களாயினும் இத்தாலிய மொழியிலேயே இருந்திடக் காண்கிறோம். உலகத் தொடர்பிற்குத் தேவையான ஆங்கில மொழியின் உபயோகம் அந்தத் தொடர்பிற்குரிய துறைகளின்பால்தான் காணப்படுகிறதே தவிர, பிற இடங்களில் எல்லாம், தங்கள் தாய்மொழியிலேயே அனைத்தையும் சாதிக்கலாம் என்ற அழுத்தமான எண்ணம் இத்தாலி நாட்டில் இருந்திடுகின்றது.

ரோமன் கத்தோலிக்க மதம் அரசாங்கம் பின்பற்றும் மதமாக அமைந்துள்ளது. இத்தாலியர்களில் 99 சதவிகிதத்தினர் ரோமன் கத்தோலிக்கர்கள்தான்.

*1861*-ஆம் ஆண்டு தொடங்கி, நடந்து வந்த சட்ட வரம்பிற்குட்பட்ட முடியாட்சியை ஒழித்து, நேர்முக வாக்குமூலமாக இத்தாலிய மக்கள் *1946* ஜூன் *2*-ம் நாளன்று குடியரசு உருவாக்கினர். அதே வேளையில் அரசியல் நிர்ணய சபை தேர்ந்தெடுக்கப்பட்டது. இது புதிய அரசியல் அமைப்புக்கு ஒப்புதல் அளித்தது. அந்த ஒப்புதல் *1948* ஜனவரி *2*-ம் நாள் முதல் செயல்படத் தொடங்கியது.

இத்தாலியக் குடியரசுக்கு ஒரு தலைவர் உண்டு. இவர் நாடாளுமன்றத்தில் மேலவை, கீழவை மன்றங்களின் மூன்றில் இரண்டு பகுதியினரால் தேர்ந்தெடுக்கப்படுவார். இவருடைய பதவிக் காலம் ஏழு ஆண்டுகளாகும். இந்த வாக்கெடுப்பில் மேலவை, கீழவை மன்றங்கள் மாத்திரமல்லாமல் இத்தாலியப் பகுதி ஒவ்வொன்றிலிருந்தும் மூன்று பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள்.

முசோலினியின் வீழ்ச்சி *1943*-ல் ஏற்பட்ட பிறகு, முதன் முதல் அமைக்கப்பட்ட அரசியல் கட்சிகள் பாசிசத்திற்கு முந்தியிருந்த அரசியல் கட்சிகளின் கூட்டணியான தேசீய விடுதலைக் குழுக்களாக இருந்தன. ஆயினும் *1946*-ம் ஆண்டிற்குப் பிறகு அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்தல் நடந்து இத்தாலியில் உள்ள அரசியல் கட்சிகள் மூன்றாகத் தொகுக்கப்பட்டன. அவை இடதுசாரிக் கட்சி, நடுநிலைக் கட்சி, வலதுசாரிக் கட்சிகளாகும். இதற்கிடையில், காஸ்பரி என்பாரின் தலைமையில் ரோமன் கத்தோலிக்கர்களுடைய ஆதரவு பெற்ற கிறித்துவ டெமாகிரடிக் கட்சி தனிப்பட்ட மாபெரும் கட்சியாக வளர்ந்துள்ளது.

*1948, 1953, 1958* ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் இந்தக் கட்சி அதிகாரத்தில் நிலைத்து நின்ற போதிலும் கொள்கைச் சண்டைகள் அவ்வப்போது அதன் வலிவைக் குறைக்கக் காரணம் ஆயின. இத்தாலியப் பொதுவுடைமைக் கட்சி, அங்குள்ள பலம் பொருந்திய கட்சிகளில் இரண்டாவது கட்சியாகும்.

மேற்கு ஐரோப்பாவிலுள்ள பொதுவுடைமைக் கட்சிகளில் இது தான் மிகப் பெரியதாகும். சோஷலிசக் கொள்கையுடன் அரசியல் விவகாரங்களில் ஈடுபடுகின்ற இரண்டு போட்டிக் கட்சிகள் உள்ளன. இவ்விரண்டில் பெரிய கட்சி சோஷலிஸ்ட் கட்சியாகும். இன்னொரு கட்சி சோஷியல் டெமாகிரடிக் கட்சியாகும். இத்தாலிய அரசியல் களத்தில் இந்தக் கட்சிகள் தவிர ரிபப்ளிக் கட்சி, லிபரல் கட்சி, ராடிகல் கட்சி என்ற கட்சிகள் இயங்குகின்றன.

நான் சென்றிருந்த நேரத்தில் இத்தாலியில் கிறித்துவ டெமாகிரடிக் கட்சியைச் சேர்ந்த அரசு நடைபெற்றுக் கொண்டிருந்தது. அனைவருக்கும் வேலை வாய்ப்பு; பொருளாதார நிலையில் இத்தாலியின் வடக்கு, தெற்கு இவற்றிற்கு இடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளை அறவே நீக்குவது; தொழில் துறைக்கும், வேளாண்மைத் துறைக்குமிடையே உள்ள வருமான ஏற்றத் தாழ்வுகளைப் போக்குவது; சமுதாயத்தில் எல்லா நிலையினருக்கும் சம வாய்ப்புகள் அளிப்பது, இந்த அரசின் கொள்கைகள் எனக் கூறப்படுகிறது. சமாதானம், பாதுகாப்பு, சுதந்திரம் ஆகியவற்றிற்குத் தொடர்ந்து பாடுபடுவது தான் இத்தாலியின் அயல்நாட்டுக் கொள்கையாக இருந்துவருகிறது.

நான் சென்றிருந்த நேரத்தில் இந்த அரசுக்கு ஒரு நிலையான தன்மை இருக்குமா என்பது



ஐயப்பாட்டிற்கு உரியதாகவே இருந்தது. இந்த நாடு தனது வேளாண்மைப் பொருளாதாரத்தைச் சமன்படுத்தும் வகையில் பல்வேறு துறைகளில் பரந்த தொழிற்சாலை உற்பத்தித் திறனும் கொண்டுள்ளது. இந்த நாட்டின் மொத்த உழைப்புச் சக்தியில் 38.2 சதவிகிதம் வேளாண்மையிலும், 33.1 சதவிகிதம் தொழில் துறையிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. பண்ணைத் தொழில்கள் மத்தியப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் அமைந்துள்ளன. தொழில் வளம் வடக்குப் பகுதியிலே பெரிதும் பெருகியுள்ளது.

இத்தாலிய உழவர்களில் 50 சதவிகிதத்தினர் சராசரி, தலைக்கு 1.2 ஏக்கர் பரப்புடைய சொந்த நிலத்தில் பயிர்த் தொழில் புரிகின்றனர். இத்தாலியத் தொழிற்சாலைத் தொழிலாளர்களில் 76 சதவிகிதம் பேர் சிறு தொழில்களில் அதுவும் இரண்டு பேருக்கு மேற்படாமல் வேலையளிக்கும் தொழில்களில் ஈடுபட்டுள்ளனர். கனரகத் தொழிற்சாலைகள் மிகப் பெரும் அளவில் அமைந்துள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் இந்தத்தொழில் வியப்பூட்டும் வகையில் வளர்ச்சி பெற்றுள்ளது. இந்த நாடு, தனக்கு வேண்டிய இயற்கைப் பொருட்களில் நிலக்கரியை 90 சதவிகிதமும், பெட்ரோலியம், பருத்தி, செம்பு, பாஸ்பேட் கற்கள், கம்பளி, இரும்பு ஆகியவற்றில் மிகப் பெரும் பகுதியையும் இறக்குமதி செய்தாக வேண்டும். இங்கு கந்தகம், பாதரசம், ஈயம், துத்தநாகம், சலவைக் கல் படிவங்கள் வெட்டியெடுக்கப்படும் மிகச்சில கனி வளங்களே உள்ளன.

இந்த நாட்டின் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 2 கோடியே 15 லட்சமாகும். இவர்களில் 1 கோடியே, 90 லட்சம் பேர் தொழிற்சாலைகளில் வேலை செய்கின்றனர். மிச்சம் உள்ளோர் பயிர்த் தொழிலிலும் ஏனைய பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

நான்கு பெரிய தொழிற் சங்கங்கள் இந்த நாட்டில் உண்டு. அவற்றில் மொத்தம் சுமார் 60 லட்சம் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர் என்று மதிப்பிடப்படுகிறது. ஒரு வாரத்தில் ஆறு நாட்கள் தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். ஒரு நாளைக்கு 8 மணி நேரம் அவர்கள் வேலை செய்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு 16 விடுமுறை நாட்கள் உள்ளன. அவற்றில் நான்கு நாட்கள் ஊதியத்துடன் கூடிய விடுமுறை நாட்களாகும். தொழிலாளர்களாக அமர்த்தப்படுவதற்குரிய குறைந்த அளவு வயது 14 ஆகும். மகளிரும், சிறாரும் இரவு நேரப் பணிகளில் ஈடுபடுவது இத்தாலியத் தொழிற்சாலைகளில் தடுக்கப்படுகிறது.

அரசியலிலும், பொருளாதாரத்திலும் தொழில், விவசாயம் ஆகியவற்றிலும் இத்தகு சூழ்நிலைகளைக் கொண்ட இத்தாலி நாட்டில், செம்மன்றம் (ரெட் ஹால்) என்று அழைக்கப்படும் இடத்தில் தான் ரோம் நகராட்சியின் சார்பில் என்னை வரவேற்றுப் பதக்கம் ஒன்றினைப் பரிசாக அளித்தார்கள். செம்மன்றத்தில் கண்ணைப் பறிக்கும் ஓவியங்களும், காலத்தின் கதைகளைச் சொல்லிக் கொண்டிருக்கும் சிற்பங்களும் எங்கள் கவனத்தை ஈர்த்தன. அங்கு தோண்டியெடுக்கப்பட்ட சலவைக் கற்கள் ஏதும் வீணாகவில்லை. அனைத்தும் ஏதாவது ஒரு சில உருவில் நின்று கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

ரோம் நாட்டு வீரர்கள் சந்தித்த போர்க்களங்களையும் அதில் விழுப் புண்களை ஏற்ற வீரமறவர்களையும் செம்மன்றத்தில் மணி மண்டபங்களில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டிருந்த காட்சியை விவரிக்கவே இயலாது. ஒரு பெரும் சுவர் முழுவதும் தீட்டப்பட்டிருந்த போர்க்களக் காட்சி ஒன்றினைக் காணும்போது நாமும் அந்தப் போர்க்களத்தில் ஒரு பகுதியில் நிற்கிறோம் என்ற உணர்வு தான் எனக்கு ஏற்பட்டது. அந்த ஓவியத்தை அப்படியே புகைப் படமாக எடுத்துக் கொண்டு வந்தேன். அதனை அனைவரும் அறிய வெளியிடலாம் என்ற என் ஆசை நிறைவேறவில்லை. காரணம், எத்தனையோ நூற்றுக்கணக்கான புகைப்படங்களுக்கிடையில் அது சிக்கிக் காணாமல் போய் விட்டதோ, அல்லது என்னுடன் வந்தவர்கள் அதனை எங்கு மறதியாக விட்டு விட்டார்களோ தெரியவில்லை.

செம்மன்றத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுச் சற்று நேரம் ரோமாபுரியின் சாலைகளில் நடக்கலாம் என்று தீர்மானித்தோம். நமது தமிழகத்தில் சாலைகளில் தாராளமாக நடந்து செல்வது என்பது எனக்கு முடியாத காரியம் என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஒருவர் கண்ணில் பட்டால் போதும், மளமளவென்று நூற்றுக்கணக்கானோர் என்னைச் சூழ்ந்து கொண்டு அன்பு மழை பொழிய ஆரம்

பித்துவிடுவார்கள் அந்த நிலை, ரோமில் இருக்காது என்ற தைரியத்தில் சாலைகளில் நடந்து சென்றோம். சுதந்திரம் பெற்ற பறவை போல் எனக்கு ஒரு உணர்ச்சி. ஆனால் சற்று நேரத்திற்கெல்லாம் சில பேர் எங்களைச் சூழ்ந்து கொண்டு எங்கள் பின்னே வரத் தொடங்கினார்கள். அடடா, இங்கும் நம்மைத் தெரிந்தவர்கள் இருக்கிறார்களே என்று நான் ஆச்சரியம் அடைந்தேன். மகிழ்ச்சியும் கொண்டேன். ஆனால் அந்த ஆச்சரியமும், மகிழ்ச்சியும் நீண்ட நேரம் நிலைத்து நிற்கவில்லை. காரணம், சூழ்ந்து வந்தவர்கள் என் மனைவியையே ஆர்வத்தோடு பார்த்தார்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன். என் மனைவியின் பொட்டும், புடவையும் அந்த நாட்டு ஆடவர், பெண்டிருக்கு வியப்புக்குரியவைகளாகத்





தோன்றுகின்றன. "பரவாயில்லை! தமிழ்நாட்டில் நான் வெளியில் நின்றால் மக்கள் என்னைப் பார்க்கிறார்கள்; இங்கு எல்லாரும் உன்னைப் பார்க்கிறார்கள்'' என்று என் துணைவியிடம் நான் கூறினேன்.

சில சாலைகளில் நடந்துசென்ற பிறகு மீண்டும் காரில் ஏறி எஃப்.ஏ.ஓ. அலுவலகத்திற்குச் சென்றோம். உணவு, விவசாய முன்னேற்றத்திற்கென அமைந்துள்ள இந்த நிறுவனத்தில் உள்ள அதிகாரிகள் எங்களை வரவேற்று மகிழ்ந்ததோடு அல்லாமல் ஒவ்வொரு அதிகாரியும் என்னிடத்திலே பல கேள்விகளைக் கேட்டு விளக்கங்களைத் தெரிந்து கொள்கிற ஒரு விவாத மன்றத்தையும் அமைத்து விட்டார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றிய டாக்டர் பொதுவால் என்ற பொருளாதார நிபுணர் அங்கு உயர்ந்த அதிகாரியாக இருக்கிறார். எஃப். ஏ. ஓ. நேராகப் பல திட்டங்களுக்குப் பண உதவி செய்ய முடியவில்லை என்றாலும், அகில உலக வங்கியின் மூலமாக விவசாய வளர்ச்சிக்குப் பண உதவி ஏற்பாடு செய்ய முன்வருகிறது என்பதை அவர் விளக்கிச் சொன்னார்.



வட இத்தாலி, பொருளாதாரத் துறையிலே முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்றும், தென் இத்தாலி, பின் தங்கியிருக்கிறது என்றும் ஒரு அதிகாரி கூறியபோது, ''வடக்கும் தெற்கும் எங்கும் இப்படித் தான் இருக்கும் போலிருக்கிறது'' என்று நான் கூறிய பதிலை அனைவரும் சிரிப்பொலியோடு வரவேற்றார்கள்.

அதிகாரிகளில் ஒருவர் இந்திய ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்பட்டு இருப்பதாகக் கூறப்படுவதாகவும், ஒற்றுமையின்மையும், ஏழ்மையும் நீக்க முடியாத பிரச்சினையாகவே இருப்பதாகவும் கூறப்படுவதைக் குறிப்பிட்டு, அது பற்றி என் கருத்தைக் கேட்டார். அதற்கு நான் சொன்ன பதில்: ''இடதுசாரிகளும், வலதுசாரிகளும் தங்களுடைய கொள்கைகளில் அதிதீவிர மோகம் கொண்டிருப்பதால் வறுமை ஒழிப்புச் சற்று சிரமமாக இருக்கிறது. இந்தியாவில் வேற்றுமையில் ஒற்றுமை காணச் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன'' என்பதாகும். இறுதியாக அந்தக் கூட்டத்தில் நான் குறிப்பிட்ட வாசகங்கள்: ''இத்தாலிய அரசில் நிலையான தன்மை இல்லை என்றாலும், பொருளாதார வளர்ச்சி செம்மையாக உள்ளது. ஆனால் இந்தியாவைப் பொறுத்த மட்டில் அந்தப் பொருளாதார வளர்ச்சி செம்மையான வகையில் உள்ளதாக நான் சொல்வதற்கில்லை. அதற்கு இத்தாலி கையாண்டுள்ள வழி முறைகளை இந்தியாவும் பின்பற்றவேண்டும் என்ற கருத்தை இந்திய அரசுக்கு நான் தெரிவிப்பேன்.''

எஃப்.ஏ.ஓ. நிறுவனத்தின் வரவேற்பிற்குப் பிறகு மீண்டும் நகரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம்.

ரோம் நகரத்தில் குடியாட்சிச் சதுக்கம் (ரிபப்ளிக் ஸ்கொயர்) என்ற இடம் மாலை நேரத்தில் கண்டு களிக்க வேண்டிய உற்சாகமிக்க இடங்களில் ஒன்றாகும். அங்கு தான் சித்திரம் எழுதும் ஒரு இளைஞன் எனக்குத் திடீர் நண்பன் ஆனான்.

(தொடரும்).

“எத்தனையோ விழாக்களுக்குத் தலைமை தாங்கியிருக்கிறேனென்றாலும் இந்த விழாவில் தலைமை தாங்குவதில் புதியதோர் உணர்ச்சியும், புதிய மகிழ்ச்சியும் அடைகிறேன்.

சேலம் மாவட்டம் மட்டுமல்ல! செந்தமிழ்த் திருநாடே இன்று பூரிப்பில் ஆழ்ந்திருக்கிறது என்றால் மிகையாகாது!'' என்று குறிப்பிட்டார், தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள்.

*16—9—1970* அன்று சேலம் கரிச்சிப்பட்டியில் நடந்த சேலம் உருக்காலைத் திறப்பு விழா நாலுகோடித் தமிழர்களின் நீண்டகாலக்கனவு நனவானதைக் கொண்டாடும் திருநாள் என்பது அன்று பேசிய முக்கிய பிரமுகர்கள் அனைவரின் பேச்சிலும் எதிரொலித்ததோடு, சேலம் நகரின் வீதி தோறும், நல்லதொருவிளக்கமாய் அமைந்திருந்தது. வழிநெடுகத் தோரணங்கள், அலங்கார வளைவுகள் முக்கிய சாலைகளை அலங்கரித்திருந்தன. மத்தியானம் 2 மணியிலிருந்தே திருவிழாப் பார்க்கச் செல்வது போல் மக்கள் ஆயிரக்கணக்கில் வந்த வண்ணம் இருந்தனர்.

''சேலத்து இரும்பு கண்ட செம்மலே!'' என்று முதல்வரை வரவேற்று நின்றது ஒரு வளைவு. ‘முத்தமிழ்க் காவலரே வருக’ என்றது மற்றொரு வளைவு. இந்தியப் பிரதமரை வரவேற்று நின்றன வேறு சில வளைவுகள்.

''நீராரும் கடலுடுத்த நில மடந்தைக்கெழில் ஒழுகும் சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்'' எனும் தமிழ்ப் பண்ணுடன் அன்றைய விழா தொடங்கியது. இந்தியத்தலைமை அமைச்சர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் உருக்காலையைத் துவக்கி வைப்பதைக் குறிப்பிடும் வகையில், தமிழக அரசின் கோபுரச் சின்னத்தை மத்தியிலே கொண்ட 35 அடி உயர அசோக ஸ்தூபியினைத் திறந்து வைத்தார். இரும்புக் கனியைத் தோண்டுவதைக் குறிக்கும் வகையில் தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள் ஒரு பொத்தானை அழுத்த, கஞ்சமலையில் அதிர் வேட்டு வெடித்து, கனிப் பாறைகள் சுக்கு நூறாகச் சிதறி விழுந்தன.

இரும்புக்கனி தர இதயங் கனிந்ததைப் போற்றும் வகையில், பிரதமருக்கும், முதல்வருக்கும், சேலத்து மாங்கனிகளை (வெள்ளியினால் செய்து தங்க முலாம் பூசப்பட்ட மூன்று மாங்கனிகளை) வழங்கினார், சேலம் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே. ராசாராம்.



இதனைக் குறிப்பிட்டு, விழாத் தலைவரான முதல்வர் பேசும் போது, ''திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தமிழகம் வரும்போதெல்லாம் ஏதாவது புதுமைகள் செய்து விட்டுத் தான் வருவது வழக்கம்.

சென்ற தடவை வங்கிகளைத் தேசியமயமாக்கிவிட்டு வந்தார். இப்போது ராஜ மானியத்தை நிறுத்தி விட்டு வந்திருக்கிறார்.

சென்ற முறை தமிழகத்திற்கு வரட்சி நிவாரணப் பணிகளுக்காக 16 கோடி ரூபாய் தந்தார்.

இப்போது சேலம் இரும்பாலையைத் தந்திருக்கிறார்.

அடுத்த முறை வரும்போதும் தமிழகத்திற்கு ஏதாவது தந்து விட்டு வாருங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.




தமிழக மக்கள் நன்றியுள்ளவர்கள். அதனால்தான் திருச்சியிலிருந்து சேலம் வரும் வரை சுமார் 100 மைல் தூரத்திற்கு வழிநெடுகிலும் லட்சக்கணக்கான மக்கள் கூடி நின்று, இந்தியாவின் பிரதமராம், நேருவின் அன்பு மகளை மலர்கள் தூவி வரவேற்றனர். மலர் மாலைகளைக் குவித்தனர்.

அம்மையாரும் காரிலே கிடந்த மலர்களையும் மலர்மாலைகளையும் மக்கள் மீது தூவித் தனது அன்பை வெளிப்படுத்தினார்.

மலர்களை அள்ளி மக்கள்மீது வீசியதுபோல, கஜானாவிலே இருக்கும் பணத்தை எடுத்துத் தமிழக அரசுப் பக்கம் வீசக்கூடாதா என்று கேட்டுக் கொள்கிறேன். மலர்களெல்லாம் பணமாகக் கூடுமென்றால் உங்களுக்கும் தரக்கூடுமென்று, அம்மையார் கூறக் கூடும்.

தமிழக மக்கள் நன்றி மறவாதவர்கள் என்பதனைக் காலை முதல் மக்கள் காட்டிய வரவேற்பிலிருந்து அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள்.

இந்த சேலம் ஆலையைக் கொண்டு வந்த பெருமையிலே பாதிப் பங்கிற்குச் சொந்தக்காரர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் என்றால் மிகையாகாது. நான் நன்றி உணர்வுடன் அவரையும், முன்னாள் காங்கிரஸ் அரசையும், அன்றைய முதல்வர்கள் திரு. காமராஜர், திரு. பக்தவத்சலம் ஆகியோரையும், எங்களது அண்ணா கற்றுத் தந்த பண்புடன் நன்றி கூறவும், பாராட்டவும் கடமைப் பட்டிருக்கிறேன்.

குறிப்பாகவும் சிறப்பாகவும் இந்தியப் பிரதமருக்கு 4 கோடி தமிழ் மக்கள் சார்பில் நன்றி கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த ஆலையில் எங்களுக்கும் பங்கு இருக்க வேண்டும் என்பதைப் பாரதப்பிரதமரிடம் நினைவு படுத்துகிறேன். இதன் மூலம் பல துணைத்தொழில்கள் உருவாக முடியும். அதற்கான அனுமதிகளை உடனுக்குடன் அளிக்க வேண்டுமென்றும் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கோள்கிறேன்.

இப்போது பிரதமருக்கு மூன்று மாங்கனிகளைத் தந்தார்கள். அவை, சாதாரணப் பொருட்களல்ல! ''கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நிறைந்த தமிழ் மக்களின் இதயத்தைத் தான் அளித்திருக்கிறோம்'' என்று தனது பாராட்டையும், தமிழ் மக்களின் நன்றியுணர்வையும் தெளிவாக—சிறப்பாக எடுத்துரைத்தார், தமிழக முதல்வர்.

தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் பேசும்போது, ''தமிழ் நாட்டின் தொழில்துறை வளர்ச்சியில் இது ஒரு புதிய அத்தியாயம். மக்களின் கனவு உண்மையிலேயே இன்று நிறைவேறி விட்டது'' என்றார்.

தமிழகத் தொழிலமைச்சர் திரு. மாதவன் அவர்கள் பேசுகையில் ''உருக்கு, தேவையான அளவு இல்லாத காரணத்தால் தமிழகத்தில் பல சிறு தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இருக்கும் இரும்புக் கனிகளும் வெளிநாட்டுக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தமிழகத்தில், தொழில் நுணுக்கப்பொறியாளர்கள், டிப்ளமா பெற்றோர் ஆகியோர் சுமார் 15,000 பேர்கள் வேலை வாய்ப்பின்றி இருக்கின்றனர். படித்த இளைஞர்கள் மூன்றரை லட்சம் பேர் வேலையின்றி இருக்கின்றனர்.

நிறையத் தொழில்கள் ஏற்பட்டால் இந்த நிலை மாறும். கச்சாப்பொருட்கள் இல்லாமையும், மைய அரசிடம் தொழில்களுக்கான உரிமம் (லைசென்ஸ்) பெறுவதிலுள்ள சிரமம் ஆகியவையே இதற்கு இடையூறாக அமைந்துள்ளன.

இந்த இரும்பாலையைத் தனி வாரியத்தின் கீழ்க் கொண்டுவரும் படியும், இதில் தமிழகத்திற்குப் பங்கு தரும்படியும் கேட்டுக் கொள்ளுகிறேன்'' என்று கூறினார்.

இரும்பாலையைத் துவக்கி வைத்தபிரதமர்திருமதி இந்திரா காந்தி அவர்கள் பேசியதாவது :

'' தமிழ் நாட்டிற்கு இது மிக முக்கியமான நாள். மக்கள் மத்தியில் உள்ள பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதோடு நாட்டிலுள்ள வெவ்வேறு பகுதிகளிலுள்ள ஏற்றத்தாழ்வுகளையும் நீக்குவதும் முக்கியமானதாகும்.



கடும்பணி புரியும் தொழிலாளர்கள்

நிர்வாகம்-தொழிலாளர் ஆகியோரிடையே நல்ல ஒத்துழைப்பு இருந்தால்தான் உலகிலேயே நாம் உருக்கு உற்பத்தியில் முன்னணியில் நிற்க முடியும்.

சேலம்உருக்காலையில் உற்பத்தி செய்யப்படும் உருக்கு, இந்த மாநிலம் மட்டுமின்றி நாடு முழுவதின் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவும்.

இந்த ஆலையின் மூலம் மக்களுக்கு ஒளி மயமான எதிர்காலம் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறேன்!'' என்று வாழ்த்தினர்.

சேலத்து மாங்கனிபோல், சேலத்து இரும்பும் பார் புகழப் பெற்றது; வரலாற்றுச் சிறப்பு மிக்கது. இதனை விழாவிற்கு வருகை தந்திருந்த லட்சக்கணக்கான மக்களுக்கு எடுத்துரைத்தார், தமிழக முதல்வர். ''இந்தியாவுக்குப் படையெடுத்து வந்த அலெக்சாண்டர் மன்னருக்கு, அவரிடம் தோல்வி கண்ட மன்னன் போரஸ் ஒரு வீரவாள் தந்தானென்றும், அந்த வீரவாள் சேலத்து இரும்பால் செய்தது, மிக்க வலிமை வாய்ந்தது என்றும் டாக்டர் பாலிகா குறிப்பிட்டிருக்கிருர்'' என்ற வரலாற்று உண்மையினை எடுத்துக் கூறினர், முதல்வர்.

மாவீரன் அலெக்சாண்டரின் வீரத்திற்கு அணிகலனுக அமைந்திட்ட வாளினை உருவாக்க உதவிய சேலத்து இரும்புக்கனி வளம் பற்றி அப்பகுதி மக்கள் நூறு ஆண்டுகளுக்கு மேலாகவே அறிந்திருந்தனர். 19-ஆம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் அங்கு வாழ்ந்த அருணுசலம் ஆசாரி என்பவர் இரும்புக் கனிகளை உருக்கி, அதிலிருந்து மண் வெட்டி, அரிவாள் போன்ற மக்களின் அன்றுடத் தேவைக்கான பல இரும்புக்கருவிகளைச் செய்து வந்துள்ளார்.

தமிழகம் வந்த பல வெள்ளையர்களையும் சேலத்து இரும்புக் கனி கவர்ந்தது. கிழக்கிந்தியக்கம்பெனியில் அதிகாரியாகப் பணியாற்றியதிரு.ஜோசய்யாமார்ஷல் ஹித் சேலத்துக் கனிப்பாறைகளிலிருந்து இரும்பு தயாரிக்கலாமென்பதைக் கண்டறிந்தார். 1830-ல் போர்டோ நோவா இரும்பு-உருக்கு நிறுவனம் என்ற தொழிற்சாலை திரு. ஹித் அவர்களின் முயற்சியால் தொடங்கப் பட்டது. அங்கு உருக்கப்பட்ட இரும்பிலிருந்து 1850-ல் கட்டப்பட்ட இரும்பு ரெயில்வே பாலம் இன்றும் இங்கிலாந்து நாட்டில் எஃகு போன்ற உறுதியுடன் உள்ளது என்று கூறப்படுகிறது. ஆனல் இந்த நிறுவனம் 1866-ல் மூடப்பட்டு விட்டது.

இதுதான் கனி வளமிக்க கஞ்சமலை





வெடி வைத்துத் தகர்க்கப்பட்ட இரும்புக்கனி படிந்துள்ள கற்கள்.

அதைத் தொடர்ந்து பல ஆண்டுகளாக, இந்தக் கனிவளத்தினைப் பயன்படுத்த ஆராய்ச்சிகள் பல நடந்தன. இத்திட்டம் பற்றி ஆய்ந்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி திரு. தஸ்தூர் அண்ட் கம்பெனியை மைய அரசு பணித்தது. 'பேசிக்' என்ற ஆங்கில அமெரிக்க உருக்குப் பணிகள் நிறுவனம் உருக்காலைக்குத் தகுந்த இடம் எது என்று ஆய்ந்தது.

ஆனால், சேலம் உருக்காலைத் திட்டம் முழு உருப்பெறாமல் ஆய்விலேயே கானல்நீர் போல் போய்க்கொண்டிருப்பதைக் கண்ணுற்ற இன்றையத் தமிழக அரசு இத்திட்டத்தினை விரைவில் செயல்படுத்த மைய அரசை இடையறாது வலியுறுத்தி வந்தது. அதன் பலனாக 1970 ஏப்ரல் திங்கள் 17-ம் நாள், பாராளுமன்றத்தில், சேலம் உருக்காலைத் திட்டம் நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறும் என்ற நற்செய்தியைப் பிரதமர் இந்திரா காந்தி அறிவித்தார். அதன் தொடர் நிகழ்ச்சியாகத் தான் மேலே குறிப்பிட்ட விழா நடைபெற்றது.

110 கோடி ரூபாய் செலவில் நிறுவப்படவிருக்கும் இந்த உருக்காலை, முதல் கட்டத்தில் ஆண்டுக்கு 5லட்சம் டன்னில் தொடங்கிப் பின்னர், படிப்படியாக 10 லட்சம் டன்னுக்கு உயர்ந்து, இறுதியில் ஆண்டுக்கு 30 லட்சம் டன் உருக்கு தயாரிக்கும் நிலையினை எய்தும்.

கனிவளம் நிறைந்த கஞ்சமலை சேலத்திலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. 4 மைல் நீளமும் 2 மைல் அகலமும், 3,000 அடி உயரமும் உள்ள இந்த மலையில் சுமார் 14 கோடியே 40 லட்சம் டன் இரும்புக் கனிகள் பாறையாகப் படிந்து கிடக்கின்றன.

அதிலிருந்து சுமார் 50 கிலோ மீட்டர் சுற்றுவட்டாரத்திலுள்ள கொடுமலை, தீர்த்தமலைப் பகுதிகளில் சுமார் 17 கோடி டன் இரும்புக்கனிகளும், பெருமலை, ராசிபுரம், நாமக்கல் பகுதியில் சுமார் 19 கோடி டன் கனிகளும் பரந்து கிடப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே தமிழகத்தில் சுமார் 50 கோடி டன் இரும்புக் கனிவளம் உள்ளது எனலாம். இவை சுமார் 150 ஆண்டுகள் வரை தோண்டி எடுக்கும் அளவிற்கு உள்ளன.

பாறைகளை உடைத்து இரும்பை உருக்கி எடுப்பதற்குப் பழுப்பு நிலக்கரி, சுண்ணாம்புக்கல், பாக்சைட், மாக்னசைட், மாங்கனீஸ், பென்டோ னைட், நீர், மின்சாரம் ஆகியவை தேவை.

இதில், பழுப்பு நிலக்கரி, நெய்வேலியிலிருந்து கிடைக்கிறது. சுண்ணாம்புக்கல், பாக்சைட், மாக்னசைட், ஆகியவை சேலம் மாவட்டப் பகுதிகளிலேயே ஏராளமாக உள்ளன. தேவையான தண்ணீரை அருகிலேயுள்ள மேட்டூர் அணையிலிருந்து பெறலாம். இதற்குத் தேவையான 97 மெகவாட் மின்சாரத்தை சென்னை மின் உற்பத்தி நிலையத்திலிருந்து பெற முடியும்.

மாங்கனீசை மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த தமுக்காரிலிருந்தும் பென்டோனைட்டை ராஜஸ்தானிலிருந்தும் பெறலாம்.

உருக்காலை நிறுவ ஏழு இடங்களை ஆய்வு செய்ததில் கஞ்சமலைப் பகுதியே மிகவும் பொருத்தமுள்ளதாக அமைந்தது. ஏனெனில் மற்றப் பகுதிகளைவிட இது குறைந்த செலவில் எல்லாப் பொருட்களையும் கொண்டு வரவும், தயாரித்த உருக்கினைத் தேவையுள்ள தென்னகப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லவும் மையப்பகுதியாக அமைந்துள்ளதே காரணம்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே சேலம் உருக்காலைக்குத்தான் போக்குவரத்துச் செலவு மிகவும் குறைவாகயிருக்குமென்று கணக்கிடப்பட்டுள்ளது.

ஏற்கனவேயுள்ள உருக்காலைகளில் ரூர்கேலா உருக்காலையில் 1 டன் உருக்கினைத் தயாரிக்க 880 கிலோ மீட்டருக்குப் போக்குவரத்துச் செலவாகிறது. துர்க்காபூர் உருக்காலைக்கு 881 கிலோ மீட்டரும், பொக்காராவிற்கு 842 கிலோ மீட்டரும், பிலாய்க்கு 1,617 கிலோ மீட்டரும் தேவை.

அதேபோல் இனித் தொடங்கவிருக்கும் உருக்காலைகளில், விசாகப்பட்டினம் ஆலைக்கு 3,090 கிலோ மீட்டரும், ஹாஸ்பெட் ஆலைக்கு 3,298 கிலோ மீட்டரும் கோவாவிற்கு 4,216 கிலோமீட்டரும் ஆகும்.

ஆனால் சேலம் இரும்பாலைக்கு 116 கிலோ மீட்டர் அளவே போக்குவரத்து தூரமாகும். மற்ற எல்லா உருக்காலைகளையும் கணக்கிடும்போது இதற்காகும் போக்குவரத்துச்செலவுகள் மிகவும்குறைவாகும். சேலத்தில் மீட்டர்கேஜ், பிராட்கேஜ் ஆகிய இருரெயில்வே வசதிகளும் உள்ளது மற்றொரு சிறப்பாகும்,

ஞ்சமலையில் கிடைக்கும் இரும்புத் தாதுக்களில் பாஸ்பரசும், கந்தகமும் மிகவும் குறைந்த அளவில் உள்ளன. இவ்வகையில் அமைந்திருப்பது தனித்தன்மையுள்ள உருக்கினைத் தயாரிக்க (Special Steel) மிகவும் உகந்தது. இந்த உருக்கு,கார்கள், உந்துகள்தயாரிக்கவும், கார் பாகங்கள் தயாரிக்கவும், ராணுவத் தேவைகளுக்கான பொருட்களைத் தயாரிக்கவும் மிகவும் உகந்தது. தற்போது நமது நாட்டில் இத்தகைய பொருட்களின் உற்பத்தி மிகவும் தேவைப்பட்டவொன்றாக இருப்பதால், இவ்வகை உருக்கு மிக இன்றியமையாத தேவையாக உள்ளது.

ரூர்கேலாவிலுள்ள ஆலை, தட்டையான பொருட்களும், குழாய்களும் தயாரிக்க உதவுகிறது.

பிலாய் ஆலையின் மூலம் ரெயில் தண்டவாளங்கள், கம்பிகளுக்கான தேவைகள் பூர்த்திசெய்யப்படுகின்றன.

இவ்வாறு வெவ்வேறு பகுதியிலுள்ள ஆலைகள் மாறுபட்ட தன்மையுள்ளதாக உள்ளன. எனவே சேலம் உருக்காலையில் தயாராகும் உருக்கிற்குக் கணிசமான தேவையிருக்கும்.

இத்திட்டம் தொழில் துறையினையும் பொருளாதாரத்தையும் பெரிதும் மாற்றி அமைக்க உதவும். எஃகுத் தொழிலின் வளர்ச்சியினைப்பொறுத்தே பிறதொழில்களின் வளர்ச்சியும் உள்ளது. ஏனைய தொழில்களின் வளர்ச்சிக்கு, இரும்பு எஃகு ஆலைகளின் வளர்ச்சி பெரிதும் துணை நிற்கிறது. இரும்பாலை பிற தொழில்களை வளப்படுத்துகிறது. பிற தொழில்களைப் பயன்படுத்தித் தன்னையும் வளர்த்துக் கொள்கிறது. தொழில்கள்ஒன்றுக்கொன்று உறுதுணை புரிகின்றன. அதற்கு இரும்பும் எஃகும் துணை நிற்கின்றன.

இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் நிகழ்த்திய தொழிலாராய்ச்சியில், பிற தொழில்களைப்பெருக்கும் பேராற்றல் இரும்பாலைகளுக்கே உள்ளது என்பது உறுதி செய்யப்பட்டது. வளர்ந்து வரும் நாடுகள், வளர வேண்டிய நாடுகள் அனைத்தும் இரும்பு எஃகுத் தொழிலின் முதன்மையினை உணர்ந்து, அதில் பேரார்வம் காட்டுகின்றன. இதன் முதன்மையினை உணர்ந்து தென் அமெரிக்காவிலுள்ள பெரு, கொலம்பியா போன்ற நாடுகள், சுட்ட நிலக்கரி போன்ற மூலப் பொருட்கள் இல்லாத நிலையிலும் எஃகுத் தொழிலைத் தொடங்கத் திட்டமிட்டன. இழப்பு ஏற்படும் என்ற ஐயப்பாடான நிலையிலும் கூட எஃகாலைகளைத் தொடங்கி விட்டன. பிலிப்பைன்ஸ், இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான், சிரியாபோன்ற வளர்ந்து வரும் நாடுகள் உள்நாட்டிலேயே எஃகுத் தொழிலை வளர்த்து வருகின்றன;

தொழிற்சாலை, குடியிருப்பு நகரம், ரெயில்வே சைடிங், துணைத் தொழில்கள் ஆகியவை சேர்ந்து சுமார் 16,000 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படவிருக்கும் சேலம் உருக்காலையில் 5,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். எந்தத் தொழில் துவக்க வேண்டுமென்றாலும், அதன் அடிப்படை உருக்கு. தொழில்கள் பல்கிப் பெருக உருக்கு மிகவும் இன்றியமையாததாகும்.

பொதுவாக உருக்காலையில் ஒரு தொழிலாளிக்கு வேலை வாய்ப்பு ஏற்படுமானால், உருக்கைச்சார்ந்து தோன்றும் துணைத் தொழில்கள் மூலம் பத்து முதல் பதினைந்து பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். எனவே உருக்காலை மூலம்5,000பேர்களுக்கும்,துணைத் தொழில்களின்மூலம் நாடெங்கும் சுமார் 50,000 பேருக்கு மேலும் வேலை தரவிருக்கும் இந்த சேலம் உருக்காலை.

இந்திய நிபுணர்களாலேயே அமைக்கப்படவிருக்கும் சேலம் உருக்காலை, இந்தியாவிலேயே மிக சிறந்த ஆலையாக அமையும்என்று நம்பப்படுகிறது. மத்திய அரசின் இரும்பு எஃகு அமைச்சர் திரு. பா. ரா. பகத் அவர்கள் குறிப்பிட்டது போல ''தமிழக மக்களுக்கே உரித்தான திறமை, ஒழுங்கு ஆகியவற்றுடன் இந்த முயற்சி முழு வெற்றியடையுமென்பதில் சிறிதும் ஐயப்பாடில்லை.''

எதிர் காலத் தமிழகத்தின் தொழில்வளர்ச்சிக்குத்தக்கதோர் சுரங்கமாக, சேலம் இரும்பாலை அமைந்திருக்கிறது. தமிழக மக்களுக்கு சேலம் இரும்பாலை பிறந்த சேதி,கரும்பாக இனிக்கும் என்பதில் ஐயமில்லை.

கனிப் பாறைகளை உடைக்க வெடி வைக்கிறார்கள்.



# கதர் - கிராமத் தொழில்கள்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலைவாய்ப்பளிக்கின்றன

தமிழ் நாட்டுக் கதர் - கிராமத்தொழில் வாரியத்தின் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற பற்பல கைநுட்பப் பொருள்கள்.

கதர் கிராமத் தொழில்களை ஆதரிப்பது உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

கதர் ~ கதர்ப்பட்டு
சோப்பு ~ தேன்
செக்கெண்ணெய்
தோல்பொருள்கள்
பனைவெல்லம் சர்க்கரை
மண்பாண்டம் ~ வார்ப்படங்கள்
பனைபொருள்கள்
பித்தளை. வெண்கலப்
பாத்திரங்கள்

மேலும்
பற்பல கைநுட்பப் பொருள்கள்

கதர் கிராமத்தொழில்
விற்பனை நிலையங்களில்
கிடைக்கும்.

வெளியீடு:

## கதர் கிராமத் தொழில் துறை

உ, சர் தேசிகாச்சாரி ரோடு சென்னை - 4.

# புதுயுகம் பிறந்தது!

வளர்ந்து வரும் தென்னகத்தில் தொழில் வளர்ச்சிக்கு, சேலம் இரும்பாலை பெரும் வாய்ப்பினை உருவாக்குகிறது. இந்தியாவிலுள்ள பிற இரும்பாலைகளைவிட, சேலம் இரும்பாலை குறைந்த செலவில் பொருள் பெருக்கும் வாய்ப்புடையது. உயர்தரப் பொருட்களை உற்பத்தி செய்வதற்குரிய மூலப் பொருட்கள் கிடைக்கின்றன.

ஒரு கனிச் சுரங்கத்தின் பயனும் சிறப்பும் நாம் அதனைப் பயன் படுத்தும் விதத்தைப் பொறுத்துள்ளது. கனி வளத்தை எடுக்கும் முறையும், உருக்கும் முறையுமே ஒரு கனிச் சுரங்கத்தின் லாப, நட்டத்தைப் பெருக்குவதாகும். ஒரு முறையில் உருக்கும் போது கனிவளம் நமக்கு லாபமாக அமையலாம். வேறு முறையில் அது இழப்புக்கு இடமளிக்கலாம். அமெரிக்காவில் தாழ்ந்த ரகக் கனி வளமுடைய சுரங்கங்கள் கூட இரும்பு உற்பத்திக்குப் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

சிறு தொழில்கள் மட்டுமல்ல ; திட்டங்களின் அடிப்படையான பொறியியல் தொழில்களும் வளர்ச்சியடையும் யந்திர சாதனங்களின் பாகங்களை உற்பத்தி செய்யப் பொறியியல் தொழில்கள் இன்றியமையாதவை.

1961-ல் தொழில் பொருளாதார மதிப்பீட்டுக் குழுவினரால் சிபாரிசு செய்யப்பட்ட பொறியியல் தொழில்களில் சில, உருக்கு வார்ப்புத் தொழில், உருக்கு உலைக்களம், கலப்பு உலோகக் கருவி உற்பத்தி, தனி எஃகுத் தொழில் போன்றவையாகும்.

உருக்கி உருமாற்றத்தக்க இரும்பு வார்ப்புக்கள் மிகவும் தேவைப்படுகின்றன. இருப்புப் பாதை, பேருந்து, தந்தி, மின்சாரம் போன்ற பல்வேறு துறைகளுக்கும் தேவைப்படும் இரும்பு வார்ப்புகள் ஆண்டொன்றுக்கு ஏழாயிரம் முதல் எண்ணாயிரம் டன்களாகும். நாள்தோறும் 10 டன் வீதம் வார்ப்பு இரும்பு உற்பத்தி செய்யப்படுமானால்- நம் மாநிலத்தின் தேவை நிறைவேறும். சேலம்-நெய்வேலி பகுதிகளில் இதற்குரிய தொழிலைத் துவக்கலாம்.

தனி உருக்கு, கலப்பு உலோகக் கருவிகள் 9000 டன் தேவைப்படுகின்றன. தற்சமயம் இவை பெரும்பாலும் பிற நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. தமிழ்நாடு மட்டும் ஆண்டு தோறும் 15 லட்ச ரூபாய்க்கு 280 டன் தனி உருக்கு இறக்குமதி செய்கிறது. கலப்பு உலோகத் தொழில் ஒன்று சேலம்-நெய்வேலிப் பகுதியில் தொடங்கப்பட்டால், தமிழகத்தின் தேவையோடு இந்தியா முழுமைக்கான தேவையினையும் நிறைவேற்றி, பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் துணை புரியும். நினைவுக் கெட்டாத காலம் முதல் கிரேக்க ரோமானிய எகிப்திய நாட்டவர்க்கு நம் சேலம் இத்தகைய தரமான எஃகினை வழங்கி வந்திருக்கிறது என்பது நானிலம் அறிந்த உண்மை. மூன்று கோடி ரூபாய் செலவில் 2000 டன் உற்பத்திக்கான ஆலை ஒன்றைத் தொடங்கலாம்.

சாம்பல் நிற இரும்பு வார்ப்புகள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பெரிய வகை, நடுத்தர வகை, சிறிய வகை என மூன்று வகைகள். பெரிய வகைக்கான தொழிலைச் சென்னையிலும், நடுத்தர சிறிய வகைக்குரிய தொழிலைக் கோயம்புத்தூரிலும் தொடங்கலாம்.

இருப்புப்பாதை, பேருந்துகள் ஆகிய வற்றுக்குத் தேவைப்படும் எஃகு வார்ப்புகள் பேரளவு பிற நாடுகளிலிருந்து

# புன்னகை மலர்ந்தது!

# தொழில்யுகம் எழுந்தது!

இறக்குமதி செய்யப்படுகின்றன. இத்துறை இந்தியா தன் தேவையை உள்நாட்டிலேயே நிறைவேற்றிக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை இருப்புப்பாதைத் தளவாடக் குழு வலியுறுத்தியுள்ளது. இருப்புப் பாதைத் துறையின் தேவை ஆண்டு தோறும் 42,000 டன் எஃகு ஆகும். இந்தியாவில் கிடைப்பது 31,000 டன்களே. ஆகவே, மேலும் 13,000 டன் உற்பத்திக்கான தொழிலைச் சேலம் பொறியியல் பகுதியில் ஏற்படுத்தலாம்.

1962–63-ல் நாட்டுக்குத் தேவைப்படும் எஃகு வார்ப்பு 85,000 டன்னாக இருக்கும் என்று கணிக்கப்பட்டது. ஆகவே, 1,58,000 டன் உற்பத்தி செய்யும் தொழில் ஒன்றைச் சேலம்-நெய்வேலிப் பகுதியில் ஏற்படுத்துவதற்குத் தக்க திட்டம் உருவாகும்.

தேசிய நடைமுறைப் பொருளாதார ஆய்வுக் குழு, ஆண்டுக்கு 6,000 டன் எஃகு வார்ப்பு உற்பத்திக்கான ஏற்பாட்டை வலியுறுத்தியது. நாளடைவில் அதைப் பெருக்கிக் கொள்ளலாம். மேலும், யந்திரங்கள், ஊர்திகள், சைக்கிள், ஸ்கூட்டர் ஆகியவற்றின் தேவைகளை நிறைவேற்றுவது பற்றிப் பின்னர் திட்டமிடப்படும்.

யந்திரக் கருவிகள், நெசவாலைக் கருவிகள், அலுமினியத் தொழில், மின் துறைக் கருவிகள், குழாய்கள், மின் காப்புக் கருவிகள் போன்ற பலவற்றை உருவாக்கும் தொழில்களைப் பெருக்குவதற்கு வாய்ப்பு உள்ளது. டீஸல் யந்திரங்கள், சர்க்கரை ஆலைகளுக்குரிய யந்திரங்கள், விவசாயத்திற்குரிய யந்திரங்கள் ஆகிய பலவும் இங்கேயே உருவாக்கப்பட வேண்டும் என்று பொருளாதாரக் குழு பரிந்துரை கூறியுள்ளது.

மாநிலத்தில் பொறியியல் தொழில் வளர்ச்சி பெருகுவதற்கு வார்ப்பு உலைக் களங்கள் இல்லாமையே காரணம் என்று தேசியக்குழு தெரிவித்துள்ளது. இத்தகைய தடைகளை நீக்கும் வகையில் எஃகு வார்ப்புகள், கலப்பு உலோக வார்ப்புகள் போன்றவை ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்குச் சேலம் பெரிதும் துணை நிற்கும் என்றும் கோவையும் சென்னையும் சில வகைகளில் துணையாகும் என்றும் தேசியக் குழு கருதுகிறது.

சேலம் இரும்பாலை மட்டுமல்லாமல் சேலத்திலும், கோவையிலும் வார்ப்பிரும்புக் கூடங்கள் அமைக்கப்பட வேண்டுமெனத் தேசியக்குழு கருதுகிறது. தொழில்களைப் பரவலாக்குவது சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும் என்று தேசியக் குழு கருதுகிறது. தென்னகத்தின் மாஞ்செஸ்டர் ஆகிவிட்ட கோவையைப் புறக்கணிக்க முடியாதெனவும் குழு கருதுகிறது. அதன் அண்டை மாவட்டம் இயற்கை வளத்தைப் பெருக்கிவருவதால், கோவையில், அடிப்படையான பொறியியல் தொழில்கள் பல தோற்றுவிக்கப்படல் வேண்டும்.

தமிழ்நாட்டில் சேலம் மாவட்டம் தொழில் வாய்ப்புகளை மிகுதியாகக் கொண்டுள்ளது. அதற்கான இயற்கை வளம் சேலத்தில் தேங்கிக் கிடக்கிறது. இத்தகைய வளங் கொழிக்கும் சேலம், நெய்வேலிப் பகுதி தமிழகத்தின் ரூர்கேலாவாகி விடலாம்; ஆக வேண்டும்.

பல்வேறு தொழில்களுக்குத் தேவைப்படும் பல வகை எஃகு வார்ப்புகளை ஆக்கும் உலைக் களங்கள் பல சேலத்தில் ஏற்படவேண்டும்.

# துயர்யுகம் தொலைந்தது!

# கதரிலும் முதலிடம்

“ [illegible]றுக்கு முறிய நெய்த கதராடை—கும்பிக்
கொதிப்பை அடக்கி நெய்த கதராடை
மறுத்திதைத் தள்ளாமல் வாங்குவீரே—எங்கள்
வயிற்றின் பசிதணியச் செய்குவீரே ”

என்ற கவிமணியின் கவிதைமணி ஓசை வானொலியின் வாயிலாக அக்டோபர் இரண்டாம் நாள் காற்றிலே மிதந்து வந்து கருத்தைக் கவர்கின்றது. சின்னஞ் சிறிய இழைகளை இணைத்து வண்ண ஆடை ஆக்குவது போலச் சிதறிக்கிடந்த இந்திய மக்களைச் சாதியாலும் சமயத்தாலும் பிளவுபட்டுக் கிடந்த இந்திய மக்களை ஒன்றாய் இணைக்க நாமிருக்கும் நாடு நமதென்பதனை உணர்த்த, ஒன்று பட்டாலுண்டு வாழ்வு என்பதனைத் தெளிவிக்கக் காந்தியடிகள் கையாண்ட சுதேசி இயக்கத்தின் முதற் கருவி கதர் இயக்கமே. ‘‘ ஆடுராட்டே சுழன்றாடு ராட்டே ’’ என்ற பாட்டுடன் இல்லங்களில் எல்லாம் இராட்டினங்கள் இயங்கின. மாதரார் கரத்திலும் மற்றையோர் கரங்களிலும் ராட்டினம் தவழ்ந்தன. அந்நிய உடை அணிதல் அடிமை மோகத்தின் அடிப்படை என்பதை உணர்ந்த அண்ணல் காந்தி இந்திய நாட்டுப் பொருள்களையே பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தை மக்கள் மனத்திலே எழுப்பினார். மக்களது மானத்தைக் காக்கும் உடைக்கும் மாற்றாரை எதிர்பார்த்து நிற்றல் நாணத்தக்க நிலையல்லவா என்பதை எடுத்துக் காட்டினார்.

சுதந்தர தாகம் மக்கள் மனத்தே பொங்கி எழும்பியது ; விடுதலை வேட்கை கொழுந்து விட்டு வளர்ந்தது ; விடுதலை, விடுதலை என்பது வீட்டிலும் நாட்டிலும் முழங்கியது ; பட்டி தொட்டிகளிலும் அது பரந்தது. இச்சூழ்நிலையில் அகில இந்திய அடிப்படையில் கதர் இயக்கம் செழித்தோங்கி வளர்ந்தது.

தென்னகப் பெரியார் ஈ. வெ. ரா., பேரறிஞர் அண்ணா, தமிழ்த்தென்றல் திரு. வி. க., கவிஞர் பாரதி போன்ற பெருமக்களும் கதர் இயக்கத்திற்கு ஆதரவு காட்டினர்.

நாடு விடுதலை பெற்றது ; காங்கிரஸ் ஆட்சி மத்திய அரசிலும் மற்ற மாநிலங்களிலும் காலூன்றியது ; எனினும் இந்தியத் துணைக் கண்டத்தில் அரசுத்துறைகளுள் ஒன்றாகவே கதர்த்துறையையும் முதன் முதலாக அமைத்த பெருமை தமிழகத்தையே சாரும். அண்ணல் காந்தியடிகளின் ஆசியுடன் 1947-ம் ஆண்டு தமிழக அரசு கதர்த் துறையைத் துவக்கியது.

கடந்த இருபதாண்டுக் காலத்தில் கதர்த் தொழில் தமிழகத்தே படிப்படியாக வளர்ந்தோங்கி வந்திருக்கிறது ; சிற்றூர்களில் வாழும் ஆயிரமாயிரம் ஏழை மக்களுக்குத் தொழில் வாய்ப்பை இத்துறை வழங்கி வருகிறது. உழவர்கள் தம் ஓய்வு நேரத்தே ஊதியம் தேடி வாழ்வை வளப்படுத்தக் கதர்த் தொழில் உதவுகிறது.

சோம்பியிராமல், பொன்னான பொழுதை வீணாகப் போக்காமல், சுறுசுறுப்புடன் பல்லாயிரவர் வாழ்த்துத், துணை வருவாய் பெறக் கதர்த் தொழில் பயன்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்த வரை, இன்று எழுபத்து ஒன்பதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் நூற்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். கதர்த் துணி நெசவாளர்களோ ஏறக்குறைய நாலாயிரவராவர். இவ்வாறு நூற்று நெய்யப்பட்ட கதர்த்துணிகளை மக்களுக்கு வழங்க 169 விற்பனை நிலையங்கள் மாவட்டமெங்கும் பணியாற்றுகின்றன. தமிழகத்தில் உற்பத்தியிலும் விற்பனையிலும் முன்னணியில் நிற்பது குமரனை ஈன்ற கோவை மாவட்டமே.

தமிழகத்தே காங்கிரஸ் ஆட்சி மாறியது ; அண்ணாவின் தமிழரசு அமைந்தது ; காந்தியார் வகுத்த கதர்த் திட்டம் என்னாகுமோ எனக் கலங்கினர் சிலர் ; ஏழைகளின் துயர் துடைக்கும் அண்ணா பாமரர்களின் தோழரான பேரறிஞர் அண்ணா, பல்லாயிரக் கணக்கானவர்க்கு வாழ்வளிக்கும் கதர்த் தொழிலுக்கு முன்னைய அரசைவிட ஊக்கமும் ஆக்கமும் முன்வந்து அளித்தார். அறிஞர் அண்ணாவும் அவரது அரசியல் தந்தை பெரியாரும் கட்டி வளர்த்த கதர்த் தொழிலைத் தமிழக அரசு மேலும் போற்றி வளர்க்கத் தலைப்பட்டது. 10 லட்ச ரூபாய் மானியமும் வழங்கியது. இந்த 1970-ம் ஆண்டைய தீபாவளியிலே சுமார் மூன்று கோடி ரூபாய்க்குக் கதர்த்துணி விற்பனையாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது கதர்த்துறையில் வெற்றி மேல் வெற்றியல்லவா ?

தமிழக மக்களின் தேவை கதர்த் துணியைப் பொறுத்தவரையில்நாள்தோறும் பெருகிவருகிறது. இங்கு உற்பத்தி செய்யும் துணிகள் போதவில்லை ; எனவே, உத்திரப்பிரதேசம், மைசூர் முதலிய இடங்களிலிருந்து கதர்த் துணிகள் வாங்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

நூற்கும் தொழிலாளர் நாளொன்றுக்குச் சராசரி ரூ. 2 ஊதியம் பெறுகின்றார் ; நெய்வோர் பெறும் சராசரி நாள் ஊதியம் ரூ. 5.

பஞ்சால் ஆக்கப்படும் கதர்த்துணிகளுடன் கதர்ப் பட்டும் உற்பத்தி செய்யப்படுகின்றது. கடந்த தீபாவளியின் போது ரூபாய் அறுபது லட்சத்திற்கும் மேற்பட்ட கதர்ப்பட்டு விற்பனையாயிற்று. தமிழகத்திற்கு வாழ்வளிக்கும் சீரிய தொழில்களிலே கதர் உற்பத்தியும் ஒன்றென்பதை நாம் மறந்து விடலாகாது.

காந்தியடிகளின் நினைவாக, ஏழைகளுக்கு வாழ்வளிக்கும் கதர்த் தொழிலுக்கு ஊக்கமும் ஆக்கமும் ஊட்டும் வகையில் கதர்-கைத்தொழில் வாரம் கொண்டாடுவது மட்டற்ற மகிழ்ச்சி ; கதர்த் தொழில் வளர உதவுவது மக்கள் கடமை.






குறிப்பு.—அரசினர் விவரத் தொகுப்புச் சுவடி (Gazette) ஒன்றிலிருந்து இச் செய்தி எடுக்கப்பட்டது.

பேர்வாய்ந்த பீலிப்பென்பான் பெற்ற மைந்தன்,
  பெருமைமிகும், அலெக்சாண்டர் என்ற வீரன்
சீர்வாய்ந்த புசாபெலிஸ் குதிரை யேறிச்
  சென்றிட்டான் சினத்தீயைக் கண்ணில் தேக்கி,
நீர்சூழ்ந்த சிற்றுசியா- சிரியா, சோலை
  நிழல்கிடைக்கா நாடான பாலத் தீனம்,
யார்கண்டும் பிரமிக்கும் பிரமிட் நாடாம்
  இறவாத புகழ்கொண்ட எகிப்தும் வென்றான் !

வென்றவனே ஆப்கானித் தானம் சென்றான் !
  வீரத்தை ஆங்காங்கே விளைத்து வந்தான் !
அன்றவனே படைத்தலைவன் தன்னை நோக்கி,
  '' அடுத்தபடித் துருக்கியரை வீழ்த்த வேண்டும் ;
நின்றபடி மரமிருக்கும் ; நீயும் நானும்
  நீள்மரமா நின்றிருக்க ? '' என்றே அந்தக்
குன்றுநிகர் தோள்குலுங்கக் கொதித்தான், '' என்றன்
  குறிக்கோளே பொங்குகங்கைக் கரைதான் '' என்றான்.

"வருகின்றான் அலெக்சாண்டர் கைபர் தாண்டி
  வரவேற்போம் நா"மென்றே விரைந்தான் அம்பி.
''வருகின்றான் வருகின்றான் பகைவன் என்றால்
  வரவேற்க ஓடுவதோ வீரம் ! நம்வாள்
தருகின்ற வரும்படியைப் பெறட்டும், இந்தத்
  தரையின்மேல் அவன்தலையோ உருண்டோ டட்டும்,
எருவாக அவனுடலின் எலும்பும் தோலும்
  இங்கேயே புதையட்டும் !" என்றான் போரஸ்.

பொருதுவதே போராகும், பொருத்த முள்ளோர்
  பொருதுதலே அதற்குரிய சட்ட மாகும்.
விருதுபெற வெற்றிபெற வேண்டும் என்றே
  வீணாக நெறிதவறிப் புரிகின் றார்போர் !
கருதிடுக வீரமிதே யென்றால் ; கள்ளன்
  கருக்கிருட்டில் திருடுவதும் தீரம் தானே !
பெருகிவரும் எண்ணமெனும் சுமையால் போரஸ்
  பிடித்திருந்த வாள்விட்டான் பிடிபட் டானே !

# செய்திட்ட போர்வாள்

புலவர் கரந்தை கணேசன்




நொடிப்போதில் நடந்துவிட்ட நிகழ்ச்சிக் காக
நூறுமுறை துடிதுடித்தான் மான மன்னன்!
துடித்தென்ன? விழிப்பின்றேல் வீழ்ச்சி யுண்டே!
சூட்டுக்கோல் பகைமறவர் சூழ்ந்தார் நன்றே!
"பிடிபட்டாய் என்றாலும் போரஸ் உன்றன்
பேராற்றல் படையுடைக்கும் ஆற்றல் கண்டேன்,
பிடிபட்டேன் அதனுள்ளே! அடியேன் சொல்வேன்,
பெரும்பகைவன் யெனினும்நீ வீரன்!'' என்றான்.

இடியேறு போல்வந்த இலைவேல் வீரர்;
எதிர்வைத்தார், 'இவன்வாளும் முடியும்' என்றார்.
"முடிமோகம் என்தாகம்'' என்றே சொல்லி
முடியதனை அவனெடுத்துப் பார்த்தான்; வைத்தான்!
கடிதாக அவன்கரங்கள் வாளைத் தூக்கிக்
கண்முன்னே நிறுத்திடவே, நின்று போனான்!
நெடிதாக அவ்வாளின் நுனியைத் தொட்டான்!
நெஞ்சத்தில் வியப்பேற வினாவைத் தொட்டான்!

"செய்திறனால் இதுபெரிதாம், வடித்து வார்த்த
செயல்நுட்பம் நூதனமாம், உறுதி ஒன்றே
பொய்த்திறனே இதிலில்லை யென்று கூறும்
பொய்யல்ல என்வாளும் இதன்முன் இல்லை!
மெய்யமையச் சொல்வாய்நீ; கேட்கின் றேன்நான்!
மேதினியில் எங்கிதனைப் பெற்றாய்?'' என்றான்.
"பொய்யெனவே என்புகழைப் புதைத்து விட்டு
புகழ்கின்றாய்; வாள்பற்றிப் புகலென் கின்றாய்!

தெற்குண்டு, தென்றல்சூழ் மன்ற லுண்டு
திசையுண்ட தமிழுண்டு, தெளிவு முண்டு,
நெற்குன்றம் பலவுண்டு, நேர்த்தி யுண்டு,
நெருப்புக்கண் வீரர்வழி நிலையாய் உண்டு,
சொற்குன்றாச் சுவைப்புலவர் பாட லுண்டு,
சொல்வேன்யான் தமிழ்நாடாம் அதன்பேர்; ஆங்கே,
கற்குன்றம் சூழ்ந்திருக்கும் சேர ளத்தில்
கஞ்சமலை இரும்பெடுத்து வடித்த'' தென்றான்!

சேரளம்—தற்காலச் சேலமே அக்காலச் சேரளமாகும்




# எல்லோரும் விரும்புவது,
# மேன்மையானது, முதன்மையானது

அசோக் லேலண்ட் காமெட்...பயணிகள் போக்குவரத்திற்கு. இந்தியா முழுவதும் அரசினர் போக்குவரத்து நிர்வாகங்கள், மற்ற போக்குவரத்து நிர்வாக உரிமையாளர்கள் விரும்பித் தேர்ந்தெடுப்பது.

**சிறப்பான காரணங்கள்**

அடிக்கடி நிறுத்திச் செல்வதாயிருந்தாலும் நெடுந்தூரம் செல்வதாயிருந்தாலும். ஏற்படும் பளுவைச் சுலபமாக சமாளிக்கிறது.
அதன் பூரண ஏர்ப்ரேக்குகள் பத்திரமாகவும் உடனடியாகவும் நிறுத்த வகை செய்யும். பராமரிப்புச் செலவு மிக குறைவு...மாற்று உறுப்புகளின் தேவை சொற்பம்...பழுதுகள் ஏற்படுவதில்லை. எண்ணைச் செலவில் மிகச் சிக்கனம்.
இப்போது அறிவீர்கள்...அது சக்தி மிக்க, பத்திரமான வண்டி என்பதையும் அதிக பளு ஏற்றிச்செல்ல சளைக்காதது என்பதையும்.

**இதையே வாங்குங்கள். ஓர் அணியையே உருவாக்குங்கள். இதற்காக வருந்தமாட்டீர்கள்**

**வன்மை...நம்பகம்...சிக்கனம்**

**உள்ள**

# அசோக் லேலாண்ட் காமெட்

ASHOK TRUCKS BUSES LEYLAND

தயாரிப்போர்: அசோக் லேலண்ட் லிமிடட், எண்ணூர், சென்னை 57

AL-5003 Rev

# இரும்பின் கதை

— மு. காணிமுத்து —

இன்றை நாளில் எத்துறைக்கும் இன்றியமையாப் பொருள்களாக இருந்து வருவன இரும்பும் அதன் கலவையான எஃகும் ஆகும். மனிதனின் கற்காலம் முடிந்ததுமே எஃகின் கதை இந் நிலவுலகில் தொடங்கிவிட்டது எனலாம். இரும்பை அடிப்படையாகக் கொண்டு எழுந்த சிறந்த கலப்பு உலோகமாக இன்று எஃகு திகழ்கிறது. குழம்பாக உலையிலிருந்து வடிக்கப்படும் எஃகு இன்று அழகுக் கோபுரங்களாக, வியப்பை வாரியிறைக்கும் விந்தைப் பாலங்களாக, வானளாவும் கட்டடங்களைத் தாங்கும் விட்டங்களாக, பல தரப்பட்ட கருவிகளாக, எண்ணிலடங்காப் பொருட்களின் மூலமாக உருவெடுத்திருக்கிறது. இத்தகு முக்கியத்துவத்தைப் பெற்ற எஃகு, ஆண்டு ஒன்றுக்குச் சுமார் 26,00,00,000 டன், உலகத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

உலோகங்கள் எல்லாவற்றிலும் எஃகு நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையை மிகுதியாக உடையது. கண்ணாடியை அறுக்குமளவுக்குக் கடினப் பொருளாகவும், காகிதங்களைக் கோக்க உதவும் மடிப்புக் கம்பி போன்ற மெல்லிய பொருளாகவும் பயன்படுகிறது. மோட்டார் கார்களின் வில் அச்சைப் போன்ற நெகிழும் தரத்திலும், புகைவண்டிச் சக்கரத்தைப்போல் கடினமான தரத்திலும் எஃகு உற்பத்தி செய்யப்படுகிறது.

இரும்பையும் எஃகையும் மனிதன் எங்கு, எப்பொழுது, எவ்வாறு கண்டுபிடித்தான் என்று வரையறுத்துக் கூற இயலாத அளவுக்கு அவற்றின் வரலாறு தொன்மை பயப்பதாய் இருக்கிறது. இதன் தொடக்கம் பற்றிய செய்திகள் அங்கொன்றும், இங்கொன்றுமாகக் கிடைக்கிறதேயன்றித் தொடர்பாகக் கிடைக்க வில்லை. என்றாலும் பழம் பெரும் நாகரிகங்களின் தொட்டிலாக விளங்கிய நாடுகளெல்லாம் இரும்பைப் பயன்படுத்தி வந்திருக்கின்றன என்ற உண்மை மட்டும் வலிவு பெற்று நிற்கிறது.

கி.மு. 500-க்கு முன்பே இரும்பிலிருந்து எஃகு செய்யும் வழியை தூரக் கிழக்கு நாடுகள் அறிந்திருந்தன என்று தற்காலத்திய சரித்திர ஆசிரியர்கள் உறுதியாக நம்புகின்றனர். மண்ணுக்கடியிலிருந்த இரும்பை மனித சமுதாயத்திற்குப் பயன்படுத்திய பெருமை தமிழகத்தைச் சார்ந்ததாகும். வளம் கொழிக்கும் பொன்னி நதிக்கரையில் அமைந்திருக்கும் திருச்சிராப்பள்ளியில் தமிழன் இரும்பை எஃகாக மாற்றி உலகநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெருமை எய்தினான் என்று கி.மு.384-ல் வாழ்ந்த அரிஸ்டாட்டில் தன் நூல்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழகத்து எஃகு பல நூற்றாண்டுகளாகப் புகழ் பரப்பி நின்றது. டமாஸ்கஸ், டொலிடோ போன்ற நகரத்து வணிகர்கள் தமிழகத்து எஃகை வாங்கிச் சென்று கீர்த்தி மிக்க டெமாஸ்தனிஸ் வாட்களைச் செய்ததாகச் சரித்திரம் பறை சாற்றுகிறது. ஏறத்தாழ 16ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் இவ் வாணிபம் செழிப்பாக நடைபெற்று வந்திருக்கிறது. குறிப்பிட்ட வெப்ப நிலையில் வாளை வெப்பப்படுத்தித் தண்ணீரில் குறிப்பிட்ட நேரம் அவித்தால் வாளின் ஓரத்தில் கடினமும், நீல நிறமும் தோன்றும். இந் நீல நிறம் பற்றித்தான் ''டெமாசின்'' என்ற சொல்லே தோன்றியது. ''டெமாசின்'' என்றால் நீல நிறமுடைய ஓரத்தைக் கொண்ட உறுதியான வாள் என்று பொருளாகும். இத்தகு சிறப்பான முறையை மேல்நாட்டவர்கள் தமிழர்களிடமிருந்து கற்றுக் கொண்டார்கள். இம்முறையின் போக்குகளைப் பற்றித்தான் அரிஸ்டாட்டில் தன் நூல்களில் குறிப்பிட்டிருக்கிறார். இம்முறையில் செய்யப்பட்ட வாட்கள் பிடியும், நுனியும் ஒன்றாகச் சேருமளவுக்கு வளைக்கவும், அதே போழ்து மிகச் சிறந்த பதமான ஓரத்தைக் கொண்டதாகவும் இருந்தன. இக்காலத்தில் கூட அத்தகைய பதமான வாட்களைச் செய்ய இயலாது எனப் பொறியியல் வல்லார் கருதுகின்றனர்.

அக்காலத்தில் வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களைக் காட்டிலும் எஃகுதான் மிகவும் மதிப்புள்ள உலோகமாகக் கருதப்பட்டது. தமிழகம் பிற நாடுகளோடு கொண்ட பண்டமாற்று வணிகத்தில் எஃகு பெரும் பங்கு வகித்தது. தமிழகத்து எஃகினால் செய்யப்பட்ட அறுவை மருத்துவக் கருவிகள் மிகவும் புகழ் வாய்ந்தவை என்று கி.மு. 400-க்கும் கி.மு. 300-க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்ட மருத்துவ நூல்கள் காட்டுகின்றன.

''ஸ்டீல்'' என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொருள் ''நிலைத்தது'', ''உறுதியானது'' என்பதாகும். தொடக்கக்காலத்திலிருந்தே எஃகு, மனித வாழ்க்கையில் தொடர்புகொண்டிருந்தது என்ற உண்மையை இது வலியுறுத்துவதாக இருக்கிறது. கி.மு. 6000-லிருந்து கி.மு. 5000 ஆண்டுக்குள் செய்யப்பட்ட எஃகுப் பொருட்களும், கட்டில்களும் எகிப்து நாட்டில் கண்டுபிடிக்கப் பட்டாலும் அக்காலத்தில் எஃகு பெரும்பாலும் அணி, மணிகள் செய்யக் கூடிய உலோகமாகவே பயன் பட்டது.

திறந்த கணப்பு முறை 1862-ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மின்சாரம் கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் மின் உலை மூலம் எஃகு செய்யப்பட்டது.

இவ்வாறு பல புகழ்ச்சிக்குரிய வரலாற்று வரிகளைக் கொண்ட இரும்பு தமிழகத்தில் சேலம் மாவட்டம் சேர்வராயன் மலைத் தொடர்களில் படர்ந்து கிடக்கிறது. நெய்வேலி நிலக்கரியும், சேர்வராயன்மலை இரும்பும் எதிர்காலத்தில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்குப்பெருந்துணை புரியும் என்பதில் நமக்கு நல்ல நம்பிக்கையுண்டு.

"ஏ புள்ளே! செங்கமலம்! அங்கே ஏன் வாய் பார்த்துக்கிட்டு நிற்கிறே! சட்சட்னு செங்கல்களை அள்ளிக் கொலுத்துக்கார் கிட்டே கொடு!......என்ன. சிலுவை முத்து, அது என்ன பனை வெல்லம்னு நினைச்சியா, இரண்டு தட்டுதட்டினு நொறுங்கிப்போக. அது யந்திரச் சூளை செய்த கல்லு அய்யா! உன் சாந்துக் கரண்டிதான் உடையுமே ஒழிய செங்கல்லு உடையாது! ஆமாம்....!''

''அது என்ன சாமி, அதிசயச் செங்கல், உடையாத செங்கல்!"

'' வாங்க! வாங்க! ஹெட் கிளார்க் அய்யா வாங்க! எங்கே இந்த வெயிலிலே சைக்கிளில் கிளம்பிட்டீங்க?''

'' கோடம்பாக்கம் புதூரிலே வீடு கட்டலாம்னு உத்தேசம்! அதுக்காக அலைஞ்சிகிட்டிருக்கேன்! ஆமா...... உடையாத செங்கல்னு சொன்னீங்களே! அது என்ன?''

'' அதுவா, ந்து... முதலில் உங்க காலடியிலே கிடக்கிற செங்கல்லைத் தூக்கிப் பாருங்க!''

'' அடேயப்பா எவ்வளவு கனம்!"

'' ஆமாம் மூன்றரைக்கிலோ எடை! சாதாரணச் செங்கல்லை விட 10 மடங்கு அதிகப் பலமுள்ள செங்கல் அது!''

''நல்ல சரக்குத்தான் எங்கே வாங்கினீங்க?''

'' திருமழிசையிலே அரசாங்க யந்திரச் செங்கல் தொழிற்சாலையிருக்கு. அங்கே வாங்கினேன்!''

'' என்ன சாமி காது குத்துறீங்க! அரசாங்கச் செங்கல் சூளையா?''

'' பேப்பர் படிச்சாத்தானே உலக விஷயம் தெரியும். வீட்டை விட்டா ஆபீசு! ஆபீசிலிருந்து சைக்கிளை மிதிச்சா வீடு! சொல்றேன் கேட்டுக்குங்க. அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் இருக்காருல்லே, அவரு 1968 ஏப்ரலில் அதைத் துவக்கி வைச்சாரு! யூகோசுலாவியாவிலேயிருந்து வந்த யந்திரத்தை வைச்சு சுமார் 75 லட்ச ரூபாய் முதலீடு போட்டுத் தமிழ் நாடு அரசு துவங்கியதுதாங்க இந்தத் தொழிற்சாலை. நவீன முறையிலே, அங்கே செங்கல் தயாரிக்கிறாங்க. ஒரு நாளைக்கு சுமார் 66,000 செங்கல் தயாரிக்கலாம். இதுவரைக்கும் 176 லட்சம் செங்கல் தயாரிச்சிருக்காங்க. பதினாறேகால் லட்சம் ரூபாய்க்கு விற்பனை ஆகியுள்ளது. அது மட்டுமல்ல, இன்னும் கொஞ்ச நாளிலே இதே மாதிரி இன்னொரு செங்கல் தொழிற்சாலையையும் தமிழக அரசு துவக்கப் போறாங்களாம்!''

'' அது சரி சாமி! விலை எப்படி?''

'' ரொம்ப மலிவு; ஆயிரத்துக்கு 90 ரூபாய்!''

'' அதை எப்படிச் சாமி மலிவுன்னு சொல்றீங்க! வெளிச் செங்கல்களெல்லாம் ரூ. 80 85-க்கும் கம்மியாத்தானே விற்குது!"

'' அங்கேதான் இருக்கு விஷயம்! நான் அப்ப சொன்னேனே இது ரொம்பப் பலமான செங்கல்னு! சாதாரணச் செங்கல்கள் ஒரு சதுர அங்குலத்திற்கு 120 பவுண்டு பாரத்தைத்தான் தாங்கக் கூடியது! ஆனா யந்திரச் செங்கல் 6,000 பவுண்டைத் தாங்கும். இது நல்லா பலமா இருக்கிறதனாலே, சில சுவர்களுக்கு மற்றச் செங்கல்கள் ஒன்றரையோ, அல்லது 2 செங்கல் பத்தியோ வைப்பதற்குப் பதில் இதில் ஒரு பத்தி வைச்சால் போதும். அதோட இந்தச் செங்கலுக்கு உட்பக்கம் மட்டும் சிமிண்டோ சாந்தோ பூசினால் போதும். ! வெளிப் பக்கம் பூசவே தேவையில்லை!''

'' நீங்க ஒரு பக்கம் சாமி! வெளிப்பக்கம் பூசாக்காட்டி வீடு அழகாவேயிருக்காதே!"



'' நீங்கதான் ஒரு கர்நாடகப் பேர்வழி! உலகத்திலேயே வேறு எந்த நாடுகளிலும் செங்கல் சுவர் மீது சாந்து பூசுவதே கிடையாது தெரியுமா ? அழகு கெட்டிடும்னு அப்படியே விட்டு விடுவாங்க! நம்ம ஊரிலேதான் செங்கல் சுவர் மீதும் பூசறுங்க! ஆனு சாதாரண செங்கல்களுக்கு அது தேவையாயிருக்கலாம் ! யந்திரத்தில் செய்த செங்கலுக்கு அது ' தேவையில்லே ! அதோடே மாடர்ன் கட்டிடக் கலேயின் அழகே அப்படியே வெளியே பூசாமே விடுறதுதான் அய்யா! சந்தேகமிருந்தா அண்ணு நகரிலே பெரிய அதிகாரிங்க கட்டுறுங்களே, அந்த வீட்டைப் போய்ப் பாருங்க ! பாதி வீடுகளிலே செங்கல்லேச் சுற்றி ஒரு ' ஒயிட் லேன் ' அடிச்சிருப்பாங்க அவ்வளவுதான் ! அது வீட்டின் அழகைப் பிரமாதமா தூக்கிக் காட்டும் !

''அப்போ மலிவுதாங்கிறீங்க''

'' ஆமா அய்யான்னு ! எட்டுக்கு ஒரு பங்கு மீதம் ஆகும் இந்தச் செங்கல்லேப் பயன்படுத்தினு ! அதாவது மற்றச் செங்கல்களேப் பயன்படுத்தினு 8,000 ரூபாய் ஆனு இதில் 7,000 ரூபாய்க்கே கட்டிடலாம்.''

என்ன செங்கமலம் ! மச்சான் கிட்டே கொஞ்சறே! கல்யாணம் பண்ணினதுக்கு அப்புறம் கொஞ்சலாம் ! இப்போ வேலேயைக் கவனி ! வெயிலேறுமுன்னுலே கிடுகிடுண்ணு நடக்கட்டும் !''

'' ஆமா, ஒரு சந்தேகம் ! இந்தச் செங்கல்களே யாராவது இதுக்கு முந்தி வாங்கிப் பயன்படுத்தியிருக்காங்களா ? நீங்கதான் முதலிலேயா?........''

''கல்பாக்கம் அணு மின்சார நிலேயம் இருக்குதில்லா, அதற்கு வாங்கியிருக்கிறுங்க. அரக்கோணம் தமிழ் நாடு அரசாங்கத் தொழிற்சாலேக்கு வாங்கியிருக்காங்க. இப்படி அரசாங்கம், தனியாருன்னு பலபேர் வாங்குறுங்க. இப்போ கைவசம் 4½ லட்சம் செங்கல் இருக்கு. ஆனு ஆர்டர் எவ்வளவுக்கு வந்திருக்கு தெரியுமா ? ஐந்து லட்சத்துக்கு வந்திருக்கு ! நல்ல கிராக்கி !''

'' கிராக்கி வந்தா விலேயைக் கூட்டிடுவாங்க இல்லேயா ?''

'' ஊகூம் ! இந்தத் தொழிற்சாலேயை அரசாங்கம் துவக்கியதன் நோக்கமே, செங்கல் விலேயைக் கட்டுப்படுத்தணுங்கறத்துக்குத்தான். நீங்க போனுலும் ஒரே விலேதான். உங்க பையனே அனுப்பினுலும் ஒரே விலேதான் !''

'' எனக்குப் பையன் இல்லேயே ! அவ்வளவும் பொண்ணுங்கதான் ! ''

'' அடடா ஒரு பேச்சுக்குச் சொன்னேங்க ! ''

''அது சரி இந்த செங்கல் தொழிற்சாலேயை நீங்க பார்த்திருக்கீங்களா ?

'' நான் நேரிலே போய்தானே ஆர்டர் கொடுத்தேன் ! பிரமாண்டமா இருக்கு !''

'' எப்படி வேலே நடக்குது !''

'' முதலில் களியைத் தோண்டி எடுத்து தனி ரெயிலில் (சிறிய டீசெல் ரெயில்) தொழிற்சாலேக்கு எடுத்து வாருங்க ! அப்புறம் அதை மணலோடு கலந்து யந்திரங்களில் கொட்டுறுங்க ! அது மணலேயும் களியையும் கலந்து நன்ருக அரைச்சுச் செங்கல்லா அறுத்து அனுப்புது. அதை மூன்று நாட்கள் காய வைக்கிறுங்க ! அப்புறம் காளவாய்க்குள்ளே கொண்டு போய் வைக்கிறுங்க ! அங்கே எட்டு நாட்கள் சுட்ட பின் வெளியே கொண்டு வர்ருங்க ! முக்கால் வாசி வேலேகள் யந்திரத்தினுலேயே நடக்கின்றன.''

'' ஒரே ரகச் செங்கல்தானு?''

'' மூன்று ரகம். ஒண்ணு 9 அங்குல நீளம், நாலரை அங்குல அகலம், மூன்று அங்குலஉயரம். அடுத்தது 190 மில்லி மீட்டர் நீளம், 90 மில்லி மீட்டர் அகலம், 90 மில்லி மீட்டர் உயரம் உள்ளது. இன்னொரு வகை சற்றுக் கனம் குறைந்தவை. அவை மாடிகள் கட்டுவதற்காகத் தயாரிக்கப்படுகின்றன. அதுபோக மஞ்சள், சிவப்பு, மண் நிறம், நீலம், பச்சை இப்படிப் பல நிறங்களிலும் செங்கல் தயாரிக்கத் திட்டம் போட்டிருக்காங்க. மாதிரி செங்கல்களேப் பார்த்தேன். அற்புதமாக இருக்கு ! அடுத்த வருடம் அதைத் தயாரிக்கப் போருங்களாம். வீட்டின் முன்புறப் பகுதிகளே அலங்கரிக்க அவை பிரமாதமாக இருக்கும்.!''

'' இந்தத் தொழிற்சாலே எந்தப் பக்கம் இருக்குன்னீங்க ?''

'' திருமழிசையில் இருக்கு. சென்னேயிலிருந்து 16 மைல் இருக்கும். பூந்தமல்லியிலேயே இருந்து 2 மைல் தொலேவில் செம்பரம்பாக்கம் ரோட்டு மேலே இருக்குது.''

'' ஆமா, அவ்வளவு தூரத்திலே இருந்து கொண்டு வர வண்டி வசதி ?''

'' அதைப்பற்றிக் கவலேயை விடுங்க ! அவங்களே லாரி வைச்சிருக்காங்க. அதோடே காண்டிராக்ட் லாரிகளும் ஏற்பாடு பண்ணித் தருவாங்க. எல்லாம் நியாயமான கூலிதான் !''

''நீங்க சொன்னதைக் கேட்டப்புறம் என் வீடு கட்டக்கூட இந்த அரசாங்க யந்திரச் செங்கல்லேத்தான் வாங்கணும்னு முடிவு பண்ணிட்டேன் ! அப்புறம் நான் வரட்டுங்களா ?''

'' போயிட்டு வாங்க. வணக்கம் !''

'' வணக்கம் !''



நர்ஸ் ! என்ன இது ! இந்த 'பெட்' காலியாயிருக்கு ! ஆபரேஷன் செய்றதுக்காக வந்திருந்த அந்த பேஷன்ட் எங்கே போயிருக்கிறுரு ?

ஒண்ணுமில்லே டாக்டர் ! இதுதான் நீங்க செய்யப்போற முதல் ஆபரேஷன்னு சொன்னேன்....அவ்வளவுதான் அந்த மனுஷர் ஓடியே போயிட்டாரு !


குறளகம்
சென்னை.1
கதர்-கைத்தொழில் அங்காடி
தொலைபேசி எண்கள்: 26762 21552 21553
கைவண்ணப் பொருள்களின் களஞ்சியம்
உங்களுக்கு வேண்டிய எல்லாமே இங்கே கிடைக்கும்

## திருவேங்கடம் பேசுகிருர் :

நான் கனவிலும் நினேக்கவே இல்லே! இப்ப நினேச்சாக் கூட, கனவு மாதிரி என் கண் முன்னே நிழலாடுது!

இந்தத் தொழிலுக்கு நான் வந்து சேர்ந்து பதினேரு வருசம் ஆகுது. நான் முதலில் டாக்சி டிரைவரா சேர்ந்தப்போ, வருங்காலத்தில் சொந்தத்தில் ஒரு டாக்சி வாங்குவேன்னு நினேச்சுப் பார்த்தது கூடக் கிடையாது. அவ்வளவு ஏழ்மை! தரித்திரமான நிலேமை!

''டாக்சி டிரைவர்னு அவனுக்கென்ன? தினம் பத்து ரூபாய் சம்பாதிக்கிருன்! மாதம் 300 ரூபாய்க்குக் குறைவில்லே!'' என்று சாதாரணமா பொது மக்கள் எங்களேப்பற்றி நினேக்கிருங்க. அது ஒரு தப்பான கணக்குங்க!

மாதத்திலே எனக்குப் பன்னிரெண்டு அல்லது பதின்மூன்று நாள்தான் டாக்சி டிரைவர் வேலே கிடைக்கும். ஒரு நாளேக்குப் பத்து ரூபாய் வீதம் மாதம் 120, 130 சம்பாதிப்பேன். காலேயிலே வண்டியிலே ஏறி உட்கார்ந்தா இரவு பத்து மணி வரை வேலே இருக்கும். ஒரே பேஜாரு. வேளா வேளேக்குச் சாப்பிட முடியாது. பார்க்கிற ஒட்டலில் ஏதாவது தின்னு வைக்கணும். அந்த வகையில் தினம் ஐந்து, ஆறு ரூபாய் போயிடும். வீட்டுக்குப் போய்ச் சேரும் போது 4 ரூபாய் தான் கையிலே இருக்கும். ஆக 120 ரூபாய் சம்பாதித்தாலும் வீட்டுக்கு மாதம் சேருவது சுமார் 60 அல்லது 65 ரூபாய்தான்.

ஏன் இப்படீன்னு கேட்பீங்க. சென்னேயிலே சுமார் 2,000 டாக்சிகள் இருக்கின்றன. ஆனல் டிரைவர்கள் சுமார் 17,000பேர் இருக்கிருர்கள். வெளியே கார் ஓட்டிக்கிட்டு இருக்கிற டிரைவருக்கு, திடீர்னு டாக்சி ஓட்டணுங்கிற ஆசை வந்திடும். எங்க முதலாளிங்களும் உடனே புது டிரைவருங்களேப் போட்டுடுவாங்க. அதனல் எங்களுக்கு மாதம் முழுசும் வேலே கிடைப்பதில்லே.

இப்படி ஒரு மோசமான நிலேமையில் வாழ்ந்தேன். எனக்கு மனேவியும் இரண்டு பெண்களும் இருக்கிருங்க. அவங்களுக்குச் சரியாச் சாப்பாடு போட முடியாமே, துணி மணி வாங்கிக் கொடுக்காமே திண்டாடிக்கிட்டிருந்தேன். வாழ்க்கை முழுசும் இப்படியே நரகமா வாழ வேண்டியது தான என்று வெறுப்பாயிருந்தது.

முன்பு திரு. என். வி. நடராசன் அவர்கள் எங்க சங்கத்திற்குத் தலேவரா வந்ததும் ஒரு புதுத்திட்டம் கொண்டு வந்தாரு! அதுதான் டாக்சி டிரைவர்கள் தவணே முறையில் டாக்சி வாங்கும் திட்டம். கூட்டுறவு முறையில் இந்தக் கார்களே வாங்கி டிரைவர்களுக்குக் கொடுக்கலாம்னு அண்ணு தீட்டிய திட்டம் அது. இந்தத் திட்டத்தின் மீது கலேஞர் கருணுநிதியும் (அப்போ அவரு பொதுப் பணி அமைச்சரா இருந்தாரு) என். வி. என். னும் ரொம்ப அக்கறை காட்டினுங்க. ஏன், இப்பக் கூட, திரு. என். வி. என். எங்களே மறக்கலீங்க. அவர் அமைச்சருன்னே நினேக்க மாட்டாரு. திடுதிப்புன்னு எங்களேப் பற்றியும் சங்கத்தைப் பற்றியும் விசாரிப்பாரு. உரிமையோடே விரட்டுவாரு. மிரட்டுவாரு.

அவர் முயற்சியினுலே துவக்கப்பட்ட இந்தத் திட்டம், டாக்சி டிரைவர்களாகிய எங்கள் அனேவருக்கும் புது வாழ்வையும் புதிய நம்பிக்கையையும் கொடுத்திருக்குதுங்க.

இந்தத் திட்டப்படி முதலில் 'டாக்சி டிரைவர் கூட்டுறவு சங்க'த்திற்கு ரூபாய் 3,000 கட்டணும். உடனே நமக்கு புது ஃபியட் டாக்சி ஒண்ணு தந்திடுவாங்க. அப்புறம் தினம் தினம் தவணேத் தொகையைக் கட்டி 60 மாதத்துக்குள் மொத்தத் தொகையையும் அடைச்சுடணும்.

இந்தத் திட்டத்தைப் பற்றிக் கேள்விப் பட்டதும் எனக்கு இதில் சேர்ந்து சொந்த டாக்சி வாங்க மிகவும் ஆசையாக இருந்தது. ஆனல் பணத்திற்கு எங்கே போவது? நான் கையைப் பிசைந்தேன்!

என்னுடைய கஷ்டத்தை உணர்ந்த எங்க அப்பா—அவர் ரெயில்வேயில் கூலியா வேலே பார்க்கிருர்—அவரு கஷ்டப்



பட்டுச் சேர்த்த பணம் ஆயிரம் ரூபாயை எனக்குத் தந்தார். நான் முதலில் அதைக் கொண்டு வந்து சங்கத்தில் கட்டினேன். அப்புறம் சிறுகச்சிறுக மிச்சம் பிடித்து மீதி இரண்டாயிரம் ரூபாயையும் கட்டினேன்.



1970-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6-ம் நாள் என் வாழ் நாளிலேயே மறக்க முடியாத பொன்னான நாள். அன்று தான் நம்ம முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் எனக்கும் என் போன்ற தோழர்களுக்கும் எங்கள் சங்கச் சார்பிலே 25 புத்தம் புதிய ஃபியட் டாக்சிகளை வழங்கினார். எனக்கும் ஒரு டாக்சியை-எனக்கென்று சொந்த டாக்சியை வழங்கினார்.

அது மட்டுமா, அன்று டாக்சிகளை வழங்கியதும் ஒரு டாக்சியிலே ஏறிச் சவாரி செய்தாரே, அது என்னுடைய டாக்சிதாங்க! முதலமைச்சரை அருகில் வைத்து ஓட்டிச் செல்வதற்கு எனக்குக் கிடைத்த பாக்கியத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதுங்க.

இப்போ நான் வெறும் டாக்சி டிரைவர் இல்லீங்க. எனக்குன்னு ஒரு சொந்த டாக்சி இருக்கிறது. எனது மூன்றாவது பெண் அது. ஆமா, என் பெண் போல-கண் போல அதைப் பாவிக்கிறேன், நான்.

முன்பெல்லாம் மாதம் பன்னிரண்டு, பதின்மூன்று நாள்தானே வேலை இருக்கும்னு சொன்னேன். இப்போ மாதம் 5 நாள் லீவு எடுத்துக்கிறேன். மீதி 25 நாள் வேலை இருக்கு. 25 நாட்களும் தினம் நான் தவணைப்பணம் கட்டியது போக மீதி 10 ரூபாய் கிடைக்கும். ஆக மாதம் ரூ. 250 கிடைக்குது. அதோடு மாதம் ஆக ஆக, தவணைத் தொகை தானாகக் குறையும்; எனவே போகப் போக இன்னும் அதிகத் தொகை கிடைக்கும்.

ஐந்து நாள் லீவு எடுப்பேன்னு சொன்னேனே! அப்போ வண்டி சும்மா தூங்காதுங்க. வண்டி வாங்காத மற்ற உறுப்பினர்களுக்கு என் வண்டியைக் கொடுப்பேன்.

வண்டி வாங்காத உறுப்பினர்கள் என்று சொன்னேனே! ஆமாம். எங்கள் கூட்டுறவுச் சங்கத்தில் மொத்தம் 135 பேர்கள் உறுப்பினர்கள். இன்னும் 100 பேர் ரிசர்வ் பட்டியலில் இருக்கிறார்கள். இதுவரை நாற்பது பேருக்கு டாக்சிகள் வழங்கப்பட்டுள்ளன. (15 பழைய டாக்சிகள்) அடுத்த மாதம் இன்னும் 25 புதிய ஃபியட் டாக்சிகள் வருகின்றன. 1971 முடிவதற்குள் சுமார் 250 டாக்சிகள் அதாவது எல்லா உறுப்பினர்களுக்கும் வழங்கத் திட்டம் போட்டிருக்கிறார்கள், எங்களது கூட்டுறவுச் சங்க வளர்ச்சிக்காக அல்லும் பகலும் பாடுபடும் தலைவர் ஜி. நீலமேகமும் துணைத்தலைவர் ராமலிங்கமும். டாக்சிகள் வாங்குவதற்குத் தேவையான பணத்தை, கூட்டுறவு வங்கி கடனாகக் கொடுத்து உதவுகிறது. வெறும் டாக்சி டிரைவர்களாக இருந்த எங்களை டாக்சி சொந்தக்காரர்களாக்கிய புரட்சித் திட்டமிது.

தினம் தினம் டாக்சியை எடுக்கும்போது என் மனம் அன்புத் தெய்வம் அண்ணாவை நினைவு கூர்கிறது. தந்தையைப் போன்ற பரிவுடன் எங்கள் நல்வாழ்வைப் பேணும் கலைஞரையும், திரு என். வி. நடராசனையும் நினைக்கின்றது. நன்றி உணர்வால் என் நெஞ்சம் நிறைகின்றது.

## தமிழகத்துச் சிலைமீது வெளிநாட்டார் மோகம்!

தமிழகத்துச் சிற்பக்கலைக்கும், செயல் திறனுக்கும் பழங்காலந் தொட்டுச் சிறப்புண்டு. ரோமாபுரி வணிகர்கள், தமிழகத்திலிருந்து முத்துடன், வரலாற்றுச் சின்னமான சிலைகளையும் விருப்பமுடன், வாங்கிச் சென்றதாகச் சரித்திரம் கூறுகிறது. அந்தப் பழம் பெருமையை இன்றும் காக்கிறது தமிழகம்.

வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக, 'ப்ரான்ஜ்' (Bronze) என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் வெண்கல உலோகத்தில் செய்யப்பட்ட 400 சிலைகளைத் தனக்கு அனுப்பும்படி ''இந்திய ஏற்றுமதி அபிவிருத்திக் கழகம்'' தமிழக அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளது.

வெளி நாடுகளில் நடைபெற்ற உலோகச் சிலைக் கண்காட்சிகள், இந்தச் சிலை ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்திருக்கின்றன. இந்தத் தகவலைத் தமிழகச் சட்டத் துறை அமைச்சர், திரு. மாதவன் அண்மையில் சட்டமன்றக் கூட்டத்தில் தெரிவித்தார்.

# பொம்மை

கைத்தொழில் அங்காடியை அலங்கரிக்கும் அழகுப் பதுமைகள் போன்ற அந்தப் பொம்மைகள் அனைவரையும் கவர்கின்றன.

சேலை உடுத்தி நாணி நிற்கும் தமிழகப் பெண்மணியைப் பிரதிபலிக்கும் பொம்மை, கேரளத்துக் கட்டழகியை நினைவுபடுத்தும் பொம்மை, காஷ்மீரத்துக் கன்னி, மணிபுரி மாது, பரத நாட்டியம் ஆடிடும் பாவை, வேய்ங்குழல் ஊதி நிற்கும் கண்ணன், கதகளி உடையிலே களிநடம் புரியும் கலைஞன் ஆகிய இன்னபிற உருவங்களை அப்படியே தத்ரூபமாகப் படம் பிடித்துக்காட்டும் பல பொம்மைகள் எவரையும் மயக்க வல்லன. இல்லத்தை எழில்படுத்த இதனை எடுத்துச் செல்பவர் பலர். இந்த நாட்டின் கை வண்ணத்தின் நினைவுச் சின்னமாக, இதனை விலை கொடுத்து வாங்கிச் செல்லும் வெளி நாட்டவர் பற்பலர்.

இதனை எப்படிச் செய்வது ? அது தெரிந்தால் நாமும் வீட்டிலேயே இதுபோல் பல கலை வண்ணப் பொம்மைகளைத் தயாரிக்கலாமே என்று ஏங்கிடும் ஏந்திழையர் பலர்.

ஆமாம் ! இந்தப் பொம்மைகளைத் தயாரிப்பது சிறந்ததொரு குடிசைத் தொழில். பெண்டிர் தமது ஓய்வு நேரத்தைப் பயனுறச் செலவிட நல்ல கைத்தொழில். அதிலும் பொறுமையின் சின்னமாக விளங்கும் பெண்டிர்க்கு அவர்தம் கை வண்ணத்தினை வெளிப்படுத்திட அருமையான கலையும் கூட !



இந்த நல்ல நோக்கத்தின் அடிப்படையில்தான், சென்னை ஹாமில்டன் வாராவதியிலுள்ள காவலர் இல்லப்பகுதியில் ஒரு பொம்மைப் பயிற்சி நிலையத்தை நிறுவியிருக்கின்றனர், தமிழ்நாடு அரசின் மகளிர் நலத்துறையினர்.

1970, பிப்ரவரித்திங்கள் 4-ஆம் நாள் துவக்கப்பட்ட இந்தப் பயிற்சி நிலையம் காவலர்களின் மனைவியர், மகளார் பயன் பெறுதற் பொருட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது, தற்போது அங்கு 13 பேர் பயிற்சி பெறுகின்றனர். அவர்களுக்கு, அரசு, மாதம் 20 ரூபாய் உதவித் தொகை வழங்குகிறது.

1962 ஆம் ஆண்டு ஜப்பானிய பொம்மை நிபுணர்கள் சென்னைக்கு வந்து பயிற்சி அளித்த போது, அவர்களிடம் பயிற்சி பெற்ற கோவிந்தம்மாள் இந்த நிலையத்தினருக்குப் பொம்மை செய்யும் கலையினைச் சொல்லித் தருகிறார்.

பொம்மைகள் செய்யத்தேவையானவை, பொம்மையின்



தலைகள். இவை, சென்னை எழும்பூரில் உள்ள கலை, கைத்தொழில் கல்லூரியிலிருந்து வாங்கப்படுகின்றன. அடுத்தது, தலைமயிர் (அடியில் வைப்பதற்குக் கொண்டா என்று சொல்லப்படுகிற சாதாரண கறுப்பு நூலையும், மேலே வைப்பதற்கு 'கிரேப் ஹேர்' என்ற விலையுயர்ந்த மயிரையும் பயன்படுத்துகின்றனர்). இவை தவிர, அழகிய டிசைன்கள் உள்ள துணிகள், பார்டருக்கான லேஸ்கள், கழுத்தில், காதில் அணியத் தேவையான பாசிகள், பொம்மைகளை நிறுத்தி வைக்க ஸ்டாண்ட், பொம்மைகளின் உள்ளே அடைக்கச் சக்கைகள், கை, கால்களுக்குப் பயன் படுத்தும் கம்பிகள் இப்படிப் பலவகைப் பட்ட பொருட்கள் தேவைப்



படுகின்றன. இவை அனைத்தையும் கடைகளிலிருந்து வாங்கி வந்து வைத்து மாணவியருக்குப் பயிற்சியளிக்கின்றனர். இவர்கள் தயாரிக்கும் பொம்மைகளின் அடக்க விலை சுமார் 10 ரூபாயிலிருந்து 50 வரை ஆகிறது (கூலி, லாபம் எதுவும் சேராமல்).

ஓராண்டுப் பயிற்சி பெற்று வெளி வரும் பெண்கள் தங்களது ஓய்வு நேரங்களில் மாதம் சுமார் 5 முதல் 10 வரை பொம்மைகள் செய்ய முடியும். அதன் மூலம் சுமார் 80 முதல் 100 ரூபாய் வரை ஓய்வு நேர ஊதியமாகப் பெற முடியும். மாதர்களின் இந்தப் பணி அவர்களது உள்ளத்திற்கும், உழைப்பிற்கும். உற்சாகம் தருவதாகும்.

# பயன் மிகு பருத்தி



"பருத்திச் செடியும் பால் மாடும் உள்ளவனுக்குப் பஞ்சமில்லை" என்று சொல்லுவார்கள். பருத்திச் செடியும் பால்மாடும் தொடர்ந்து உழவர்களுக்குப் பயனளித்து வருவதனாலேயே இந்தப் பழமொழி எழுந்தது போலும். எனவே, நீங்களும் பருத்தியைச் சாகுபடி செய்து, பயனடைய வேண்டுமென்பதற்காகச் சில குறிப்புகள் படைத்துள்ளோம்.

குளிர்காலப் பருத்தி விதைக்கப் புரட்டாசி மாதம் மிகவும் சிறந்தது. குளிர்கால இறவை கம்போடியாப் பருத்தி சாகுபடியாகும் கோயம்புத்தூர், சேலம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் 165 நாட்கள் வயதுடைய எம்.சி.யு.5 பருத்தியைச் சாகுபடி செய்து பெரும்லாபம் பெறலாம்.

குளிர்கால மானாவாரி கம்போடியாப் பருத்திச் சாகுபடியாகும் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் 'லட்சுமி' பருத்தி சாகுபடியாகும் கரிசல் மண் நிலங்களில், புதிதாக வெளியிடப்பட்டுள்ள 'பாரதி' பருத்தியைப் பயிரிட்டு ஏக்கருக்கு ரூ. 200 அதிக லாபம் பெறலாம். மேற்படி மாவட்டங்களிலும், கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலும் செவ்வல் மண் பகுதிகளில் எம்.சி.யு. 1 அல்லது எம்.சி.யு. 5 பருத்தியைப் பயிரிடலாம்.

கருங்கண்ணிப் பருத்தி சாகுபடியாகும் திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மாவட்டங்களில் 'கே 7' என்னும் 195 நாட்கள் வயதுடைய பருத்தியைச் சாகுபடி செய்து பயனடையலாம்.

பருத்தி சாகுபடி செய்ய வயலை நன்கு புழுதியாகுமாறு இரும்புக் கலப்பையால் உழவு செய்யவும். இறவைப் பருத்திக்குக் கடைசி உழவில் 12 கிலோ தழைச்சத்து, 7 கிலோ மணிச்சத்து, 7 கிலோ சாம்பல் சத்து ஆகிய இரசாயன உரங்களை இட்டு மண்ணுடன் நன்கு கலக்குமாறு செய்யவும். பின்பு இறவைப் பருத்திக்கு 75 செண்டி மீட்டர் (2½ அடி) இடைவெளிக்கு ஒரு பார் வீதம் அமைக்கவும்.

மானாவாரி கம்போடியாப் பருத்திக்கும், மானாவாரி கருங்கண்ணிப் பருத்திக்கும் கடைசி உழவிலோ, அல்லது விதைப்பதற்கு முன்போ 16 கிலோ தழைச்சத்து, 8 கிலோ மணிச்சத்து கொடுக்கும் இரசாயன உரங்களை இட்டு மண்ணுடன் நன்கு கலக்கும்படி உழவு செய்யவும்.

இறவைப் பருத்தி சாகுபடி செய்ய ஏக்கருக்கு 9 கிலோ விதையும், மானாவாரிப் பருத்திக்கு ஏக்கருக்கு 7 கிலோ விதையும் விதைக்க வேண்டும். விதைப்பதற்கு முன் விதைகளை அக்ரசான் மருந்துடன் கிலோவுக்கு 2 கிராம் வீதம் கலக்கவேண்டும். அதன் பின்பு மாட்டுச் சாணம் செம்மண் கலந்த பசையுடன் விதைகளைக் கலந்து, விதைகளின்மேல் உள்ள பஞ்சுகளைக் கைகளால் தேய்த்து நீக்கிவிட்டு, நிழலில் உலர வைக்கவேண்டும்.

மானாவாரியாக எம்.சி.யு. 1, எம்.சி.யு. 5 ஆகிய பருத்திகளைப் பயிரிட வரிசைக்கு வரிசை 45 முதல் 60 செண்டி மீட்டர் (1½ அடி முதல் 2 அடி) இடைவெளியும், குழிக்குக் குழி 25 செண்டி மீட்டர் (10 அங்குலம்) இடை வெளியும் இருக்குமாறு விதைகளை விதைக்க வேண்டும். பருத்தி சாகுபடி பற்றிய விவரங்களை மேலும் அறிய 'தமிழரசு' இதழைத் தொடர்ந்து படியுங்கள்.

# நீ எங்கே நான் அங்கே



தஞ்சாவூர் ரெயில் நிலையம், ராமேசுவரம் எக்ஸ்பிரஸ் ரெயிலில் வந்த பிரயாணிகளை வரவேற்கிறது. வந்திறங்கியோர் பலர் வரவேற்க வந்தவர் சிலர். வழியனுப்ப வந்தவர் ஏனையவர்.

கூட்டத்தின் மத்தியில் ஓர் ஆணும் பெண்ணும்! இணை என்று சொல்வது தவறு! அந்த மங்கையைப் பார்த்தால் சந்தேகமேயில்லை, ''செல்வி'' தான்; '' திருமதி '' அல்ல! கல்லூரி மாணவி போன்ற நளினமான உடலமைப்பு! உடை அமைப்பு !

அவன், இளங்கோ—அப்படித் தான் அவனது 'ஜேம்ஸ் பாண்ட்' பெட்டியின் மீது



பொறிக்கப்பட்டுள்ளது. இன்றைய இளைஞனை நினைவுபடுத்தும் 'கிருதா'! வீரம் செறிந்த மீசை! தோளிலே 'காமிரா'.

அவள், தன் பெட்டி படுக்கைகளைத் தூக்கிச் செல்லும் போர்ட்டரைப் பின்தொடர்ந்தாள்! அவன் அவளைத் தொடர்ந்தான். ரெயில் பயணக் காதலோ ?



ஊஹூம் . . . அப்படியும் தெரியவில்லை! கண் சாடை! இனிய புன்னகை! ஒன்றையும் காணோம்.

பூச்சரங்களைக் கண்டதும் பூவையின் இதழ் தாமரை மலரைப் போல் மலர்ந்தது. பக்கத்துக்கடையில் பழம் வாங்கும் சாக்கில் மங்கையின் மீது கண்ணோட்டமிட்டபடியே இருந்தான், இளங்கோ !

'' இங்கே நல்ல தங்குமிடம் எது ?''

''அரசர் சுற்றுலா மாளிகை''.

பூவை வாங்கிக்கொண்டு பின்பக்கம் திரும்பிப் பார்த்தாள். அவன் தன்னைப் பின் தொடரவில்லை என்று தெரிந்ததும் ஒரு நிம்மதியான பெருமூச்சு வெளிப்பட்டது. அவள் அரசர் சுற்றுலா மாளிகை சென்றாள்.

அறை எண் 31. பூட்டைத் திறந்துகொண்டு உள்ளே செல்கிறாள், மங்கை. அறையை நோட்டமிடுகிறாள்! மேஜை, நாற்காலி, சாய்வு நாற்காலி, கட்டில், மின்சார விசிறி! ஆம் குறைந்த வாடகையில் நிறைந்தவசதி.

மங்கைவெளியே புறப்படத் தயாரானாள்! அறையைப் பூட்டிவிட்டுத் திரும்பியவளுக்குஒரு சிறுஅதிர்ச்சி! எதிரே இளங்கோ குளித்துவிட்டுச், சிரித்தபடியே சீட்டி அடித்துக் கொண்டு வந்தான். 32-ம் அறைக்குள் அவன் நுழைவதைக் கண்டதும் அறையைக் காலி செய்துவிடலாமா என்று ஒரு சிறு எண்ணம் அவள் உள்ளக் கமலத்தில் மலர்ந்தது. 'உம்...இந்தச் சுண்டெலிக்குப் பயந்து ஓடுவதா? அதையும் தான் பார்த்துவிடுவோமே!'

அவளது உள்ளம் தைரியம் கூறிற்று.

அவள் தனது சுற்றுலாவைத் தொடர்ந்தாள்.

அரசர் விருந்தினர் மாளிகையின் அருகிலுள்ளது, அரசினர் கைத்தொழில் அங்காடி! அழகிய கைவண்ணப் பொருள்களுடன்சிலர்வெளிவருவதைக் கண்டதும், மங்கையும் உள்ளே சென்றாள்! வாயிலில் அலங்காரமாகவுள்ள குத்து விளக்கும் ஆடலரசனின் நடனத்தோற்றமும், விளக்கேந்திய சிலைப் பாவைகளும் அவளை வரவேற்றன.

அப்பப்பா! எத்தனை விதமான கைவண்ணப் பொருள்கள்! யானைத்தந்தம், சந்தனக் கட்டைகள், கருங்காலி மரம் முதலியவற்றில் கடைந்தெடுக்கப்பட்ட புலிகள், மான்கள், யானைகள், கொம்புகளில் செய்த பறவைக் கூட்டங்கள், விதவிதமான பொம்மைகள், அழகுச்சாதனங்கள், அணங்குகளை அலங்கரிக்கும் ஆபரணங்கள், பதுமைகள்போன்ற அழகுச்சிலைகள்! தஞ்சாவூர், சுவாமிமலை, கும்பகோணம் முதலிய இடங்களில் இயங்கும் கைத் தொழிற் கூடங்களிலிருந்து இந்த அழகுப் பொருட்கள் வந்து குவிந்திருந்தன.

இல்லங்களின் எழிலைக் கூட்ட, நண்பர்களுக்குப் பரிசளிக்க, எத்தனை விதமான எழில் உருவங்கள் !

ஒரு தொழிலதிபர், அமெரிக்கத் தொழிற்கூடப் பிரதிநிதிக்குப் பரிசளிக்கத் தஞ்சைப் பெரிய கோவிலின் 'பித்மாடல்' ஒன்றை 105 ரூபாய் கொடுத்து வாங்கினர். மருத்துவமனைத் தாதியர் மூவர் நகைகளை முற்றுகையிட்டு நின்றனர். பொம்மையை வாங்கலாமா என்ற ஆலோசனையில் ஈடுபட்டிருந்தனர் ஒரு இளம் தம்பதியர்.

'பளிச் பளிச்'—பிளாஷ் லைட்டின் ஒளி மின்னியது. மங்கை திரும்பிப் பார்த்தாள். அந்த இளம் தம்பதியரைப் படமாக்கிக்கொண்டு நின்ருன் இளங்கோ.

அவள் திரும்பிப் பார்த்ததைக் கண்ணுற்றதும், நல்ல சந்தர்ப்பம் என எண்ணிக்கொண்டு, ''நான் அவர்களைப் படமெடுத்தேன், உங்களை அல்ல!'' என்று மழுப்பினுன். அவள் முகத்தைத் திருப்பிக்கொண்டாள்.

அவன் அங்கிருந்து சென்றுவிட்டான் என்பது தெரிந்தபின் தான் அவளுக்கு 'மூட்' வந்தது.

கடையைச் சுற்றிப் பார்த்த மங்கையை அங்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த அழகிய வீணையும், மிகச் சிறப்பான வேலைப்பாடுகள் உள்ள தஞ்சாவூர்த் தட்டும் மிகவும் கவர்ந்தன !

'' ஏன் இதைத் தஞ்சாவூர்த் தட்டு என்கிருர்கள்?'' மங்கை விற்பனையாளரைக் கேட்டாள்.

'' தஞ்சாவூரில் மட்டுமே தயாரிப்பதால்''.

'' எதனுல் தஞ்சாவூரில் மட்டுமே செய்யப்படுகிறது ?'',

'' அந்தக் காலத்தில் இந்தக் கலையினை நாலு குடும்பத்தினர் மட்டும் செய்து வந்திருக்கின்றனர், மன்னர்களுக்காக! எனவே, இது வேறு எங்கும் பரவவில்லை !''

'' அந்தக் காலமென்றுல்....''

'' அதுவா ? மன்னர் சரபோஜி (கி.பி. 1712-1728) காசிக்குச் சென்று திரும்பிய போது பித்திரித் தட்டு (Bidri Plates) கொண்டுவந்ததாகவும் அதைப் பார்த்துச் செய்யும்படிக் கம்மாளர்களைக் கேட்டுக்கொண்டதாகவும் சொல்லுகிருர்கள்.

ஆனுல், ஆராய்ச்சியாளர்கள் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. பித்திரித் தட்டிற்கும், தஞ்சாவூர்த் தட்டுக்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. பித்திரித் தட்டுகளில் வெறும் பூ வேலைப்பாடுகள்தான் உள்ளன. ஆனுல், தஞ்சாவூர்த் தட்டுகளில் பூ வேலைகள் மட்டுமல்ல, கோபுரங்கள், கடவுளர்களின் திருவுருவங்கள், பொறிக்கப்படுகின்றன.

பித்திரித் தட்டில் பள்ளமாகக் கோடுகள் போடப்பட்டு அதன் மீது பூ வேலைகள் செய்யப்படுகின்றன. அதாவது பூ வேலைகள் தட்டின் பரப்பின் மட்டத்தில் இருக்கும்.

> இந்தியாவுக்கு ஆகாய விமானம் வேண்டுமென்று கேட்கலாம், அதிலே நியாயமிருக்கிறது. கப்பல்கள் வேண்டுமென்று கேட்கலாம், அந்தத் துறையிலே இன்னும் நாம் தேர்ச்சி பெறவில்லை என்பதால்! ஆனுல் சோறு போடு என்று அன்னியரிடம் கேட்பது ?
>
> —பேரறிஞர் அண்ணு

ஆனுல், தஞ்சாவூர்த் தட்டுகளிலோ, உருவங்கள் வார்த்தெடுக்கப்பட்டுத் தட்டின் மீது பதிய வைக்கப்படுகின்றன.

எனவே, இதன் தோற்றம் சோழர் காலத்திலேயே ஏற்பட்டிருக்க வேண்டும். சரபோஜி மன்னர் காலத்தில் இது மிகவும் ஊக்குவிக்கப்பட்டிருக்குமென்பது தான் பொருத்தமாக இருக்கும் என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

ஆமாம், இந்தத் தஞ்சாவூர்த் தட்டு, வீணை எல்லாம் எங்கே செய்கிருர்கள் ? என ஆவலோடு கேட்க, விற்பனையாளர் முகவரிகளைக் குறித்துத் தந்தார்.

இளங்கோ தன்னைப் பின்தொடர்கிருன் என்று பார்த்துவிட்டு, வாடகைக் காரில் ஏறினுள் மங்கை. பாவம், அவள் வருமுன்னுலே இளங்கோ ஸ்கூட்டரில் சென்றது அவளுக்கு எங்கே தெரியும் ?

ஒரு சிறிய வீடு ! வீடு என்று கூடச் சொல்ல முடியாது ! மூங்கில்கள் வைத்து அடைக்கப்பட்ட தச்சுப் பட்டறை ! அங்கே ஒரு பெருந் தச்சர் ! பலா மரத்தில் வீணையை உருவாக்கிக்கொண்டிருக்கிருர்.

தனது வேலைகளுக்கிடையே மங்கையின் கேள்விகளுக்கும் பதில் தருகிருர், அந்தப் பெரியவர்.

தஞ்சாவூரில் 40 குடும்பத்தினர் இந்த வீணைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். ஒரு வீணை செய்ய ஒரு மாதம் பிடிக்கும் ரூ. 250 முதல் ரூ. 500 வரை விலை. ஒரு வீணையில் சுமார் 40 பொருட்கள் (பலாமரம், மான் கொம்பு, கருங்காலிக் கம்பு முதலியன) உள்ளன. இதனை விற்பனை செய்து தர ''இசைக் கருவிகள் தொழிலாளர் குடிசைத் தொழிற் சங்கம்'' உள்ளது. மலேசியா, இலங்கை, அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குக் கூட இந்த வீணை அனுப்பப்படுகிறது. வீணை தவிரத் தம்புரா, கஞ்சிரா, மிருதங்கம் ஆகியவற்றையும் செய்கின்றனர். அரசு இதற்காக ரூ. 40,000 நிதி அனுமதித்துள்ளது. ஆண்டொன்றுக்கு இங்கு ரூ, 40,000 மதிப்புள்ள இசைக் கருவிகள் தயாரிக்கப்படுகின்றன. 1967 முதல் லாபத்தில் நடைபெறுகிறது. மங்கை திரட்டிய குறிப்புகள் இவை.

மீண்டும் 'பளிச் பளிச் ! மங்கை கோபத்துடன் திரும்பிப் பார்த்தாள். அங்கே இளங்கோ நாணிக் கோணியபடி நின்ருன். முகத்திற்குப் பதிலாக அவள் கண்கள் சிவந்தன. வாய், பேச அல்ல, ஏசத் துடித்தது ! ஆனுல், சூழ்நிலையை முன்னிட்டு அடக்கிக்கொண்டாள்.

அடுத்த தெருவுக்குப் பயணம். அங்கு ராமதாஸ் என்ற இளைஞர்,—பல வெளிநாட்டுத் தலைவர்கள், மன்னர்கள், மகாராணிகள் கையில் பரிசுப் பொரு

ளாகத் தவழத் தகுதி பெற்ற தஞ்சாவூர்த் தட்டினை உருவாக்கிக் கொண்டிருந்தார். மங்கையைக் கண்டதும் ராமதாசும் அவரது சகோதரிகளும் கை கூப்பி வரவேற்றனர்.

பத்து வயதிலிருந்தே இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பதாக விவரித்தார் ராமதாஸ். தந்தையிடமிருந்து கற்றது. முன்பு ரகசியமாக இருந்த இந்தத் தொழில் இப்போது சுமார் 70 குடும்பங்கள் ஈடுபடக்கூடிய அளவில் வளர்ந்துள்ளது என்று பெருமையுடன் குறிப்பிட்டார், அந்தக் கைவினைஞர். தஞ்சாவூர்த் தட்டு, குறுக்களவு சுமார் 5 அங்குலம் முதல் 24 அங்குலம் வரை பல வகைகளாகச் செய்யப்படுகிறது. 5 ரூபாயிலிருந்து 500 வரை விலையுள்ளது.

தற்போது தட்டு மட்டுமின்றி, செம்புகள், பிளாஸ்டிக் மூடிகள், சிகரெட் பெட்டிகள் இப்படிப் பல தயாரிக்கப்படுகின்றன. பொதுவாகப் பித்தளைத் தகட்டின் மீது, செம்பு, வெள்ளி, ஆகியவைகளில் பூ வேலைகள் உருவங்கள் செய்து பற்ற வைப்பது வழக்கமாகவுள்ளது.

மீண்டும் 'பளிச் பளிச்'! இம்முறை மங்கையால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. விரைந்து வெளியேறிவிட்டாள். அவள் கண்கள் எதையோ தேடின. ஆம்! தொலை பேசியைத்தான்! அதோ! அந்தக் கடையில் ஒன்று உள்ளது. மங்கை போனில் பேசினாள். வேறு யாருடன் பேசியிருப்பாள்? போலீசுடன்தான்!

'டக்'கென்று வைத்துவிட்டு டாக்சியில் புறப்பட்டாள் தொழிற்பேட்டை நோக்கி. அவளைத் தொடரவிருந்த இளங்கோவை இரு காவலர்கள் தடுத்து நிறுத்தினர். மங்கைக்கு மிகுந்த உற்சாகம்.

அவளது டாக்சி 22 ஏக்கர் பரப்புள்ள அந்த அரசினர் தொழிற்பேட்டையை வந்தடைந்தது. அங்கு உள்ள தொழிற்கூடங்கள் மொத்தம் 9. அதில் மூன்று, அரசினரின் தொழிற்கூடங்கள். ஒன்று சைக்கிள் இணைப்பகம். மற்றவை கருவிகள் தயாரிக்கும் கூடங்கள். வாளி தயாரித்தல், வர்ணங்கள் தயாரித்தல், எவர்சில்வர் பாத்திரங்கள், மருத்துவக் கருவிகள், திருகுகள் போன்றவை தயாரிக்கும் தனியார் துறைகளும் உள்ளன.

அனைத்தையும் சுற்றிப் பார்த்துவிட்டுத்தொழிற்கூட அதிகாரியைச் சந்திக்க வந்தாள், மங்கை. அங்கே விடாக்கண்டன் இளங்கோ புன்னகை முகத்தினனாய்க் கொலு வீற்றிருந்தான், அதிகாரி அருகே! பக்கத்தில் போலீஸ் இல்லாதது, மங்கைக்குச் சற்று ஆச்சரியத்தைத் தந்தது.

> இன்னும் 10 அல்லது 15 ஆண்டுகளில் பி. ஏ. பட்டதாரி டிராக்டர் ஓட்டுவதையும், எம்.ஏ. பட்டதாரி அறுவடை செய்வதையும் பார்க்கலாம். படித்தவன் உழவேண்டும், உழுபவன் படிக்க வேண்டும். படிப்பான் அறிவுப் பசியைத் தீர்க்க—உழுவான் உற்பத்தியைப் பெருக்க என்ற நிலை ஏற்பட வேண்டும்.
>
> — பேரறிஞர் அண்ணா

''எப்படித்தப்பி வந்தீர்கள்?'' கிண்டலாகக் கேட்டாள் மங்கை.

''எங்கிருந்து?'' அதிகாரி குறுக்கே கேட்டார்!

''ஓ! அதுவா? ஒரு வளவள நண்பரிடம் பேச்சில் மாட்டிக் கொண்டேன்! அதைத்தான் குறிப்பிடுகிறாள் மங்கை'' என்று இளங்கோ மழுப்பினான்.

''ஏற்கனவே இருவருக்கும் பழக்கம்தானா? அப்படியானால் மிஸ். மங்கை (ஆம்! அதுதான் மங்கையின் பெயர்) நீங்கள் கேட்ட விவரங்களை இளங்கோவிடம் கொடுத்திருக்கிறேன்! பெற்றுக் கொள்ளுங்கள்!''

வேறு வழியின்றித் தலை அசைத்தாள், மங்கை.

இருவரும் வெளியே வந்தனர். அந்தப் பெண் புலி பாயுமுன் ஆண் சிங்கம் இளங்கோ சரண் அடைந்துவிட்டான்.

''மிஸ் மங்கை! நான் ஒரு பத்திரிகை நிருபர். கல்லூரி மாணவி ஒருவர் தஞ்சைக் கலைப் பொருட்களை ரசிப்பதுபோல் ஒரு கட்டுரை திரட்ட வந்தேன்! தஞ்சை ரெயில் நிலையத்தில் உங்களைப் பார்த்ததுமே வேறு ஆளைத் தேட வேண்டாம், உங்களையே பயன்படுத்தலாமென்று ஆசைப்பட்டேன்! உங்களிடம் சொல்லாமல் தொடர்ந்ததற்கு மன்னிக்கவும்!''

''நோ....நோ....நீங்கள்தான் என்னை மன்னிக்க வேண்டும். நான், நீங்கள் யாரோ ரவுடியாக்கும், என்னைப் பின் தொடர்ந்து வருகிறீர்களே என்று தப்பாக எடை போட்டுவிட்டேன்.''

''ஆமாம் நீங்கள் எதற்குத் தொழிற்கூடங்களைச் சுற்றி வருகிறீர்கள்?''—பேச்சை வளர்க்க இளங்கோ ஒரு கேள்வியைத் தொடுத்தான்.

''தஞ்சாவூரின் வேளாண்மைச் சிறப்பு அனைவருக்கும் தெரியும். எனவே, கைவண்ணப் பொருட்கள், சிறு தொழில்கள் வளர்ச்சி பற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை தயாரிக்க நான் இங்குவந்தேன்!''

''அம்மா! புறப்படலாமா?'' டாக்சிக்காரர் நினைவுபடுத்தினார்.

''இல்லேப்பா! நீ பணத்தை வாங்கிக்கொண்டு போகலாம்!'' இளங்கோ பதில் சொன்னான்.

''நான் எப்படிப்போவதாம்?''

''இப்படி!'' ஸ்கூட்டரை ஓட்டுவது போல் கை சாடை காட்டினான் இளங்கோ! இருவரும் சிரித்தார்கள்.

---

இரண்டுக்கு மேல் எப்போதும் வேண்டாம் குடும்பக் கணக்கு
இதில் குசேலனுடன் போட்டியிடல் கொடுமைக் கணக்கு.

—முதல்வர் கலைஞர்

---





# அமோக விளைச்சலுக்கு PSG பம்பு செட்டுகள்

■ நீங்களும் பிஎஸ்ஜி பம்பு செட்டை இன்றே வாங்குங்கள் ■ என்ஜின் அல்லது மோட்டாரில் இயங்குவது ■ தாராளமாக தண்ணீர் பெறுங்கள் ■ ஏராளமாக விளைச்சல் காணுங்கள் ■ நிறைய செல்வம் அடையுங்கள்

***விவரங்களுக்கு எழுதுங்கள்:***

**பி எஸ் ஜி இண்டஸ்ட்ரியல் இன்ஸ்டிட்யூட்**

கோயமுத்தூர் 4 தென்னிந்தியா

***விற்பனைக் கிளைகள்:***

*PSG the hallmark of high standard*

*311, தம்பு செட்டி வீதி, சென்னை 1. 217 & 218, மேலமாசித்தெரு, மதுரை 1.*
*பப்ளிக் கார்டன் ரோடு, சைபாபாத், ஹைதராபாத் 4.*
*13/85, ஜெயசாமராஜேந்திர ரோடு, பெங்களூர் 2.*

VSK PSG 213



கையுறைக்குத் தோல் வெட்டப்படுகிறது.




"ஏன் தம்பி, நம் தொழிற்சாலையில் வேலை பார்க்கிற தொழிலாளர்களுக்குக் கையுறை (கிளவுஸ்) வாங்கணும். எங்கே வாங்கலாம்?"

"அதுவா, சென்னை எழும்பூரில் ஹால்ஸ் சாலையில் சிறுவர் மருத்துவமனை அருகே கஸ்தூரிபா நிலையம் என்ற பெயரில் ஒரு மகளிர் மன்றம் இருக்கிறது. அவர்கள் நிறையத் தயாரிக்கிறார்கள். ரெயில் பெட்டித் தொழிற்சாலை, அடிசன்ஸ், டி.ஐ.சைக்கிள் தொழிற்கூடம், பெஸ்ட் அண்டு கம்பெனி போன்ற நிறுவனங்கள் கூட அவர்களிடம்தான் வாங்குகிறார்கள்!"

"அப்படியா? போன் நம்பர் என்ன சொன்னீங்க?"

"அங்கே தொலைபேசி கிடையாது. ஆனால் அந்த மன்றத்தை நடத்துகிற செயலாளர்கள் திருமதி டபிள்யூ. ஆர். ஜெயம்மா, திருமதி ராஜம்மாள் வேணுகோபால் இருவருக்கும் தொலைபேசிகள் உள்ளன. திருமதி ஜெயம்மாவின் எண் 86162; திருமதி ராஜம்மாவின் எண் 63245".

"அப்படியா, இதோ போன் செய்கிறேன்! எட்டு, ஆறு, ஒண்ணு, ஆறு, இரண்டு...... எங்கேஜ்டாயிருக்கே!

"அடுத்த எண்ணைப் பார்ப்போம். 63245............

"ஹலோ! யாரு.......... திருமதி ராஜம்மாள் வேணுகோபால் இருக்காங்களா?"

"ஆமா, ராஜம்மா தான் பேசுகிறேன்! என்ன வேணும்."

"எனக்கு லெதர் கிளவ்ஸ் வேண்டியிருக்கு. உங்களாலெ சப்ளை பண்ண முடியுமா? என்ன விலை கேப்பீங்க?"

"தரத்திற்குத் தகுந்தபடி ஐந்திலிருந்து ஏழரை ரூபாய் வரை இருக்கு. எவ்வளவு வேணும்?"

"எனக்கு 250 வேணும்! இப்போ ஆர்டர் கொடுத்தா எப்போ செய்து தருவீங்க?!!

"இங்கு 25 பெண்கள் வேலை செய்கிறாங்க. மாதம் 2,000 கையுறை தயாரிப்பார்கள். ஒரு நாளைக்கு சுமார் 100 செய்வார்கள். உங்களுக்கு அவசரமா வேணும்னா கொஞ்சம்

கையுறையைத் தைக்கிறார்.



அதிக நேரம் வேலை பார்க்கச் சொல்லி இரண்டு நாளிலே சப்ளை பண்ணுகிறோம். இப்பொ திருப்தி தானே !''

'' திருப்திதான் ! ஆமா.... உங்கள் தொழிற்கூடம் ரொம்ப நாளா இருக்குதோ, எனக்குத் தெரியவே தெரியாதே !''

'' 1958-லே சேவை மனப்பான்மையுள்ள வள்ளி ஆச்சி, டாக்டர் சாவித்திரி ஆகிய இருவரும் சேர்ந்து எங்க நிலையத்தை ஆரம்பிச்சாங்க. அப்போ இங்கு தையல் வகுப்போடு, செருப்பு, தோல் பை, பர்ஸ் முதலியவை தயாரித்து வந்தார்கள். பிளாஸ்டிக் பொருட்களுக்கு மவுசு வந்த பிறகு இவைகளுக்கு கிராக்கி குறைந்து விட்டது. அப்புறம் அந்தத் தயாரிப்புகளை நிறுத்தி விட்டோம். சமீபத்தில்தான் இந்தத் தொழிலை ஆரம்பித்தோம். எங்க செயலாளர் திருமதி ஜெயம்மாவுடன் பேசினீர்களா ? அவங்கதான் இதில் தீவிரமா ஈடுபட்டிருக்காங்க. நல்ல தரமான தோல்களைப் பார்த்து வாங்குவது, பெரிய தொழிற்சாலை அதிபர்களைச் சந்தித்துத் தோல் கையுறைகளுக்கு ஆர்டர் வாங்குவது எல்லாம் அந்த அம்மா தான். ''

'' இது, பாராட்ட வேண்டிய விஷயம் தான். இதுக்கு அரசாங்க உதவி ஏதாவது.......... ''

'' தமிழக சமூகநல வாரியம், எங்களுக்கு ரூ. 16,000 உதவி செய்தனர். அதைக் கொண்டு தையல் யந்திரங்களை வாங்கி இதனை ஆரம்பித்தோம். பயிற்சிக் காலத்தில் இந்தப் பெண்களுக்கு மாதம் 15 ரூபாய் கொடுக்கிறோம். பயிற்சி முடிந்து நிரந்தரமா வேலை செய்யத் துவங்கியதும் மாதம் ரூ. 85 வரை தருகிறோம். உங்களை மாதிரி புது ஆர்டர்கள் நிறைய வந்தா வழக்கத்திற்கு அதிகமா மாலையில் வேலை செய்வார்கள். அதற்குத் தனியாக மாதம் 10, 15 ரூபாய் கொடுப்போம். இது தவிர அதிக அளவில் தொழில் நடந்து லாபம் வந்தால் அதைப்பகிர்ந்து இந்தப் பெண்களுக்கு மூன்று மாதம் போனஸ் வழங்குகிறோம். ''

'' அடடே ! பிரமாதம் ! நீங்க வேறு ஏதாவது தயாரிக்கிறீர்களா ? ''

'' வேலை செய்யும்போது அணியும் மேலுடை தயாரிக்கிறோம். காடாத் துணியில் பை தயாரிக்கிறோம், டி. ஐ. சைக்கிளின் ஆர்டரின் பேரில். ''

'' பரவாயில்லையே ! அது எங்களுக்குத் தேவையிருக்கு. முழுவதும் பெண்களே நடத்தும் நல்ல பணி இது. இங்கு மட்டும்தான் இம்மாதிரி, பெண்களே, கையுறை தயாரிக்கும் தொழில் நடைபெறுகிறது என்று நினைக்கிறேன். இது பாராட்டப்பட வேண்டியது. ஆதரிக்கப்பட வேண்டியது.... நன்றி..வணக்கம்.........''.




ஓம் : தத் : ஸத் :

நல்வாழ்வுப்பணி

"சித்த மருத்துவத்தின் சிறப்பு"

சித்தர்களின் அளவிலாப் பெருமைக்குச் சிறந்த அத்தாக்ஷி

கே. டி. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியின்

# மேல்மாயில் மருந்து

பதிவு செய்யப்பட்டது.

**நீடித்த நாட்பட்ட தீராத சரும ரோகங்களுக்குச் சிறந்த நிவாரணி**

கருநிற, செந்நிறப் படைகள், தடிப்புகள், குத்தல், வலி, சொறி (சரும சம்பந்தம்), படைகளில் திமிர் உண்டாகுதல், ஊசி குத்தினும் வலி தோன்றாமை, நெருப்புப்பட்டு கொப்புளங்கள் ஏற்படுவது தெரியாமை, துர்நீர் சர்வாங்கமும் பரவி ரத்தத்தில் கலந்து மதமதப்பு உண்டாகுதல் (நரம்பு சம்பந்தம்), கை விரல்கள் மடங்குதல், கொப்புளம் கிளம்புதல், நாசி அடைத்தல், பாதத்தில் குழிப்புண் உண்டாகுதல், கால்கைகளின் விரல்கள் தேய்வுற்று பாதிக்கப்படுதல், மூக்கில் சொட்டை ஏற்படுதல், பார்ப்பவர்கள் சகிக்கொணாத ரணங்கள் (அஸ்தி சம்பந்தம்) இவைகட்கு மிகச்சிறந்த நிவாரணி.

1 மண்டலம் (40 நாள்) எண்ணெயும் லேகியமும் ரூ. 12·00; தபால் செலவு ரூ. 3·00

ஸ்நானத்திற்கு சிரேஷ்டமான ஸ்ரீபரமாத்ம தைலம் 8 அவுன்ஸ் ரூ. 6·00; தபால் செலவு ரூ. 2·00

சித்தர் டாக்டர்

## கே. டி. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி & சன்ஸ்,

5/22, மேல்மாயில் போஸ்ட், வட ஆற்காடு மாவட்டம்.




ஆருயிர்த் தோழி அமுதாவிற்கு,

நான் எங்கேயிருந்து கடிதம் எழுதுகிறேன், தெரியுமாடீ! சினிமாவிலே "டூயட் சீன்களிலே" சாத்தனூர்க் காட்சிகளைப் பார்த்துவிட்டு நாமெல்லாம் ஒரு நாளைக்கி 'பிக்னிக்' போகணும்னு சொல்லுவாயே, அந்தச் சாத்தனூர் அணையிலிருந்துதான் எழுதறேன்!

உன்னையும் கூட்டிக்கொண்டு போகலியேன்னு வருத்தப்பட்டுக் கொள்ளாதே, அமு! இது ஒரு திடீர் 'சான்ஸ்'. நாங்க இங்கே திருவண்ணாமலைக்கு ஓர் உறவினர் வீட்டுத் திருமணத்திற்காக வந்தோம். அப்பா என்ன நினைத்தாரோ! சாத்தனூர் போகலாம்னார். எங்களுக்கெல்லாம் பெருமகிழ்ச்சி....... திருவண்ணாமலையிலிருந்து சாத்தனூர் 20 மைல்தான். அடிக்கடி பஸ் இருக்கு. உடனே எல்லாரும் புறப்பட்டு வந்துட்டோம்!

பஸ் நேரே அணைக்கட்டு அருகிலேயே கொண்டு வந்து விட்டுட்டுது. ஆகா! என்ன இனிமையான காட்சிகள்! மாணவன், தெய்வமகன், அக்கா தங்கை, துலாபாரம் படங்களிலேபார்த்து ரசித்தோமே அந்த இடங்களையெல்லாம் கண்ணெதிரிலேகண்டு களித்தேன்! நீயும் கூடயிருந்திருந்தா எப்படி இருந்திருக்கும், தெரியுமா?

அணையின் நீளம் 2558 அடி. அதாவது சுமார் அரை மைல். அத்தனை தூரமும் வண்ணப்பூக்கள் நிறைந்த சிறு சிறு பூங்காக்கள். பச்சைப்பசேலென்ற புல்வெளிகள்: விதவிதமாகப் பூத்துக் குலுங்கும் நூறு வகையான பூஞ்செடிகள்; அழகான சிலைகள்!

ஒருபெண் கையில் குடத்தோடு நிற்கிறாள். அந்தக்குடத்திலிருந்து தண்ணீர் பாய்கிறது. ஒரு பையன் தாகம் தீர நீர் அருந்துகிறான். பெண் பொய்; பையன் மெய். ஆமாம் பெண்ணாக நிற்பது சிலைதான்.

குறுமுனி அகத்தியர் கையில் கமண்டலத்துடன் நிற்கிறார். அதுவும் சிலையே! ஒரு கரடி கையிலிருந்து தண்ணீர் கொப்புளிக்கிறது: சர்க்கஸ் கரடி என்று நினைக்காதே! இது சிலைக்கரடி!

அழகிய மேற்கத்தியப் பெண்ணின் சிலை ஒன்று பூஞ் செடிகளுக்கு மத்தியில் நிற்கிறது. அதைச் சுற்றிப் பலர் வேடிக்கை பார்த்தபடி நின்றனர், நாங்கள் போகும்போது. அவர்கள் கோவையிலிருந்துவந்தவர்களாம். 60 பேர் ஒரு சுற்றுலாப் பேருந்தில் வந்திருக்கிறார்கள். அந்தச் சிலையின் உடையின் நிறத்தில் புடவை எடுத்தால் உன் நிறத்திற்கு அற்புதமாக இருக்கும். பூங்காக்களின் நடுவே பல இடங்களில் சிமிண்டில் செய்யப்பட்ட பல வகை இருக்கைகள் போடப்பட்டுள்ளன. சில இடங்களில் அழகிய குடையின் கீழும், பூவட்டங்களின் அடியிலும் மேடை அமைத்து அந்த இருக்கைகளைப் போட்டுள்ளனர், சுற்றுலாப் பயணிகள் அமர்ந்து அழகை ரசிப்பதற்காக!

பக்கத்திலேயே சிறுவர்கள் வேடிக்கை பார்ப்பதற்காகச் சிறு சிறு மிருகக் காட்சிசாலைகளும் உள்ளன! ஒரு இடத்தில் ஒரு கரடி இருக்கிறது. இன்னொரு இடத்தில் ஏழெட்டு மான்கள், பயணிகள் கொடுக்கும் இலைகளை ஆவலோடு வாங்கிப் புசிக்கின்றன. முயல்கள், புறாக்கள், மயில்கள், மலைப்பாம்பு, மீன்கள் ஆகியவையும் உள்ளன.

அணை ஓரத்தில் சின்ன ரெயில் ஓடுகிறது. நாங்கள் அதில் ஏறி 'ஜம்' என்று ஒரு சுற்றுச் சுற்றி வந்தோம். சென்னையிலிருந்து வந்த ஒரு குழுவினரும் எங்களோடு இந்தச் சிறுவர் ரெயிலில் வந்தார்கள். கட்டணம் ஒரு ஆளுக்கு 35 காசு. அதிலே கார்டு யார் தெரியுமா? என் தம்பி பாலு இல்லே, அவன் உயரம் தான். ஆமா 2 அடி உயரம் இருக்கிற ஒரு ஆளுதான் கார்டு. பெயர் பலராமன்: வயது 37; எனக்கு நம்பவே முடியல்லே! ஒரே வேடிக்கையாயிருந்தது,

ரெயில் மாதிரி அணையிலே 'போட்' விடறத்துக்கும் வசதி இருக்கிறது. இதற்காகப் படகுத்துறை வச்சிருக்காங்க. 60 காசு கொடுத்தா அரை மணிநேரம் சுற்றலாம்: நீ, திருமணமாகித் தேனிலவுக்கு வருவே பாரு, அப்போ மறந்திடாமே அரை மணி நேரம் படகிலே சுற்று, உன் கண்ணான கணவனுடன்! என்னைப் பற்றிக் கேக்கிறியா? வெவ்வெவ்வே-அப்புறம், விஷயத்துக்கு வருவோம்.

**மையப் பக்கத்தில் உள்ள சாத்தனூர் அணைக்கட்டுக் காட்சிகளை இந்தக் கட்டுரை விளக்கிச் சொல்கிறது.**

அணை மேலே உள்ள பாதையில் நின்று பார்த்தால் ஒரு பக்கம் அணையில் தேங்கி நிற்கும் நீர். அதனையும் தாண்டி இயற்கையின் பேரெழிலை எடுத்துக் காட்டும் தீவு போன்ற திட்டுக்கள். இந்தப்பக்கம் பார்த்தால், வர்ணக் கோலம் போட்டது போன்ற பூங்காக்கள். நெடிதுயர்ந்த அசோக மரங்கள், பசுஞ் சோலைகள். நான் சற்று நேரம் என்னையே மறந்து விட்டேன் அமுதா !

எவ்வளவு நேரம் அங்கேயே நிற்பது ? கீழே இறங்கி வந்தோம். மேலே இருந்து கீழே பார்த்தாயிற்று. கீழே இருந்து அணையைப் பார்க்க வேண்டாமா ? அதற்காக ஒரு ‘வியூடவர்’—கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதன் பக்கத்திலேயே நீச்சல் குளமும் இருக்கிறது. அருமையாக நீந்திக் குளிக்கலாம். ஒரு ஆளுக்குக் கட்டணம் 25 காசு தான்.

ஒரு ரவுண்டு சுற்றிட்டு வந்ததும் உனக்குக் கடிதம் எழுத உட்கார்ந்திட்டேன். இன்னும் இரண்டு நாள் தங்கி, நல்லா சுற்றிப் பார்த்தாத் தான் எனக்குத் திருப்தியா யிருக்கும். தங்குவதற்கு இடம் இருக்கான்னு கேட்கிறியா ? நீ கணக்குப் படிக்கிற வளாச்சே ! அதுனாலதான் எல்லாம் கணக்காகச் சொல்றேன் !

இதோ ! அப்பா, பொதுப் பணித்துறை உதவிப் பொறியாளரிடம் தான் பேசிக் கொண்டிருக்கிறார். கேட்டுச் சொல்லிவிடுகிறேன்......இங்கு மொத்தம் 70 அறைகள் இருக்காம். ஒரு ரூபாயிலிருந்து நாலே கால் ரூபாய் வரை வாடகை. அறைகளில் குளிக்கக் கொள்ள எல்லா வசதிகளும் உள்ளன. இந்த அறைகள் மூலம் அரசாங்கத்துக்கு மாதம் 2,000 ரூபாய் வருமானம் கிடைக்குதாம். சென்ற வருடம் நடந்த சினிமாப் படப்பிடிப்புகள் மூலம் ரூ. 12,000 வருமானம் வந்ததாம். அடியே, சாப்பாட்டு ராமி, இங்கு மூன்று ஓட்டல்களும் இருக்கின்றன.

மாதம் சுமார் 12,000 சுற்றுப் பயணிகள் வருவார்களாம். பஸ்களும் கார்களும் வந்து போன வண்ணமாக இருக்கின்றன. சனி, ஞாயிறு நாட்களிலும், பொது விடுமுறை நாட்களிலும் தான்


# தமிழரசு

சந்தா

ஓர் ஆண்டு.... ரூ. 8.00

அரை ஆண்டு...ரூ. 4.00

தனிப்பிரதி...35 காசுகள்

விவரங்களுக்கு:-

இயக்குநர்,

செய்தி, விளம்பரத்துறை,

தமிழ் நாடு அரசு — சென்னை, 9


நிறையக் கூட்டம் வருமாம். அதனாலே சனி, ஞாயிறு இரவுகளில் அணை முழுவதிலும் அமைக்கப் பட்டுள்ள மின்சார அலங்கார விளக்குகளை எரிய விடுகிறார்கள். பார்க்கக் கண் கொள்ளாக்காட்சியாக இருக்கிறது. இதற்காக மூன்றே கால் லட்ச ரூபாய் செலவில் ஒளி அமைப்பு வேலைகள் கடந்த ஓராண்டு காலமாக நடக்கிறதாம்.

அணையைப் பற்றி மற்றவிவரம் தேவையா ? தென் பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள இந்த அணை 1954-ம் ஆண்டில் 289 லட்சரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டது. நீர் மட்டம் 119 அடி. தற்போது 80 அடி தண்ணீர்தான் இருக்கிறது. நவம்பர் முடிவிலிருந்து டிசம்பர் முடிவு வரை அணையில் தண்ணீர் நிரம்பி வழியுமாம். இதிலிருந்து 21,000 ஏக்கர் நிலத்திற்குத் தண்ணீர் பாய்ச்சலாம். தற்போது நிலக்கடலை போன்ற பயிர்களுக்காக சுமார் 9,000 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் விடப் படுகிறது.

பயிர் வளம் பெருக்கும் பாசனத் திட்டமாயிருப்பதோடு, இந்தச் சாத்தனூர் அணை, சுற்றுலா வருபவர்களுக்கு ஒரு சொர்க்கமாகவும் உள்ளது.

நீ கணவரோடு வர்றியோ, இல்லையோ ; நாமெல்லோரும் கிறிஸ்துமஸ் விடுமுறைக்குக் கண்டிப்பாக சாத்தனூர் அணைக்கட்டுக்குச் சுற்றுலா வரணும். இன்னொரு தடவை இந்த இயற்கை எழிலை அள்ளிப் பருகணும். அது தான் என் ஆசை ! எவ்வளவு ரம்மியமாக இருக்கிறது, தெரியுமா ? சொல்லித் தெரியாதடி இந்த சிங்காரச் சாத்தனூரின் அருமை ! வந்து அனுபவித்தால் தான் தெரியும் !

உன் அன்புத் தோழி,
தேன்மொழி.

சாத்தனூர்,
19—8—1970.

# வண்ணப் படங்களில்

**39 ஆம் பக்கத்தில்**

* சேலம் இரும்பாலைத் திட்டத்தைக் கனிய வைத்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுக்கும், இடைவிடாது முயன்று பெற்ற தமிழக முதல்வர் அவர்களுக்கும், தங்க முலாம் பூசிய வெள்ளி மாங்கனிகளைப் பரிசளித்து மகிழ்கிறார் சேலம் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு கே. இராசாராம்.

**42 ஆம் பக்கத்தில்**

* சேலம் உருக்காலைத்திட்டத் துவக்கவிழாவில் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், முதல்வர் கலைஞர், மத்திய அரசு இரும்பு உருக்கு அமைச்சர் ப. ரா. பகத், தமிழகத் தொழிலமைச்சர் திரு. செ. மாதவன் ஆகியோர்.

* துவக்க விழாவிற்குத் திறந்த ஜீப்பில் பிரதமரும், ஆளுநரும், முதல்வரும் ஊர்வலமாக வரும் காட்சி.

* முதல்வர் தலைமை உரை ஆற்றுகிறார்.

* உருக்காலையைத் துவக்கி வைப்பதைக் குறிக்கும் வகையில் பிரதமர், அசோக ஸ்தூபியைத் திறந்து வைப்பதை, முதல்வர் ஆளுநர், மத்திய அமைச்சர் ஆகியோர் ஆர்வத்துடன் பார்க்கின்றனர்.

* விழாவிற்கு வருகை தந்திருந்த மக்கட் கூட்டத்தினரில் மகளிர் பகுதி.











TOURIST BUNGALOW















மாலை நேரம்! மாம்பலத்துக்கே உரிய தனி எழிலுடன் திகழ்ந்தது சென்னை, தியாகராய நகர்.

பனகல் பூங்காவின் அருகே வந்ததும், அந்தச் சுற்றுலாப் பேருந்து நின்றது. பட்டுப் பூச்சி போன்ற மாணவியர் கிண்கிணியின் நாதம் போலச் சிரிப்பொலி தவழ வெளி வந்தனர். பட்டுப்பூச்சி பறந்து செல்வது, மலர்களை நோக்கித் தானே! இவர்களும் கூடை கூடையாக வைக்கப்பட்டிருந்த பூக்களை மொய்த்தனர்.

ஜாதி மல்லிகை வாங்கினுள், சரசு! மதுரை மல்லிகை வாங்கினுள், மாலதி! கனகாம்பரத்தை விலை விசாரித்தாள், கவுதமி.

ரோஜாவை வாங்கித் தலையில் சூடாமல் வாயில் போட்டுச் சுவைத்தாள் மற்றொரு மாணவி.

"அடி, அதற்குள் பசி வந்துட்டுதா?"

"ஏண்டி, அவள் பெயரை மறந்துட்டியா? அவள் அபிராமியில்லேடி! சாப்பாட்டு ராமி! எது கிடைத்தாலும் பிச்சு, வாயிலெ போட்டுடுவாள்!"

"ஏண்டி, நம்ம டீச்சருக்கு அந்த ஒற்றை ரோஜா அழகா இல்லே?"

"போடி இவளே! அது ரோஜாவே யில்லை."

"வேறு என்னவாம்?"

"ஏதோ ஒரு பெயர், சட்னு நினைவுக்கு வரலே! அதோ டீச்சர் வர்றுங்க! அவங்களையே கேட்போம்! ஏன் டீச்சர் நீங்க வச்சிருக்கீங்களே பூ; அதன் பெயர் என்ன?"

"அதன் பெயர் 'டாலியாஸ்' மஞ்சள், சிவப்பு, ஊதா, வெள்ளை இப்படிப் பல அழகான நிறங்களில் கிடைக்கிறது. சென்னையிலே இப்போ இந்த பூ வைச்சுக்கிறதுதான் 'பேஷன்'."

"ஆமாம் டீச்சர்; நான் கூட அப்போ பார்த்தேன். காலேஜ் கெர்ல்ஸ் இதைத்தான் தலையில் வைச்சுட்டுப் போறுங்க. கூடைக்கொண்டை போடறவங்க காதோரம் வைச்சிருந்தா அழகா இருக்கு பார்ப்பதற்கு!"

"ஆமாம் டீச்சர்; இந்தப் பூக்கள் எல்லாம் எங்கிருந்து வருகின்றன?"

"அது விரிவாச் சொல்ல வேண்டிய விஷயம்! எல்லாரும் பஸ்லே ஏறுங்க! நான் விளக்கமாச் சொல்லிக்கிட்டு வர்றேன்! ஏய் கீதா இன்னுமா, பூ, பேரம் பேசி வாங்கலே!"

"அவள் எதுலேயுமே லேட் தான் டீச்சர்! அவள் பிறந்ததே நாலாவது குழந்தையா! குடும்பக் கட்டுப்பாட்டு எல்லையைத் தாண்டிப் பிறந்தவள்!"

கலகல சிரிப்பொலி காற்றில் மிதக்க, மாணவியர் பேருந்தில் புகுந்தனர்.

"டிரைவர்! நேரே மீனம்பாக்கம் விமான நிலையம் போகட்டும்!'' ஓட்டுநருக்கு உத்தரவிட்ட ஆசிரியை லீலா தங்கசாமி, பூக்களைப் பற்றி வகுப்பு அறை பாணியிலேயே தொடங்குகிறார்:—

''பூக்களில் இரண்டு வகை உண்டு! ஒன்று வணிகப்பூக்கள். அதாவது விற்பனை நோக்கத்துடன் பயிர் செய்யப்படுபவை. முல்லை, மல்லிகை, சாமந்தி, கனகாம்பரம் இந்த வகையைச் சேர்ந்தவை. அடுத்தது அலங்காரப் பூக்கள். வீடுகள், அலுவலகங்கள், பெரிய ஓட்டல்கள், ஆகிய இடங்களில் அழகுக்காகவும் அலங்காரத்திற்காகவும் பயன்படுத்தக்கூடியவை. ரோஜா லில்லிப்பூ, ஜெர்பேரா, கிளாடியோலாஸ், கார்னேஷன் அகாஃபந்தஸ், வாட்சோனியா என்று இந்தப் பூக்களுக்குப் பெயர்.



இதில் வணிகப் பூக்கள், அதாவது முல்லை, மல்லி முதலியன. மதுரை, கோவை, சென்னை ஆகிய நகரங்களில் சுற்று வட்டாரங்களில் ஏராளமாகப் பயிரிடப்படுகின்றன.

இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் எல்லா மலர் வகைகளும் 20,000 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படுகின்றன. இதில் ரூ. 9 கோடி மதிப்புள்ள 11,000 டன் பூக்கள் கிடைக்கின்றன. மல்லிகை, முல்லை, கனகாம்பரம் போன்றவை 80 சதவீதம் தமிழ்நாட்டில் தான் கிடைக்கின்றன. அலங்காரப்பூக்கள் ஊட்டி, கொடைக்கானல் மற்றும் பெங்களூர், வடநாட்டில் காஷ்மீர், டார்ஜிலிங் ஆகிய பகுதிகளில் பயிரிடப்படுகின்றன.

நம்ம ஊர்களில் பெரும்பாலும் இந்த வணிகப் பூக்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன. பெண்கள் தலையில் வைப்பதற்கும், கோயில்களுக்கும், திருமணங்களுக்கும் அதிக அளவில் உபயோகப்படுத்தப்படுகிறது. அலங்காரப் பூக்கள் பயன்படுத்தப்படுவது மிகமிகக் குறைவு! பெரிய பங்களாக்கள், விருந்துகள் முதலியவைகளில் மாத்திரமே அலங்காரப் பூக்களைக் காணலாம். ஆனால் மேல் நாடுகளில் அப்படி அல்ல. இந்த அலங்காரப் பூக்கள் மிகுந்த அளவில் பயன்படுத்தப்படுகின்றன.''

''வெள்ளைக்காரிங்க கூட தலையிலே பூ வைப்பாங்களா டீச்சர்?'' —மக்கு மல்லிகாவின் கேள்வி.

"தலையிலே வைக்கமாட்டாங்க! எல்லா வகை விழாக்களிலும், பண்டிகை நாட்களிலும் வீடுகளை இந்த அலங்காரப் பூக்களால் அழகு படுத்துவர். பிறந்த நாட்களின் போது பூக்கொத்துக்களை அன்பளிப்பாக வழங்குவார்கள். அதே போல் பெரிய மனிதர்களைப் பார்க்கப் போகும் போது, மருத்துவமனையிலிருக்கும் நண்பர்களை உடல் நலம் விசாரிக்கும்போது மலர்களை அன்புடன் வழங்குவர். இப்படித் தரும்போது அது ஒரு பூ என்றால் கூட இதற்கு மிகுந்த மதிப்பு உண்டு. ஆனால் காம்பு நீளமான பூக்களையே பயன்படுத்துவார்கள். பிறப்பு இறப்பு ஆகிய நிகழ்ச்சிகளுக்கும் அங்கு மலர்கள் பயன்படுத்தப்படுகின்றன.''

''பெண்கள் பூச்சூடிக்கொள்வதே கிடையாதா, டீச்சர்?''

''உண்டு! ஆனால் தலையில் அல்ல! முக்கியமான விருந்துகளுக்குச் செல்லும்போது 'அர்சிட்' என்ற ஒருவகைப் பூக்களை உடையின் மீது அணிந்து செல்வார்கள்.

இந்த அலங்காரப் பூக்களைச் சாகுபடி செய்வது, ஒரு சிறந்த, மிக நுட்பமான கலையாக, பெருந்தொழிலாக, அயல் நாடுகளில் வளர்ந்துள்ளது. இம்மாதிரிப் பூக்களை விற்பதற்கென்றே தனிக் கடைகள் அங்கு இருக்கும். அது தவிர ஏற்றுமதிக்காகவே தனியாகவும் பயிர் செய்கின்றார்கள். நெதர்லாந்து நாட்டில் பலவிதமான பூக்கள் பயிரிடப்படுகின்றன. அதில் 75 சதவீதம் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். இஸ்ரேல் நாடு மட்டும் ஆண்டு தோறும் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள அலங்காரப் பூக்களை ஏற்றுமதி செய்கிறது.''

''நம்ம நாட்டிலிருந்து ஏற்றுமதி ஆகுதா டீச்சர்?''

''இதுவரை பெரிய அளவில் ஒன்றுமில்லை. சென்ற ஆண்டு வெளிநாட்டில் நடந்த பூக்கண்காட்சிக்கு ரோஜா, வாட்சோனியா, அகாஃபந்தஸ், கிளாடியோலாஸ் என்ற நாலு வகைப் பூக்களை மத்திய அரசின் வர்த்தகக் குழு (State Trading Corporation) அனுப்பியது. மேற்கு ஜெர்மனியிலிருந்து நாளொன்றுக்கு 3,000 மலர்களுக்கும் ஹங்கேரியிடமிருந்து வாரமொன்றிற்கு 10,000க்கும், இங்கிலாந்து, பிரான்சு, சுவிட்சர்லாந்து, செக்கோஸ்லோவாகியா ஆகிய நாடுகளிலிருந்து மொத்தம் 5 லட்சம் ரோஜாப் பூக்களுக்கும் ஆர்டர் வந்துள்ளன. அதைத் தொடர்ந்து இந்த ஆண்டில் சிறிது ஏற்றுமதியாகும்.''

''அது ஏன் டீச்சர் ஒரு வருடம் கழிச்சு . . . ?''

''வெளிநாடுகளில் இந்த அலங்காரப் பூக்கள் ஏராளமாகப் பயிராகின்றன. ஆனால் ஐரோப்பிய நாடுகளில் டிசம்பர் முதல் மார்ச் வரை குளிர் பருவமாக யிருப்பதால் இந்த மலர்ச் செடிகளைப் பயிரிட முடியாது. ஏனெனில் அப்போது நிலத்தைப் பனி மூடிவிடும். எனவே, பயிர்களெல்லாம் குளிர்ச்சியினால் மாண்டு விடும். அதனால் இந்தப் பருவ காலங்களில் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, சுவீடன், இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் இந்த அலங்காரப் பூக்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றன. நம்ம ஊரில் ஊட்டி, கொடைக்கானலில் உள்ள பருவ நிலை இந்தக் காலங்களில் அலங்காரப் பூக்கள் பயிரிட மிகவும் உகந்த காலமாக உள்ளது.''

''எந்த மாதிரி நிறம் அவங்களுக்குப் பிடிக்கிறது டீச்சர்?''

''இளம் சிவப்பு (Pink) தங்க நிறம், வெள்ளை ஆகியவைதான் அவர்களுக்குப் பிடித்த நிறம். அதிலும் குறிப்பாக ரோஜா வகைகளில்.''

''ரோஜா அங்கு என்ன விலையிருக்கும் டீச்சர்?''

''ஜெர்மனியர்கள் இந்திய ரோஜாவிற்கு குளிர் பருவ காலத்தில் 100-க்கு 150 ரூபாய் வரை கொடுக்கத் தயாராக உள்ளனர். அதாவது ஒரு ரோஜாவின் விலை ஒன்றரை ரூபாய். கார்னேஷன், சாமந்தி ஆகியவைகளுக்கு ஒரு டஜனுக்கு ரூ. 72 வீதமும், கிளாடியோலாஸ், ஜெர்பிரா ஆகியவற்றிற்கு ஒரு டஜனுக்கு ரூ. 12 முதல் 24 வரையும் அங்கு விற்கப்படுகின்றன. மற்ற ஐரோப்பிய நாடுகளில் காரனேஷன் என்ற மலருக்கு 100-க்கு ரூ. 15 முதல் 70 வரையும், சாமந்திக்கு 100-க்கு ரூ. 50 லிருந்து 175 வரையும் கொடுக்க முன் வருவதாகத் தெரிகிறது. ஆர்ச்சிட் என்ற பூ ஒன்றுக்கு ரூ. 20 கூடத் தருவார்களாம்.''

''அடேங்கப்பா! நம்ம ஊரில் 10 காசுக்கு 4 ரோஜா விற்குதே.''

''அது சாதாரண ரோஸ்! ஏற்றுமதி ரக ரோஜா ஊட்டியில் ஒரு டஜன் ஒரு ரூபாய் முதல் 3 ரூபாய் வரை விற்கும்.''



''ஏற்றுமதி ரகம்னு என்ன டீச்சர்?''

''ஏற்றுமதிக்கான அலங்காரப் பூக்கள்சில தகுதிகள் பெற்றிருக்க வேண்டும். வெளிநாட்டவர்கள் விரும்பும் நிறத்திலிருக்க வேண்டும். காம்புடன் சேர்ந்த பூ 75 சென்டி மீட்டர் நீளம் இருக்க வேண்டும். வெட்டும் போது பூக்கள் விரிந்திருக்கக் கூடாது. மொட்டாக இருக்க வேண்டும், ஆனால் 24 மணிநேரத்தில் விரியக் கூடியதாக இருக்க வேண்டும்.''

''எதற்கு 24 மணி நேரம்?''

''வெளி நாடுகளுக்கு விமானம் மூலம் தானே பூக்கள் போகின்றன. காலையில் அல்லது முற்பகல் 10, 11 மணிக்கு மதுரை, கோவையிலிருந்து விமானத்தில் ஏற்றினால், சென்னை வந்து, பின் வேறு விமானம் மூலம் பிற்பகலில் அல்லது மாலையில் பம்பாய், கல்கத்தா, டில்லி ஆகியநகரங்களுக்கு வந்து சேரும். அடுத்த விமானத்தில் ஏற்றினால் மறுநாள் காலையில் மேற்கு ஜெர்மனியிலோ, பிரான்சிலோ தமிழ் நாட்டு மலர்களைப் பார்க்கலாம்!''

''டீச்சர்! டீச்சர் . . . விமான நிலையம் வந்திட்டுது.''

''லட்சுமி! அதோ அந்த கவுண்டரில் போய் 30 டிக்கட் வாங்கு. மெள்ள; எல்லாரும் அமைதியா, நாகரிகமா நடந்துக்கணும்.''

''டீச்சர், அதோ! விமானத்தில் கூடை கூடையா ஏற்றுகிறார்களே! அதுகூட இந்தப் பூதானா!''

''அவை அலங்காரப் பூக்கள் அல்ல! மல்லி, சாமந்தி போன்றவை. பம்பாய், டில்லி ஆகிய பகுதிகளுக்கு அனுப்புகிறார்கள்.''

''தினம் எவ்வளவு அனுப்புவார்கள்?''

''மதுரையிலிருந்து நாள் தோறும் சுமார் 900 கிலோ பூக்கள் விமானத்தில் வருகின்றன. கோவையிலிருந்து 300 கிலோ வரும். சென்னை வட்டாரத்திலுள்ளதைப் பெரும்பாலும் சென்னை நகரிலேயே விற்றுவிடுகிறார்கள். தற்போதுஇவர்கள்பயிரிடும் பூச்செடிகள் 3 மாதங்கள் தான் பூக்கக்கூடியன. அரசினர் மலர் ஆராய்ச்சிப் பண்ணையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள புதியரக மல்லியைப் பயிரிட்டால் 6 மாதங்கள் தொடர்ந்து பூ கிடைக்கும்.''

''டீச்சர் விமானம் போடற சத்தத்திலே நீங்க சொல்றதே காதிலே விழலே.''

''அது காரவல் விமானம், அப்படித்தான் இரையும்.''

''டீச்சர் இந்த அலங்காரப் பூக்களை யார் பயிரிடுகிறார்கள்? அரசாங்கமா?''

''ஊட்டி, கூனூர், கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் உள்ள

அரசினர் பூங்காக்களில் ரோஜாப் பூக்கள் மட்டும் சுமார் 500 வகைகள் இருக்கும். மற்ற அலங்காரப் பூக்கள் 100 வகைகள் உள்ளன. இவற்றில் பல, ஏற்றுமதிக்குத் தகுந்தவை. இந்த அலங்காரப் பூக்களைத் தனியார்களும் பயிரிடலாம். சில ரகங்களை ஊட்டி, கொடைக்கானல், கூனூர், கோத்தகிரி போன்ற மலைப்பகுதிகளில் பயிரிடலாம். அஸ்டார்ஸ், சாமந்தி ஆகியவைகளை கோவை, மதுரை பகுதிகளில் பயிரிடலாம். ஆர்சிட்ஸ், ஸ்டிரெட்டிசா போன்றவை ஏற்காடு, ஏலகிரி, கொல்லி மலை பகுதிகளில் நன்கு வளரும். இதற்காக அரசினர் மலர்கள் ஆராய்ச்சிப் பண்ணை ஒன்று கோவையில் உள்ளது. சென்னையை அடுத்த வண்டலூரில் கூட 40 ஏக்கர் நிலத்தில் மலர்ப் பண்ணை ஒன்றினை ஏற்படுத்தத் தமிழக அரசு வேளாண்மைத் துறை திட்டமிட்டுள்ளது.''

''டீச்சர்! இந்த ஏற்றுமதியில் அரசு ஏன் அவ்வளவு ஆர்வம் காட்டுது?''

''இது விவசாயிகளுக்கு நல்ல வருமானம் தரக்கூடியது. உதாரணமாக, மற்ற பயிர்கள் பயிரிட்டால் ஏக்கருக்கு 1,000 அல்லது அதிக பட்சம் 2,000 ரூபாய்தான் வருமானம் வரலாம். ஆனால் ஒரு ஏக்கரில் ரோஜா சாகுபடி செய்தால் ரூ.15,000 வரையும்; கிளேடியோலஸ், டாலியாஸ் வகைகளில் ஏக்கருக்கு 10,000 முதல் 12,000 ரூபாய் வரையிலும் நிகர லாபம் பெறலாம். மற்றப் பூக்கள் மூலம் ஏக்கருக்கு ரூ. 5,000 வருமானம் கிடைக்கும். அலங்காரப் பூக்கள் சாகுபடி செய்யச் செலவு ஏக்கருக்கு 1,500 அல்லது 2,500 வரைதான் ஆகும். அதுவும் பெங்களூர் பூக்களைவிட நம்ம தமிழ்நாட்டு அலங்காரப் பூக்களுக்கு வெளிநாட்டில் அதிகக் கிராக்கி இருப்பதாகத் தெரிகிறது. எனவே விவசாயிகள் விஞ்ஞான ரீதியில் தரமான பூச்செடிகளைப் பயிரிட்டால் நல்ல மகசூல் கிடைக்கும். நமது நாட்டு ரோஜா மலர்களையும் மற்ற அலங்காரப் பூக்களையும் வருக! வருக! என வரவேற்க மேலை நாட்டினர் ஆவலோடு உள்ளனர்.''

—என்று பெருமிதத்துடன் கூறிய ஆசிரியை, தனது கைக்கடிகாரத்தைப் பார்த்தார். மணி ஏழாகியது. குழந்தைகள் அனைவரையும் பேருந்துக்குள் செல்லுமாறு கட்டளையிட்டார். அடுத்த பத்து நிமிடங்களில் அந்த உல்லாசப் பேருந்து தனது பயணத்தைத் தொடர்ந்தது.



# இந்த மாதத்தில் என்ன செய்யலாம்?

உழவுத் தொழிலைப் பொறுத்த முறையில் புரட்டாசி மாதம் மிகவும் முக்கியமான மாதமாகும். ஏனெனில், புரட்டாசி மாதத்தில் தான் தமிழ் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சம்பா நடவு செய்யப்படுகிறது; குறுவை நெல் அறுவடைக்கு வருகிறது; பின் சம்பா அல்லது தாளடிக்கு நாற்று விடப் படுகிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், நெல் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களுக்கு இம்மாதத்தில் ஓய்வு கிடைக்காது. குளிர்காலக் கம்போடியாப் பருத்தி, மானாவாரி கருங்கண்ணிப் பருத்தி சாகுபடி செய்யவும் புரட்டாசி மாதமே ஏற்றது. தென் மாவட்டங்களில் மானாவாரியாகச் சோளம், கம்பு, குதிரைவாலி ஆகிய சிறு தானியங்களை விதைக்கவும், சேலம், கோயம்புத்தூர், வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் மானாவாரியாகச் சாமை விதைக்கவும் புரட்டாசி மாதமே சிறந்தது. மாநில மெங்கும் மானாவாரியாகத் தினை, உளுந்து, கொள்ளு ஆகியவைகளை விதைக்க இம்மாதமே பொருத்தமானது. எனவே, புரட்டாசி மாதத்தில் கீழே பரிந்துரைக்கப்படும் திருந்திய சாகுபடி முறைகளை மேற்கொண்டு வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குமாறு உழவர் பெருமக்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

## நெல்

''புரட்டாசி நடவு பொன்னாகி விளையும்'' என்பது உலகறிந்த உண்மையாகும். ஆகவே ஆவணி மாதத்தில் நாற்று விடப்பட்ட அதிசயநெல் ஐ.ஆர். 8, ஜெயா, ஐ.ஆர். 5, கோ-25, கோ-32, ஜி.இ.பி. 24, பி.சி.பி. 1 கோ-19 கோ-30 ஆகிய நெல் வகைகளின் நாற்றுகளை புரட்டாசி மாதத்திலேயே நட்டு விடுதல் நல்லது. ''சுவரை வைத்துத்தானே சித்திரம் எழுத வேண்டும்'' என்பது போல, நாற்று நடுவதற்கு முன்பாக நடவு வயலைத் தயார் செய்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். அப்பொழுதுதான் குறிப்பிட்ட வயதில் நாற்றுகளை நட முடியும். எனவே, நடவு வயல் தயார் செய்வதில் உடனடியாகக் கவனம் செலுத்துங்கள்.

''அகல உழுவதைவிட ஆழ உழுவதே மேல்'' என்று ஆழ உழ வேண்டிய அவசியத்தை அன்றே தமிழறிஞர்கள் வலியுறுத்தியுள்ளனர். ஆகவே ஆழ உழுவதற்கு இரும்புக் கலப்பையைப்பயன்படுத்துங்கள். 4 முறை சாதாரணக் கலப்பையால் உழுவதை விட 2 முறை இரும்புக் கலப்பையால் உழுவதே சிறந்தது. நடவு வயலைத் தயாரிக்க இரும்புக் கலப்பையால் 3 முறை உழவு செய்யுங்கள். டிராக்டர் மூலம் உழவு செய்வதாகயிருந்தால், டிராக்டரில் கூண்டுச் சக்கரத்தை இணைத்து, நிலத்தின் குறுக்கும் நெடுக்குமாக 2 முறை உழுது பின்னர் பரம்புப் பலகையால் நிலத்தினைச் சமப்படுத்தவும்.

''ஏரினும் நன்றாம் எருவிடுதல்'' என்று அன்றே சொன்னார் நம் திருவள்ளுவர். ''எரு செய்வதைஇனத்தான்செய்யான்'' என்பது பழமொழி. எனவே நடவு வயலுக்கு எருவிடுவதில் மிகுந்த கவனம் செலுத்துங்கள். பசுந்தாள் உரம் கிடைக்குமானால் ஏக்கருக்கு 2,300கிலோ(5வண்டி) வீதம், நடவு வயலுக்கு இட்டுத் தழைமிதிக்கும் கருவி அல்லது பர்மியச் சட்டத்தால் தழைகளை நன்கு சேற்றில் அழுந்தும்படிச் செய்யுங்கள். பசுந்தாளுரம் கிடைக்காவிட்டால், ஏக்கருக்கு 10 வண்டி நன்கு மக்கிய தொழு எரு அல்லது கம்போஸ்டு எரு இட்டுச் சேற்றுடன் நன்கு கலக்குமாறு செய்ய வேண்டும். கடைசி உழவின்போது மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களை இடவும். டிராக்டர் உபயோகித்து உழவு செய்தால், இரண்டாவது உழவிற்கு முன்பு மணிச்சத்து, சாம்பல் சத்து உரங்களை இட வேண்டும்.

''தமிழரசு'' ஆகஸ்ட் 16 இதழில் சிபாரிசு செய்யப்பட்டுள்ள அளவு மணிச்சத்து, சாம்பல்சத்து கிடைக்கக் கீழ்க்கண்ட உரங்களை இட வேண்டும்.

### சூபர் பாஸ்பேட்

| | |
|---|---|
| ஐ. ஆர். 8, ஜெயா. | 220 கிலோ. |
| ஐ. ஆர். 5 | 130 கிலோ. |
| கோ-25, கோ-32 | 130 கிலோ. |
| கோ-30, ஜி.இ.பி.24, கோ-19, பி.ஏ.எம்.3, பி.சி.பி. 1 .. | 90கிலோ. |



### முரியேட் ஆப் பொட்டாஷ்

| | |
|---|---|
| ஐ.ஆர்.8, ஜெயா. | 60 கிலோ |
| ஐ. ஆர். 5 | 35 கிலோ. |
| கோ-25, கோ-32 | 23 கிலோ. |
| கோ-30, ஜி.இ.பி.24, கோ-19, பி.ஏ.எம்.3, பி.சி.பி. 1 | 11கிலோ. |

தழைச்சத்து உரத்தை, நடுவதற்கு முன்பு வயலில் இடவும். தழைச்சத்து உரமளிக்க அமோனியம் சல்பேட், அல்லது யூரியாவை உபயோகிக்கலாம். ஐ.ஆர். 8, ஜெயா நெல் வகைகளுக்கு 250 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 110 கிலோ யூரியா போடவும். ஐ.ஆர். 5 நெல்லிற்கு 135 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 60 கிலோ யூரியா தேவை. கோ-25, கோ-32 நெல் வகைகளுக்கு 85 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 37கிலோ யூரியா இடவும். மேலே கூறப்பட்டுள்ள இதர நெல்

வகைகளுக்கு 35 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 15½ கிலோ யூரியா உரமிடவும்.

நடவு வயலைத் தயாரித்து உரமிட்டபின், நாற்றுகளைக் குறிப்பிட்ட வயதில் (நாளில்) பறித்து நட்டுவிட வேண்டும். நெல்லின் வயது 5 மாதம் என்றால், நாற்றின் வயது 5 வாரங்களுக்குஅதிகமாகக் கூடாது. பொதுவாக ஒரு மாத வயதுநெல்லுக்கு ஒருவார நாற்று என்ற அடிப்படையில் நாற்றின் வயதைக் கணக்கிட்டுக்கொண்டு அந்த நாளுக்குள் நாற்றைப் பறித்து நட்டு விடுதல் வேண்டும். ஆனால் நாற்றுவிட்ட 26 முதல் 28 நாட்களில் ஐ. ஆர். 8, ஜெயா ஆகிய வகைகளையும், 28 முதல் 30 நாட்களில் ஐ. ஆர். 5, நெல்லையும், 40 முதல் 45 நாட்களில் கோ-25, கோ-19 வகைகளையும், 30 முதல் 35 நாட்களில் ஜி. இ. பி. 24, கோ-30, பி. ஏ. எம். 3 நெல்லையும், 35 முதல் 40 நாட்களில் பி. சி. பி. 1-யும் நட்டு விடுதலே சிறந்தது. இதற்கேற்ப நாற்றுகளைக் குறிப்பிட்டவயதில் பறித்து நட்டு விடுங்கள்.

நாற்றுகளைப் பறிக்கும் போது வேர் அறுந்து விடாமலும், தண்டு ஒடிந்து விடாமலும் கவனமாகப் பறிக்க வேண்டும். நாற்றின் வேர்களிலுள்ள சேற்றை அகற்ற நாற்றுக்களைத் தரையிலோ அல்லது குச்சியிலோ அடித்தல் கூடாது. நாற்று முடிகளைக் கட்ட நாற்று களையே வளைத்துக் கட்டக் கூடாது. நாற்றுகளைக் கட்டுவதற்கு வாழை நாரையோ அல்லது வைக்கோலையோ உபயோகிக்கவும்.

நாற்றுகளைப் பறித்த பின், நாற்றுகளை வரிசையில் நடவு செய்யுங்கள். வரிசையில் நடவு செய்வதால், கீழ்க்கண்ட நன்மைகள் ஏற்படும்.

* பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான கதிரவனின் ஒளியும் காற்றும் எல்லாப்பயிர்களுக்கும் சமமாகக் கிடைத்திடும்.

* களை எடுத்தல், உரமிடுதல், மருந்து தெளித்தல் ஆகிய வேலைகளை எளிதில் செய்ய முடியும்.

* ஜப்பானியக் களை எடுக்கும் கருவிகளை உபயோகித்து, களை எடுக்கவும், பயிர் வரிசைகளுக்கிடையே மண்ணைக் கிளறிவிடவும் முடியும்; இதனால் புதிய வேர்கள் கிளைக்கவும், தூர்கள் அதிகமாகக் கிளைக்கவும் வழி ஏற்படுகிறது.

* எல்லாப் பயிர்களும் ஒரே யளவாக நிலத்திலிருந்து சத்துக்களை எடுத்துக் கொண்டு, ஒரே மாதிரியாக வளர்ந்து, வாளிப்பான கதிர்களைக் கொடுக்கும்.

* வரிசை நடவு செய்யப்பட்ட வயலில், போதுமானவெளிச்சமும் காற்றோட்டமும் இருக்குமாதலின் பொதுவாக எலிகளால் ஏற்படும் சேதம் மிகவும் குறைவு.

* வரிசையில் நடவு செய்யக் கயிறு பிடித்தோ அல்லது 'மார்க்கர்' என்னும் கோடு கிழிக்கும் கருவியால் நடவு வயலில் அடையாளக் கோடு கிழித்துக் கொண்டோ நடவு செய்யலாம்.

வரிசைக்கு வரிசை 8 அங்குலமும், பயிருக்குப் பயிர் 4 அங்குலமும் இடைவெளி கொடுத்து மேற்கூறிய எல்லா நெல் வகைகளையும் (கோ-25 தவிர) நடவுசெய்யவும். கோ-25 நெல்லிற்கு மட்டும் வரிசைக்கு வரிசை 8 அங்குலமும், பயிருக்குப் பயிர் மட்டும் 5 அங்குலமும் இடைவெளி விடவும். நடவு செய்யும்போது குழிக்கு 2 நாற்றுகள் வீதம் வைத்து நடவு செய்யவும்.

## நடவுசெய்யும் முறை பற்றி ஜப்பானிய நிபுணர்களின் கருத்து

பொதுவாக நம் நாட்டில் நாற்றுகளை மிகவும் ஆழமாக நட்டு விடுவதாகவும், நடும்பொழுது நாற்றுகளைக் கட்டைவிரலால் அழுத்துவதாகவும் அதனால் நாற்றுகள் வளைந்து விடுவதாகவும், அதன் காரணமாகப் பயிர்களின் வளர்ச்சிக்குத் தடை ஏற்படுவதாகவும் பின்னால் மகசூல் குறைந்து விடுவதாகவும் ஜப்பானிய நிபுணர்கள் கூறுகிறார்கள்.

நாற்றுகளை 3 சென்டிமீட்டர் ஆழத்தில் நடுவதே போதுமானது. நடும்பொழுது பயிர்களைக்கட்டைவிரல், ஆட்காட்டி விரல், நடுவிரல் ஆகியவைகளின் இடையே, பயிர்களின்வேர் நடுவிரல் நுனியில் இருக்குமாறு வைத்துச் சேற்றுக்குள் அழுத்த வேண்டும். அவ்வாறு பயிர்களை அழுத்தும் போது, பயிர்களை விரல்களின் நுனி பாதுகாக்க வேண்டும்.

இதுவே நடுவதற்குச் சிறந்த முறை என்று ஜப்பானிய வல்லுநர்கள் கூறுகிறார்கள். இம் முறை முதலில் சற்றுக் கடினமாக இருந்தாலும், நாளடைவில் பழக்கத்திற்கு வந்துவிடும். ''முயற்சி திருவினை ஆக்கும்'' என்பது போல், இம்முயற்சி உழவர் பெருமக்களுக்குத் திருவினைச் சேர்க்கும். எனவே இம்முறையை நம் நாட்டிலும் மேற்கொண்டு உழவர் பெருமக்கள் பெரும் பயன் பெறலாம்.

''பயிர் கிளைத்தால் ஆச்சு, களை கிளைத்தால் போச்சு'' என்ற பழமொழிக்கேற்ப, நடவு செய்த 15-ம் நாள் களை எடுக்கவும். வரிசை நடவுசெய்திருந்தால் களை எடுக்கும் கருவியை உபயோகித்து வரிசைகளுக்கு இடையில் வயலைக் கிளறிவிட்டுக் களை எடுக்கவும்.

**குறுவை நெல்**—இம்மாதத்தில் ஆடுதுறை-27, கோ-29, கருணை, ஐ. ஆர்-8, ஜெயா, பத்மா ஆகிய குறுவை நெல் வகைகளை அறுவடை செய்யலாம். அறுவடையின்போது மழையிருந்தால், மழையினால் அறுவடை பாதிக்கப்படும். குறிப்பாகத் தஞ்சாவூர் மாவட்டத்தில் குறுவை அறுவடை மழையினால் பாதிக்கப்படலாம். ஆனால் தஞ்சாவூர் மாவட்ட உழவர் பெருமக்கள், குறுவை நெல் மழையினால் நனைந்தாலும் கவலைப்படத் தேவை இல்லை. நனைந்த நெல்லை, நெல் உலர்த்தும் இயந்திரங்களுக்கு அனுப்பி, உலர்த்தி, தூற்றி, சுத்தமாக்கிக்கொள்ளலாம். மற்ற மாவட்டங்களில் நெல் மணிகள் முதிர்ந்தவுடனே அறுவடை செய்துவிடவேண்டும். மிகவும் முதிர்ந்து விட்டால், நெல் மணிகள் உதிர ஆரம்பிக்கும். எனவே நெல் மணிகள் உதிர்ந்து சேதமாவதைத் தடுக்கத், தக்க சமயத்தில் அறுவடை செய்யுங்கள்.

### பின் சம்பா அல்லது தாளடி

இம்மாதத்தில் பின் சம்பா அல்லது தாளடிப் பட்டத்திற்கு கோ-25, கோ-32, அம்பை-5 (ஏ. எஸ். டி. 5) ஆகியவைகளை நாற்றுவிடலாம். திருநெல்வேலி,

கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பிசானம் பருவத்திற்கும் தற்பொழுது நாற்று விடலாம். பிசானம் பருவத்திற்கு அம்பை 5, அம்பை-11, அம்பை-13, கோ-25 ஆகியவைகளை நாற்று விடலாம்.

### சோளம்.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் புரட்டாசி மாதத்தில் மாணாவாரி சோளம் விதைப்பது வழக்கம். இப் பகுதிகளில் கே-3 (பெரிய மஞ்சள் இருங்கு) என்னும் பொறுக்கு விதையை விதைக்கலாம்.

வயலை நாட்டுக் கலப்பையாலோ அல்லது சிறிய இரும்புக் கலப்பையினாலோ 2 அல்லது 3 முறை உழவு செய்யவும். ஏக்கருக்கு 10 வண்டி நன்கு மக்கிய தொழு எரு அல்லது கம்போஸ்ட் எரு இட வேண்டும். ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்தும், 9 கிலோ மணிச்சத்தும் கொடுக்கும் இரசாயன உரங்களை அடி உரமாக இடவும்.

கே. 3 சோள விதையை ஏக்கருக்கு 7 கிலோவீதம் விதைக்கவும். விதைகளை அக்ரசான் அல்லது செரசான் அல்லது டி. எம். டி. டீ. மருந்துடன், ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் கலந்தே விதைக்க வேண்டும். மருந்து கலந்த விதைகளைக் கையினால் தூவியோ அல்லது 'கொர்ரு' கலப்பையினாலோ அல்லது விதைக்கும் கருவியினாலோ விதைக்கலாம். மழை ஈரம் காய்வதற்குள், பெரும் பரப்பில் வரிசையில் விதைத்திட 'கொர்ரு' கலப்பை அல்லது விதைக்கும் கருவி ஏற்றது.

கையினால் தூவி விதைத்தால், 8 அடி தூரத்திற்கு ஒரு வரிசை மொச்சை விதைக்கலாம். வரிசையில், விதைத்தால் 4 வரிசை சோளத்திற்கு, ஒரு வரிசை மொச்சை விதைக்கலாம். இவ்வாறு செய்வதால் உழவர் பெருமக்களின் வருமானம் பெருகும்.

கே. 3 சோளத்தை வரிசையில் விதைத்தால், வரிசைக்கு வரிசை 45 சென்டி மீட்டர் ($1\frac{1}{2}$ அடி) இடைவெளியும் வரிசையில் பயிருக்குப் பயிர் 15 சென்டி மீட்டர் (6 அங்குலம்) இடைவெளியும் கொடுக்க வேண்டும். விதைத்த 20-வது நாளுக்குள் களை எடுக்கவும். களை எடுக்க களைக்கொட்டு களையோ அல்லது 'தந்துலு' என்னும் கருவியையோ அல்லது புஞ்சை நிலத்தில் களை எடுக்கும் கருவியையோ உபயோகிக்கவும். இதனால் களைகளை அகற்றுவதுடன், மண்ணின் ஈரத்தைக் காக்கவும் முடியும். கையினால் விதைத்திருந்தால், களை எடுத்த பின், அதிகமாக உள்ள பயிர் களைக் கலைக்கலாம். பயிர் கலைப்பதை, விதைத்த 20 நாட்களுக்குள் முடித்துவிடவேண்டும்.

### கம்பு.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் கரிசல் நிலங்களில் இம் மாதத்தில் மாணாவாரியாகவிதைப்பதற்கேற்ற உயர் விளைச்சல் ரகமான எச்.பி. 3 கம்பு விதைப்பதே சிறந்தது.

கரிசல் மண் நிலங்களில் மாணாவாரியாகப் பயிரிடப்படும் நாட்டுக் கம்பு, கே. 1 கம்பு ஆகியவைகள் ஏக்கருக்கு 200 முதல் 323 கிலோ தானியமே கொடுக்கும். ஆனால் எச். பி. 3 கம்பு சாகுபடி செய்தால் ஏக்கருக்கு சராசரியாக 1,154 கிலோகிராமும், உச்ச அளவாக 1,300 கிலோகிராம் வரையும் தானிய மகசூல் கிடைக்கும்.

எச்.பி. 3 கம்பு விதைக்க நிலத்தை நன்கு புழுதியாக உழுது ஏக்கருக்கு 10 வண்டி



நன்கு மக்கிய தொழு எருவையோ அல்லது கம்போஸ்ட் எருவையோ போடவும். ஏக்கருக்கு 16 கிலோ தழைச் சத்தும், 8 கிலோ மணிச் சத்தும் அளிக்கக்கூடிய இரசாயன உரங்களை அடி உரமாக விதைக்கும் பொழுது இடவும்.

எச்.பி. 3 கம்பு விதைகள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்குகளில் கிடைக்கும். சான்றிதழ் பெற்ற விதைகளையே விதைக்க வேண்டும். மருந்து கலக்காத விதையானால் அக்ரசான் அல்லது கேப்டான் அல்லது டி.எம்.டி.டீ. மருந்துடன் 1 கிலோ விதைக்கு 2 கிராம் மருந்து வீதம், கலந்து விதைக்க வேண்டும்.

ஏக்கருக்கு 1 முதல் $1\frac{1}{2}$ கிலோ விதையை 'கொர்ரு' கலப்பையால் வரிசை வரிசையாக விதைக்கவும். வரிசைக்கு வரிசை 45 சென்டி மீட்டர் ($1\frac{1}{2}$அடி)இடைவெளியும், வரிசையில் பயிருக்குப் பயிர் 15 சென்டி மீட்டர் ($\frac{1}{2}$ அடி) இடைவெளியும் விட்டு விதைக்கவும். விதைத்த 15-வது நாளில் 'தந்துலு' என்னும் கருவியாலோ அல்லது நாட்டுக் கலப்பையாலோ பயிர் வரிசைகளுக்கு இடையில் பயிர் உழவு செய்யவும். விதைத்த 20-வது நாளில் வரிசையில் பயிருக்குப் பயிர் 15 சென்டி மீட்டர் ($\frac{1}{2}$ அடி) இடைவெளி விட்டு அதிகமாக உள்ள பயிர்களைக் கையினால் அகற்றிவிட வேண்டும் வரிசை வரிசையாக விதைக்காமல், விதைகளைக் கையினால் தூவி விதைத்திருந்தால், பயிருக்குப் பயிர் 15 சென்டி மீட்டர் இடைவெளி இருக்குமாறு செய்து மற்றவைகளைக் கலைத்துவிட வேண்டும்.

---

**தானே பயிரிட்டு வளரும் நிலம், தாய்ப்பால் குடித்து வளரும் குழந்தையைப்போல! நிலத்தைக் குத்தகைக்கோ வாரத்திற்கோ விட்டால், நிலத்திலே பயிர் வளராது என்பதில்லை — வளரும் — ஆனால் அதிலே வாஞ்சையிருக்காது.**

---

இம்மாதத்தில் மாநிலமெங்கும் இறவையாகப் பயிர் செய்ய 'எக்ஸ் 3' என்னும் ஒட்டு வீரியக் கம்பு ஏற்றது. ஏக்கருக்கு 3 கிலோ விதையே போதுமானது. இறவையில் எக்ஸ் 3 கம்பு பயிரிட அடியுரமாக ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து, 14 கிலோ மணிச்சத்து 9 கிலோ சாம்பல் சத்து இடவேண்டும்.

### ராகி.

சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, திருச்சி மாவட்டங்களில் இம்மாதத்தில் கோ-2 ராகியை இறவையாகப் பயிரிடலாம். 3 சென்ட் நாற்றங்காலில் 1½ கிலோ விதையை நாற்று விட்டு, நாற்று விட்ட 20 நாட்களில் நடவு செய்யவும். நடவு வயலுக்கு அடியுரமாக ஏக்கருக்கு 9 கிலோ தழைச் சத்து, 9 கிலோ மணிச்சத்து, 9 கிலோ சாம்பல் சத்து இடவும். நாற்றுகளை 6 அங்குலம் × 6 அங்குலம் இடைவெளியில் நடவு செய்யலாம்.

### தினை.

மாநிலமெங்கும் மானாவாரியாக இம் மாதத்தில் கோ-3 தினை விதைக்கலாம். ஏக்கருக்கு 10 கிலோ விதை விதைக்கவும். 1 கிலோ விதைக்கு 2 கிராம் அக்ரசான் மருந்து வீதம் கலந்து விதைகளை விதைக்க வேண்டும். கோ 3 தினை விதைக்க மானாவாரி சோளத்திற்குத் தயாரிப்பது போல் தயாரித்து, அதற்குப் பரிந்துரைக்கப்பட்ட அளவு உரங்களை அடியுரமாக இடவேண்டும். கொர்ரு கலப்பையால் வரிசையில் விதைக்கவும். வரிசைக்கு வரிசை 10 அங்குலமும், வரிசையில் பயிருக்குப் பயிர் 4 அங்குலமும் இடைவெளி விட்டு விதைக்கவும். கையினால் விதைத்தால், பயிருக்குப் பயிர் 4 அங்குலம் இருக்குமாறு விதைக்கவும். மானாவாரி சோளத்திற்குச் செய்வது போலவே இதற்கும் களை எடுக்கவும்.

### சாமை.

மானாவாரியாக கோ-1 சாமையை சேலம், கோயம்புத்தூர், வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் விதைக்கவும். தினைக்குச் சொல்லப்பட்ட சாகுபடிக் குறிப்புகளையே இதற்கும் மேற்கொள்ளலாம்.

### குதிரைவாலி.

தென் மாவட்டங்களில் அண்மையில் வெளியிடப்பட்ட கே. 1 குதிரைவாலியை, ஏக்கருக்கு 5 கிலோ வீதம் விதைக்கலாம். இதனால் தற்பொழுது சாகுபடியில் உள்ள நாட்டு ரகங்களை விட 23 சதம் அதிக மகசூல் பெற முடியும்.

### உளுந்து, கொள்ளு.

இம்மாதத்தில், ஏக்கருக்கு 10 வண்டி கம்போஸ்ட் அல்லது தொழு எரு, 4½ கிலோ தழைச் சத்து, 9 கிலோ மணிச்சத்து ஆகியவைகளை அடியுரமாக இட்டு, 8 கிலோ கோ-1 உளுந்து அல்லது கோ-1 கொள்ளு விதையை மானாவாரியாக விதைத்து மகசூலைப்பெருக்கலாம்.

# அண்ணலின் அமுத மொழி!



ஆலயஞ் சென்று தேங்காய் உடைப்பதோ, கற்பூரம் கொளுத்துவதோ, கடவுள் பணியாகா. ஒவ்வொரு உயிரும் கடவுள் உருவமெனக் கருதி, அவ்வுயிர்கட்கு அன்புப் பணி செய்வதே கடவுள் பணியாகும்.

* * *

உண்மையான ஜன நாயகத்தைப் பற்றிய நம்முடைய கனவு நனவாக வேண்டுமானால், நாம் என்ன செய்ய வேண்டும்? எளிய தாழ்ந்த இந்தியனையும் பெரிய மனிதனோடு ஒப்ப நினைத்து அவனும் இந்த அரசை நடத்துபவனென்று எண்ண வேண்டும்.

* * *

தீமை செய்தவர்க்கும் நன்மை செய்தால் தான் நல்லவன் என்பதற்கு அர்த்தமுண்டு. நன்மை செய்தவனுக்கு மட்டுமே நன்மை செய்தால், அது வெறும் வியாபாரமே யாகும். எவ்விதப் பெருமையும் கிடையாது.

பகுத்தறிவுக்கு எட்டாத ஒன்றில் நம்பிக்கை வைப்பது குருட்டுத்தனமான நம்பிக்கையாகும்.

* * *

உயிரை இழக்கத் துணியாத கோழையிடம் அகிம்சையைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை. அகிம்சை ஆண்மையின் அணிகலன்.

* * *

அகிம்சை என்பது அஞ்சா நெஞ்ச முள்ள வீரர்களுக்கே உரிய ஆயுதம்; கோழைகளுக்கல்ல.

* * *

மக்கள் உள்ளத்தினின்று வெகுளியையும் வெறுப்பையும் விரட்ட வேண்டுமானால், அமைப்பு வேலையில் அரசாங்கமும் முனைய வேண்டும். அமைப்பு வேலை என்னும் அஸ்திவாரத்தின் மேல் அமைந்த கட்டடந்தான் ஒன்று பட்டு உருக்குலையாதிருக்கும்.

# யானையார் பேட்டி தருகிறார்!




மக்களுக்குப் பகுத்தறிவு இருக்கிறதாம்; விலங்குகளாகிய எங்களுக்கு இல்லையாம்; பிறருடைய பொருளுக்கு ஆசைப்படக்கூடாதாம்; பிறரை வேலை வாங்கிப் பிழைக்கக் கூடாதாம்; தன்னுயிரைப் போல் மன்னுயிரையும் நேசிக்க வேண்டுமாம், ''எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி.'' இதெல்லாம் எவ்வளவு பெரிய வேதாந்தம்; கேட்க இனிமையாக இருக்கிறது; ஏன்? பேசவும் சுவையாக இருக்கிறது; இவ்வளவு வேதாந்த அறிவுரை பேசும் மக்கள் ''சொல்லுதல் யாவர்க்கும் எளிய'' என்பதை மறந்து விட்டார்கள்; நாங்கள் எங்கேயோ பிறந்தோம்; எங்கேயோ வளர்ந்தோம். இயற்கை எங்களுக்கென ஓங்கிய மலைகள், குன்றுகள், சோலைகள், காடுகள், ஓடைகள், அருவிகள் எல்லாம் தந்திருக்கிறது. இந்த இரக்கமுடைய (!) மக்களின் கண்ணிலே நாங்கள் பட்டுவிட்டால் பாவம் என எங்கள் இயற்கை அன்னை கருதினாள். எங்கோ எங்களில் சிலர் குகையிலே முனிவர்களைப்போல் வாழ்கின்றனர்; வேறு சிலர் அடர்ந்த மரக்காடுகளிலே மறைந்து காலம் தள்ளுகின்றனர்; மற்றும் சிலர் ஓடைகளின் ஓரங்களிலே, புல்லடர்ந்த புதர்களிலே பரந்த பசிய வெளிகளிலே நாங்களும் உண்டு, எங்கள் வாழ்வும் உண்டு என்று ஒதுங்கி வாழ்கிறோம். ஒரு நேர உணவுக்காக இந்த மனிதர்களின் மாளிகையை நாடியதுண்டா? குளிரும் பனியும்

கொடுமையாகத் தாக்கினாலும் போர்வை கேட்டுப் போனதுண்டா? ஏதோ பேகன் ஒருவன் எங்கள் தோழன் மயிலுக்குப் போர்வை ஒன்று வழங்கிவிட்டானாம்! போதும்! போதும்! கேவலம் இந்தப் போர்வை கொடுத்த கொடையை இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பாட்டுகளால் பாடிக் கொல்லுகிறார்கள். மேடையிலே முழங்கிக் கொல்கிறார்கள்; ஆனால் நாங்கள் நாள்தோறும் இந்த மனித இனத்துக்கு வழங்குவதைக் கொஞ்சமாவது நன்றியுடன் எண்ணுகிறார்களா? நன்றிதான் வேண்டாமையா? எங்களைக்கொன்று குவிக்காமல் இருக்கலாமல்லவா?

எங்கள் இனத்திலே மிகவும் சாதுவானது பன்றி; இந்த இரக்கமுள்ள மனிதர்கள் எங்கள் ஊருக்கு—அதாவது அவர்கள் காடென்று அழைக்கிறார்களே அந்த—எங்கள் நாட்டிற்கு வந்தார்கள். தீ வைத்தார்கள்; ஐயா! இப்போதும் அதை நினைத்தால் என் வயிற்றில் தீப் பிடிக்கிறது. அதிலே எங்கள் பன்றித் தோழர்கள் மூவர் அகப்பட்டு விட்டார்கள். அதிலே வெந்துவிட்டார்கள். அருளுடைய மனிதர்கள் உயிரோடு எங்கள் தோழர்களைக் கொளுத்தி விட்டார்கள்; பிறகு ஆத்திரம் தாங்காமல் எம் பன்றித் தோழர்களை இழுத்தார்கள்; நெருப்பிலே வெந்து ஆறாதிருந்த அந்த உடலில் அவர்கள் விரல்கள் புகுந்து விட்டன; சூடு தாங்காமல் ஆ! என்று விரலை வெளியே இழுத்து வாயிலே வைத்து விட்டார்கள். பன்றித் தோழரின் உடல் ஊன் சுவையை அன்றுதான் உணர்ந்தார்கள்; அந்நாள் முதல் எங்களுக்குச் சனியன் பிடித்தது; பன்றியைச் சுவைத்த அவர்கள் நாக்கு எங்களில் பலரையும் தின்ன ஆரம்பித்துவிட்டது. நாட்டை விட்டுக் கூட்டம் கூட்டமாக எங்களைத் தேடி வந்தார்கள். கல்லாலும் கம்பாலும் எங்களைக் கொன்றனர்; வில்லாலும் வேலாலும் வீழ்த்தினர்; இதோடு நிற்கவில்லை. துப்பாக்கி என்று ஒரு கருவியைக் கொண்டு வந்து தூரத்திலிருந்தே சுட்டுக் கொன்றனர். எங்கள் காட்டைக் கொஞ்சம்



கொஞ்சமாக அழித்து வருகின்றனர்; நாங்கள் பதுங்கியிருந்த பாறைகளையும் குகைகளையும் வெடிமருந்தால் உடைத்தனர்; கண்விழியா எங்கள் குட்டிகளைக் கவர்ந்து சென்றனர்; எங்களில் சிலரின் தோலை உரித்துப் போர்த்தினர்; நகங்களைக் கவர்ந்தனர்; கொம்புகளைக் கொண்டனர்; மயிரை வெட்டினர்; பல்லைப் பிடுங்கினர்; அவர்கள் புலனடக்கித் தவம் செய்ய எங்கள் தோழரின் புலித்தோலும் மான்தோலுந்தான் வேண்டுமாமே! என்ன தவமய்யா இது! அவர்கள் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் எங்கள் தோழராகிய புலியாரின் பல் வேண்டுமாமே! புலிப்பல் தாலி என்று அவர்களே புகழ்ந்து கொள்கிறார்கள்; என்ன! கொடுமை! எங்களில் புலியாரோ, கரடியாரோ எங்கள் உறைவிடத்தை விட்டுத் தப்பித் தவறி அவர்கள் ஊருக்குச் சென்றுவிட்டால் எங்களைச் சித்திரவதை செய்து விடுகிறார்கள். 'ஒருகுலத்துக்கு ஒரு நீதி'.

இப்படியெல்லாம் எங்கள் உறைவிடங்களாகிய காட்டை எரித்து, அழித்து எங்கள் இனத்தவரிலே பல்லாயிரக் கணக்கானவரைக்கொன்று, காட்சிச் சாலை என்ற பெயரிலே எங்களைக் கம்பிக் கூண்டுகளிலே சிறைப்படுத்தி — வேடிக்கை காட்ட எனச் சர்க்கஸிலே எங்களை அடிமையாக்கி வரும் இந்த 'நாகரீகம்' மிக்க மக்களுக்கு எங்களிடம் பாசமாம்; இரக்கமாம்; அருளாம்; அன்பாம்; எங்களுக்கென்று சரணாலயம் அமைத்துத் தந்திருக்கிறார்களாம்! என்னால் பேச முடியவில்லை; கண்ணீர் வருகிறது; தோழர் யானையாரைக் கேளுங்கள்; அவரே சொல்லுவார்; ''நெஞ்சு பொறுக்குதில்லையே; இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்'' என்று சொன்ன அந்தச் செஞ்சொற் புலவன் பாரதி எங்களிடம் அன்புள்ளவன்; வாழைப்பழமும் தேங்காயும் ஆண்டவனுக்கு வழங்குமுன் எங்கள் தோழன் யானைக்குக் கொடுத்த உத்தமன்; அவனுக்கு நாங்கள் தீங்கிழைத்துவிட்டோம்; உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்து விட்டோம்; அந்த மகாகவியை மதம் பிடித்த எங்கள் யானைத் தோழன் செய்த........... நாக்கு எழவில்லை மேலே பேச; அதன் பயனைத்தான் இன்று நாங்கள் அனுபவிக்கிறோம். சரி; யானைத் தோழரே! நம் ஊருக்கு விருந்தினராக வந்திருக்கும் இவர் ஏதோ நம்மைப் பற்றி அறிய விரும்புகிறாராம்; அவர்களுக்கு உதவுங்கள். உங்கள் மூதாதை பாரதிக்குச் செய்த பழிச்செயலை மீண்டும் செய்து விடவேண்டாம்; ''யானைஅறிந்தறிந்தே கொல்லும் பாகனை'' என்று சமண முனிவனே உங்களைப்பற்றிச் சான்றிதழ் வழங்கிவிட்டான்; சரி; நடப்பது நடக்கட்டும்''

இப்படிச் சொல்லிக்கொண்டு என்னை யானையாரிடம் அறிமுகப்படுத்திவிட்டுத் தந்திரமுள்ள நரியார் மறைந்து விட்டார்.

சரணாலயத்தேயுள்ள யானைத் தோழர் என்னை நிமிர்ந்துபார்த்தார்; திடீரெனத் தும்மினார் யானையார்; என்னைத் தூக்கி வாரிப் போட்டுவிட்டது; 'அஞ்சி அஞ்சிச் சாவார்' என்று அமரகவி என்னை நினைத்துத்தான் எழுதினாரோ?

யானையார் பேசுகிறார்: நீங்கள் -அதாவது மனிதனாகிய நீ-என்னுடைய சாம்ராஜ்யத்திற்கு வந்திருக்கிறாய்; உன் மனித இனம் எங்களுக்குத் தனிப்பட்ட முறையில் செய்து வரும் கொடுமைகள் பலப்பல; காட்டிலே கூட்டம் கூட்டமாய்த் திரியும் எங்கள் இனத்தைக் கவர அவர்கள் செய்யும் நயவஞ்சகம் உங்களுக்குத் தெரியாததல்ல; எங்கள் ஊருக்

குள்ளே பரந்த வெளியில் படை
டுத்துப் பள்ளம் தோண்டி அதனை மென்பலகையால் மறைக்கிருர்கள்; அதன் மீது கரும்பும் தென்னையும் பொய்யாக நட்டு வைத்து விட்டுப் பரணிலே மறைந்து பறைகளை முழக்குகிருர்கள்; ஓசை கேட்டுக் கலைந்து ஓடி வரும் நாங்கள் கரும்பையும் தென்னையையும் ஆசையுடன் தின்ன வந்து பள்ளத்திலே வீழ்ந்து விடுகிருேம் 'பழகியவர்க்குப் பள்ளம் தோண்டுவதில்' பலே கெட்டிக்காரர்கள் இந்த மனிதர்கள்; தப்பித் தவறிப்பள்ளத்திலே விழுந்த நாங்கள் சும்மா இருப்போமா? கரைகளைக் கொம்பால் குத்துவோம்; மண்ணைச் சாய்ப்போம்; மேலே ஏற முயல்வோம்; ஆனல் எங்களைக் கைதூக்கிவிட அவர்கள் முயலாமல் தடுத்துப் பள்ளத்திலே பட்டினி போடச் செய்வார்கள்; உடல் வலிமை தளர்ந்து உள்ளம் சோர்ந்து 'ஆவி அகத்ததோ புறத்ததோ' என்னும் நிலைமையில் இருப்போம் அல்லவா? அப்போது எங்கள் இனத்தாரைக் கொண்டு வந்து எங்களுக்கு ஆசை காட்டுவார்கள். வயிற்றுப் பசி காரணமாக முன்பு பள்ளத்தில் வீழ்ந்தோம்; இப்போதோ காதல்பசி வசப்பட்டு எங்கள் இனத்தார் உதவி கொண்டு மேலே வந்து சேருகின்ருேம்; முனிவர்களே இந்தப் பசியால் தவம் குலைந்து ஊர்வசி, திலோத்தமை என்று ஊர்சிரிக்க ஓடினர்களாமே! அந்த விசுவாமித்திரன் விஷயம்தான் உங்களுக்குத் தெரியாதா? பின் எங்கள் நிலை சொல்லவும்வேண்டுமா? ஆசைகளால் மோசம் போனேம்; மனித இனத்துக்கு அடிமையானேம்.

என்ன மனிதத் தோழரே! விழிக்கிறீர்; ஒன்றும் தெரியாதவர் போலப் பாசாங்கு செய்கிறீரே; எங்களிற் சிலரைக் காட்டை விட்டு நாட்டிற்கும் கொண்டு வந்தனர்; கோவிலிலே கொண்டு வந்து கட்டினர்; குழந்தைகளைச் சுமக்க வேண்டும்; அரையணுக் காசுக்காக வந்தவர்களையெல்லாம் துதிக்கை தூக்கி அவர் தலையில் வைத்து ஆசீர்வதிக்க வேண்டும்; அந்தத் துதிக்கை வளைந்து வளைந்து நோவதை உங்கள் இனம் உணர்வதில்லை; ஏதோ சர்க்கரையும் தேங்காயும் தருவார்கள்; அதிக வேலை இல்லை, உண்மைதான்; ஆனல் அடிமை வாழ்வுதானே; எங்களில் வேறு சிலரை வேலைக்கும் பயன்படுத்துகின்றனர். காட்டிலே வெட்டப்படும் பெரிய மரத்தடிகளைக் கயிற்றிலே கட்டிவிடுவார்கள்; அவற்றை எங்கள் பற்களால் கடித்து இழுத்துக்கொண்டு வரவேண்டும். உண்ணுதற்கு இயற்கை கொடுத்த வாயை உங்கள் மனிதர்கள் எப்படி உபயோகிக்கிருர்கள்; என்ன சும்மா வாயை மூடிக் கொண்டிருக்கிறீர்களே! எங்களில் இன்னும் சிலரைச் சர்க்கசில் வேடிக்கை காட்டக் கொண்டு போய்விடுகிருர்கள்; ஒரே மரக் கட்டையின்மீது நான்கு கால்களையும் ஒன்ருய்ச் சேர்த்து உடம்பை அடக்கி ஒடுக்கி எங்களை அந்தக்கருப்புச் சட்டையும் முறுக்கு மீசையுமுள்ள சர்க்கஸ்காரர் நிற்கச் செய்யும்போது இப்படி வாழ்வதை விடப் பிராணனையே விட்டு விடலாமா என்றே தோன்றும். இது என்ன வாழ்வு; இவற்றையெல்லாம் பார்க்கும்போது இந்த முதுமலைச் சரணலய வாழ்வு பரவாயில்லை; இந்தியாவிலேயே மிகச் சிறந்த சரணலயம் இந்த முதுமலைச் சரணலயமே என்று தான் சொல்லவேண்டும். எந்த விதத் தடையுமில்லாமல் ஒரே இடத்தில் நாங்கள் கூட்டம் கூட்டமாய் வாழ்கிருேம். இந்தச் சரணலயத்தைப் பார்த்தீர்களா? தமிழகத்தின் வடமேற்கெல்லையில் மைசூர், கேரள மாநிலங்களை ஒட்டி 3,000 அடி உயரத்தில் உள்ள மலைக்காடுகளில் உள்ள இந்தச் சரணலயம் 124 சதுர மைல் பரப்புள்ளது; நீலகிரி மாவட்டத்திலே கடலூர் பகுதியில் தான் இருக்கிருேம்; என்ன



உங்களுக்கு பூ நூல் போதிக்கிறேனு? எங்கள் சரணலயப் பெருமையைப்பற்றிப் பேசுவதில் எனக்கும் மகிழ்ச்சிஉண்டல்லவா? அப்புறம் சொல்கிறேன்; கேளுங்கள்; என்ன? பசிக்கிறதா? இளநீர் கொண்டு வரட்டுமா? கரும்பு தரட்டுமா?''

நான் உண்மையாகவே களைத்திருந்தேன்; இந்த யானையார் கூறும் கதை சோகமாகத்தான் இருக்கிறது; தன்னலமுற்ற மனிதர்கள் பிறவிலங்குகளை அடிமைப்படுத்துவது கொடுமைதானே! இயற்கை அன்னை அளித்த இனிய காட்டிலே வாழவேண்டிய இந்த யானைகளை நாட்டிலே கொண்டு வந்து வாட்டி அடிமைப்படுத்துவது பாபம் தானே! என எண்ணிக் கொண்டிருக்கும்போது அந்த யானை நான்கு இளநீர்களை என் முன் கொண்டுவந்து மெல்லெனத் துதிக்கையால் வைத்தது; 'இன்ன செய்தார்க்கும் இனியன செய்யும்' அதன் இயல்பு என்னைக் கவர்ந்தது.

''இளநீரைப் பருகுங்கள்'' என்று சொல்லிவிட்டு யானை பேச்சைத் தொடர்ந்தது. ''இந்த முதுமலைச் சரணலயம் உதகை-மைசூர் சாலையில் உதகமண்டலத்திலிருந்து 42 மைல் தொலைவில் அமைந்துள்ளது. மைசூர் அல்லது உதகமண்டலம் ஆகிய இடங்களிலிருந்து இச்சரணலயத்திற்கு பஸ் மூலமாக வரலாம்; மைசூரிலிருந்து 58 மைல் தூரம் உள்ளது. இதன் மிக அருகிலுள்ள விமான நிலையம் கோயம்புத்தூர்; புகை வண்டி நிலையம் உதகமண்டலம்; எங்கள் குட்டிகளும் விமானத்தில் அயல் நாடுகளுக்குப் போனதுண்டு; பண்டித நேரு தன் செல்லமகள் பெயராகிய 'இந்திரா' எனும் பெயரைச் சூட்டி எங்கள் குட்டிகளில் ஒருத்தியை ஜப்பானுக்கு அனுப்பியது இப்போது நினைவுக்கு வருகிறது. அங்கே எவ்வளவு நல்ல வரவேற்பு எங்கள் இனத்திற்குக் கிடைத்தது தெரியுமா? சரி ; அது கிடக்கட்டும்; இந்தச் சரணலயத்தைப் பாருங்கள்;அடர்த்தியான காடுகள்; மிக்க நலமுடைய மரங்கள்; பல விந்தைச் சுவையுடைய கனிகள்; எந்தப் பக்கத்தையும் மறைக்கும் மலைகள்; அங்கே பாடி நகர்ந்துவரும் நதிகள்; நெஞ்சில் கனல் மணக்கும் மலர்கள்; நீளக்கிடக்கும்

மலைத் தொடர்கள். இப்படி ஆறுகளும் அருவிகளும், குளம், குட்டைகளும் இருப்ப தால் எங்கள் சொந்த இடமாகவே இந்தச் சரணாலயம் பொலிகிறது. இங்கே நாங்கள் 50-க்கும் மேற்பட்டவர்கள் வாழ்கிறோம்; இங்கு நாங்கள் சுதந்திரமாகவே சுற்றித் திரிகிறோம்; எங்களைக் காண நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் உங்களினத்தவர்கள் வருகிறார்கள்; வந்தவர்களை வரவேற்பதில் எங்களுக்குச் சமமாக நீங்கள் இருக்க மாட்டீர்கள்; விருந்தினர்கள் உங்கள் இல்லங்களுக்கு வந்தால் காரிலே ஊரைச் சுற்றி நீங்கள் காட்டலாம்; நாங்களோ எங்கள் தலையிலே சுமந்து எங்களிடத்தை, எங்களினத்தாரை, எங்களோடு வாழும் 100-க்கும் மேற்பட்ட துள்ளித்திரியும் புள்ளிமான் கூட்டங்களை, 80-க்கும் மேற் பட்ட காட்டெருமைகளை இன்னும் பலவகைப்பட்டவர்களையெல்லாம் காட்டு கிறோம்; ஆனால் எங்கள் மாவட்ட வன விலங்கு அதிகாரிக்கு முன்னரே தெரிவித்து விடவேண்டும்: எங்களை அடக்கி ஆள்வ தால் அவர் அதிகாரிதானே!''



''ஆமாம்! அன்பு யானையாரே! உங்கள் வாழ்க்கை சோகமாகவும் உருக்கமாகவும் இருக்கிறது; ஆனால் எப்போது உங்களைப் பார்க்கமுடியும்? எப்போதும் பார்க்கலாமா?''

''என்ன! நாங்கள் நுழைவுச் சீட்டா கேட்கிறோம்; வசதியான காலமென்றால் உங்களுக்கும் நல்லது தானே! ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை பருவகாலம் நன்றாக இருக்கும்; காலை ஆறு மணி முதல், 9 மணி வரை, முடிந் தால் உங்கள் தோழர்களை அழைத்து வாருங்கள்; என்ன! காலையில் எழுந்திருக்கக் கஷ்டமா? மாலையில் தான் வாருங்களேன். மாலை மூன்று மணி முதல் 5 மணிக்குள்ளாக வாருங்கள்; மற்றநேரங்களில் நாங்கள் அந்தரங்கமாகப் பல பேசிக் கொண்டிருப்போம்; விளையாடிக் கொண்டிருப்போம்; அப்போது——நீங்கள் பார்க்க,....''

''ஆமாம்; யானைத்தோழரே! நீங்கள் இனம் பெருக்குவதுபற்றி ..?''

''அதுவா? சொல்கிறேன்; உங்களைப் போலக் "கலகலெனப் பொல பொலெனப் புற்றீசல் போல" நாங்கள் பெறுவதில்லை; மிகக் குறை வாகவே பெறுவோம்; இதற்கு மாத்திரை களோ, நிரோத்தோ, கருப்பச் சிதைவுகளோ கையாள்வதில்லை; புலனை வென்றே வாழ்கிறோம்; பகுத்தறிவு இப்போது யாருக்கெனப் பகுத்தறிந்து கொள்ளுங்கள்; ஒரு புலவர் கூட எங்கள் இனத்தைப் பற்றி '' பன்றி பல ஈன்று மென்ன; குஞ்சரம் ஒன்று ஈன்றதனால் பயனுண்டாமே '' என்று பாடியிருக்கிறார்.

மன்னர் படையிலே, பழங்காலத்திலே முன்னின்று போராடிய பெருமை எங்களுக்கு உண்டு; '' யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன் '' என்பது முது மொழி. அதனால்தான் ஆசை பிடித்த மனித இனம் நாங்கள் இருப்பதை விடக் கொன்றே ஆயிரம் பொன்னைப் பெற்றுக் கொள்கிறதோ '' என்று கூறிக்கொண்டே சரணாலயத்தில் தன் கூட்டத்தில் சென்று அந்த யானையார் மறைந்துகொண்டார்.

—(பாசொலி)


தொலைபேசி எண்: 94 தந்தி: லாக்ஸ்

## க. காளியப்ப நாடார் அன் சன்ஸ்

194, 196, மேற்கு ரத வீதி
(தபால் பெட்டி எண் 22)

**திண்டுக்கல்**

திண்டுக்கல் உறுதியான பூட்டு ரகங்கள், ஏசியன் பெயின்ட்ஸ், G.K.W. போல்ட்ஸ், நட்ஸ், ரிவிட்டுகள், கார்போரண்டம் யுனி வர்சல் லிமிடெட், 'அஜாக்ஸ்' மெருகுத்தாள், சார்மினார் ஆஸ்பெஸ்டாஸ் சிமெண்டுத் தகடு கள், குழாய்கள் மொத்தமாகவும் சில்லறை யாகவும் கிடைக்கும்.




இண்டி பொறியியற் கல்லூரியின் நீச்சல் தடாகம் களைகட்டி நின்றது. சுற்றிலும் ஆடவரும், பெண்டிரும், சிறுவர், சிறுமியரும் வேடிக்கை பார்த்தபடி நின்றனர். அங்கே நீச்சலடிப்பது யார்? மாணவரோ, மாணவியோ அல்ல ! ஒரு சைக்கிள் ! அதன் மீது மாணவர் ஒருவர் அமர்ந்து லாவகமாக சைக்கிள் ஓட்டிக் கொண்டிருந்தார். தண்ணீரைக் கிழித்துக் கொண்டு சைக்கிள் பாய்ந்தோடியவாறு இருந்தது.

மாணவரின் முகத்திலே பெருமித ரேகை நெளிந்தோடியது. அவரே செய்த சைக்கிள் அல்லவா ! மகிழ்ச்சி ஏற்படுவது இயற்கைதானே ! முன்னே இரண்டும், பின்னே இரண்டுமாக நான்கு தகர மிதப்புகளைப் பயன்படுத்தி அவர் இந்தத் தண்ணீரில் ஓடும் சைக்கிளைத் தயாரித்திருந்தார்.

மற்றொரு பகுதியில் ஒரு வகுப்பறையிலிருந்து மற்றொரு கட்டடம் செல்ல ஒரு வேடிக்கையான சைக்கிளைப் பயன்படுத்திக் கொண்டிருந்தார், மற்றொரு மாணவர். அந்த சைக்கிளில் ' சோபா 'வில் சாய்வதுபோலச் சாய்ந்தபடியே செல்லலாம்.

இன்னுமொரு தொழிற்கூடத்தில் ஒரு மாணவர் ஒரு சுவிட்சைப் போட ஒரு யந்திர மனிதன் தானாக நடை போட்டான்.



மின்சாரப் பிரிவில், ஒரு குழந்தை தொட்டிலில் படுத்திருந்தது. அதனருகே சென்று '' அம்மா !'' என்று கத்தினால் தொட்டில் தானாக ஆடியது மின்சார விசிறி தானாக இயங்கித் தென்றலை வீசியது ; வானொலிப் பெட்டி மெல்லிசையை வழங்கியது. தாயில்லாத வேளையில் தொட்டிலில் படுத்துறங்கும் குழந்தை அழுதால், மின்சார உதவியால் தானாக இத்தனை செயல்களையும் இயக்க முடியும் என்பதெல்லாம் காட்டி, மாணவர்கள் அமைத்திருந்த மாயத் தொட்டில் அது. தொட்டிலில் போடப்பட்டிருந்தது பொம்மைக் குழந்தை. !

'' எனக்கும் அப்படி ஒரு தொட்டில் செய்து தா '' என்று ஆவலோடு கேட்டாள் அருகில் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்ற ஐந்து வயதுச் சிறுமி !

'' ஒரு எஞ்சினியரைப் பார்த்துக் கட்டிக்கோ ! இப்படித் தாலாட்டுப் பாடும் தொட்டில் செய்து தருவார் !'' என்று அவளுக்குப் பதில் தந்தார், குறும்புக்காரத் தாத்தா !

'' போ! தாத்தா! எனக்கு இப்பவே வேணும்!'' என்று பிடிவாதம் பிடித்தாள் அந்த விவரம் புரியாத சிறுமி!

175-வது ஆண்டு விழாவினைக் கொண்டாடும் முகத்தான் சென்ற 4-9-70 அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கிண்டி பொறியியற் கல்லூரிப் பொருட்காட்சியின் சில சிறப்புக் காட்சிகள் மேலே தரப்பட்டவை.

இவை தவிர, ரிப்பன் பாலம், மின்சாரப் படிகள் (எஸ்கலேட்டர்), காவிரி அன்னை, விசிலடித்தால் வாயைத் திறக்கும் மாய தேவதையின் பிரம்மாண்டமான தலை உருவம், இரும்புக் கோபுரம், மின் அணுக்களின் ஜாலங்கள்போன்ற அரிய காட்சிகளும் அங்கு இடம் பெற்றிருந்தன.



பொருட்காட்சியில் எல்லாரையும் கவர்ந்த மற்றொன்று, ஆளில்லாமல் தூரத்திலிருந்து இயக்கும் தன்மையால் (Remote Control) தானே ஓடிக்கொண்டிருந்த கார் ஆகும்.

பொருட்காட்சியின் மற்றொரு கூடத்தில் இக்கல்லூரியின் பழைய மாணவர்களில் சுமார் பத்துப்பேர்கள் தங்களது தயாரிப்புகளை அல்லது தாங்கள் விற்பனை செய்யும் பொருட்களை அங்கு காட்சிக்காக வைத்திருந்தனர்.

இது பற்றிக் குறிப்பிடும்போது, ''இக் கல்லூரியில் தனிப்பட்ட முறையில் கடைசியாகப் பொருட் காட்சி நடத்தியது 1952-ல் தான். அதன் பிறகு 1956-ல் ஒரு பொருட் காட்சி நடந்தது. ஆனால், அது பல்கலைக் கழகச் சார்பில் எல்லாக் கல்லூரிகளும் கலந்துகொண்ட பொருட் காட்சி. எனவே, 175-வது ஆண்டினைக் கொண்டாடும் இத் தருணத்தில் மாணவர்களின் செயல்திறனைக் கண்டறியவும், ஆற்றலை வெளிப்படுத்தவும், தக்க விதத்தில் விழாவினைக் கொண்டாட, இவ்வாண்டு இந்தப் பொருட்காட்சியை ஏற்படுத்தினோம். முழுக்க முழுக்க இது மாணவர்களின் சாதனையே ஆகும்.

பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பில் சிறிது மந்த நிலை ஏற்பட்டதாகக் கருத்து உலவி வருகிறது. அதனைக் களைந்திட, பொறியியல் படிப்பு முடித்து வெளியேறியதும் சிறு தொழில்கள் துவங்குவதே சிறந்த வழி என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. நமது அரசும் விரைவாக அதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. எனவே, வெளியில் அவர்களுக்கு ஏராளமான வாய்ப்புக்கள் உள்ளன. அவ்வாறு சிறு தொழிலில் ஈடுபட்டவர்கள் முன்னேறியுள்ளனர் என்பதனைக் காட்டவும் மாணவர்களை ஊக்கப்படுத்தவும், சென்னையிலும் சுற்றுப் புறத்திலுமுள்ள பழைய மாணவர்களை அழைத்து அவர்களையும் இந்தப் பொருட்காட்சியில் கலந்து கொள்ள வேண்டினோம். எங்களது ஆசை பொய்யாகவில்லை. எங்களது மாணவ மணிகள் இந்தப் பொருட்காட்சிக்காக இரவு பகலாகக் கண் துஞ்சாது அரும் பாடுபட்டு, பல அரிய பொருட்களை உருவாக்கியிருந்தார்கள்.

இந்தப் பொருட்காட்சியில் அவர்கள் காட்டிய கைத்திறன், அவர்களுக்கு ஒளி வீசும் எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையை எங்களுக்கும், அந்த மாணவ-மாணவியருக்கும் உறுதியாக ஏற்படுத்தியுள்ளது!'' என்று பெருமிதத்தோடு கூறினார் கல்லூரி முதல்வர் திரு கே. எஸ். ஹெக்டே.

1794-ம் ஆண்டு மே திங்கள் 17-ம் நாள் கிழக்கிந்தியக் கம்பெனியாரால் துவக்கப்பட்ட இதுவே இந்தியாவிலே உள்ள பொறியியற் கல்விக் கூடங்களில் முதலாவதாகும்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் முதலாக யந்திரப் பொறியியல் (1894) மின்சாரப் பொறியியல் (1930), தொலை தகவல்—நெடுஞ்சாலைப் பொறியியல் (1945) ஆகியவற்றைத் துவக்கிய பெருமையும் இக் கல்லூரியையே சாரும்.

1794-ல் எட்டுப் பேர்களுடன் துவக்கிய இக் கல்விக் கூடத்தில் இன்று சுமார் 1,900 மாணவர் பயிலுகின்றனர். ஆண்டு தோறும் சுமார் 300 மாணவர் பட்டம் பெற்று வெளியேறுகின்றனர்.






பருகப்பருக இனிக்கும் பழரச பானம் (ஜூஸ்) சிறுவர் மட்டுமின்றிப் பெரியவர்களும் வெயில் காலங்களில் தாகம் தணிய அருந்தி மகிழ்வது.

கடைகளில் அழகான புட்டிகளில் பழரசங்கள் அடைக்கப்பட்டு விற்பனை ஆகின்றன. உணவு விடுதிகளில் அருந்துவதற்குப் பழரச பானங்கள் கலந்து தருகின்றனர். ஆனால் இவை சற்று விலை அதிகம். விலை அதிகம் என்பதோடு பொதுவாக இவைகளில் 'எசென்ஸ்' அதிக அளவில் கலந்திருக்குமேயொழிய, பழங்கள் குறைவாகவே இருக்கும்.

எனவே, சுவையுள்ள, சத்துள்ள பழ ரச பானங்களை இல்லத்தரசிகள் தங்களது இல்லங்களிலேயே தயாரிக்கலாம்.

சில காலங்களில் சில பழவகைகள் சற்று மலிவான விலைக்குக் கிடைக்கின்றன. உதாரணமாக ஏப்ரல்-மே மாதங்களில் மாம்பழம் ஏராளமாகக் கிடைக்கிறது. வேறு சில காலங்களில், சாத்துக்குடி, திராட்சை, அன்னாசி, தக்காளி போன்ற பழங்கள் மலிவாகக் கிடைக்கலாம். அந்தந்தக் காலங்களில் அந்தப் பழங்களை வாங்கிப் பழச்சாறு தயாரிக்கலாம்.

சென்னை எழும்பூரில் அரசினர் சிறுவர் மருத்துவ மனைக்கு அருகிலுள்ள கஸ்தூரிபா நிலையத்தினர் தங்களது உறுப்பினர்களுக்குப் பழரசம் எப்படித் தயாரிப்பது என்றுபயிற்சி தருவதோடு, உறுப்பினர்கள் பழமும், சர்க்கரையும் கொண்டு வந்தால் பழரச பானம் தயாரித்தும் கொடுக்கிறார்கள். உறுப்பினருக்கு ஆண்டுக்கட்டணம் ரூ. 3. பழரசம் தயாரிக்க ஒரு பாட்டிலுக்கு 35 காசு வசூலிக்கிறார்கள். அங்குச் சென்னையின் பல்வேறு பகுதியிலுள்ள மகளிர் சுமார் 200 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். மகளிர் மட்டுமே இங்கு உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகின்றனர். இங்கு உறுப்பினர்களுக்குக் கற்றுத்தரப்படும் பானம் ஜாம் வகைகள் இங்கே தரப்படுகின்றன.

### கிரேப் ஜூஸ்:

தேவை :

திராட்சைப் பழம் 1 கிலோ (ஆரஞ்சு, அன்னாசிப்பழமாக இருந்தால் தோலும் சக்கையும் அதிக அளவு இருப்பதால், சாற்றைத்தான் கணக்கிட வேண்டும்).

| | |
|---|---|
| தண்ணீர் | 1 கிலோ. |
| சர்க்கரை | 2 கிலோ. |
| சிட்ரிக் ஆசிட் | 4 தேக் கரண்டி |
| சோடியம் பென் சோயட். | $1\frac{1}{4}$ தேக் கரண்டி |

(கடைசி இரண்டும் கடையில் வாங்கலாம்).

செய்ம்முறை :

தண்ணீரையும் சர்க்கரையையும் சிட்ரிக் ஆசிடையும் கலந்து (புளிப்பான பழமாகயிருந்தால் 2கரண்டி சிட்ரிக் ஆசிட் போதும்) அடுப்பில் வைக்கவும். தண்ணீர் சூடாகிச் சர்க்கரை கரைந்ததும் (பாகு ஆக வேண்டியதில்லை) அடுப்பிலிருந்து இறக்கிச் சுத்தமாக வடிகட்டி ஆறவைக்கவும். நன்றாக ஆறியபின் அதில் தோல், விதைகள் நீக்கிப் பிழிந்து வைத்திருக்கும் பழச்சாற்றைக் கலக்கவும். அத்துடன் கிரேப் எசென்ஸ் (இதுவும் கடையில் வாங்கலாம்) 4 தேக்கரண்டி கலந்தால் நல்ல நிறமாகவும் வாசனையாகவும் இருக்கும். பழரசம் கெட்டுவிடாமலிருக்க ஒரு தேக்கரண்டி சோடியம் பென்சோயட் சிறிது வெந்நீரில் கலந்து, தயாரித்து வைத்துள்ள பழரசத்துடன் சேர்த்துக் கொள்ளவும்.

இதனை பாட்டிலில் அடைத்து வைத்திருந்தால் சுமார் 6 மாதத்திற்கு மேல் கெட்டுப்போகாமல் இருக்கும்.

தேவைப்படும்போது ஒரு பங்கு பழரசத்திற்கு இரண்டு பங்கு தண்ணீர் சேர்த்து அருந்தினால் அருமையாக இருக்கும். இதே பக்குவத்தில் சாத்துக்குடி, கமலா ஆரஞ்சு, மாம்பழம், அன்னாசிப்பழம் ஆகியவற்றிலும் பழரச பானங்கள்தயாரிக்கலாம்.

### தக்காளி ஜாம்.

தேவை :

| | |
|---|---|
| தக்காளி | 1 கிலோ. |
| சர்க்கரை | 1 கிலோ. |
| சிட்ரிக் ஆசிட் | 1 தேக் கரண்டி |
| பொட்டாசியம் மெட்டா பை சல்பேட். | ஒரு சிட்டிகை. |

செய்ம்முறை :

தக்காளிப் பழங்களைத் தோலையும் விதைகளையும் நீக்கிவிட்டு நன்ருகக் கடைந்து வைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் சர்க்கரையையும் சேர்த்து அடுப்பில் வைக்க வேண்டும். நன்ருகக் கொதித்து இளம் பாகுப் பருவம் வரும்வரை (கரண்டியில் கோதிஞல் ஒட்டிக்கொண்டு வரும் பக்குவம் வரை) கொதித்த பின் இறக்கி விடவும். நன்ருக ஆறிய பின் பாட்டிலில் எடுத்து வைத்துக் கொள்ளவும். அது கெடாமல் இருப்பதற்காக ஒரு சிட்டிகை பொட்டாசியம் மெட்டா பைசல்பேட் எடுத்து ஜாம் மீது தூவவும். இதுவும் 6 மாதத்திற்கு மேல் கெட்டுப் போகாமல் இருக்கும்.

இட்லி, தோசை, சப்பாத்தி, ரொட்டி ஆகியவைகளுடன் சேர்த்துச் சாப்பிட இந்த ஜாம் மிகவும் சுவையாயிருக்கும்.

இதே பக்குவத்தில், பலவகைப் பழங்களைச் சேர்த்து ''மிக்சட் ஜாம்'' தயாரிக்கலாம். உதாரணமாக, 6 வாழைப்பழம், 2 மாம்பழம், 1 ஆப்பிள், 1 கொய்யா, 1 அன்ஞசிப்பழம், 4 ஆரஞ்சு, 200 கிராம் திராட்சை, 100 கிராம் செரி ஆகியவற்றைக் கலந்து அதற்கு சரிக்குச்சரியாகச் சர்க்கரை சேர்த்து ஜாம் செய்யலாம்.




தக்காளி கச்சப்.

தேவை :

| | |
|---|---|
| பெரிய தக்காளி | 1 கிலோ. |
| சக்கரை | 100 கிராம் |
| மசாலா (ஸ்பைஸ்ட்) வெனிகர். | 100 கிராம் |
| உப்பு | தேவையான அளவு. |

செய்ம்முறை :

தக்காளியைத் தோல் நீக்கித் துண்டு துண்டாக வெட்டி அடுப்பில் வேக விடவேண்டும். கொழகொழவென்று வெந்தபின் உப்பு, சர்க்கரை, மசாலா, வெனிகர் எல்லாம் கலந்து அந்தக் கலவை மூன்றில் ஒரு பங்காக வற்றும் வரை கொதிக்க விட வேண்டும். அதன் பின் இறக்கி வைத்து, ஆறியபின் ஒரு பாட்டிலில் போட்டு வைத்துப் பயன்படுத்தவும்.

இதுவே தக்காளி கச்சப். சப்பாத்தி, பூரி, ரொட்டி (பிரெட்), இட்லி முதலியவைகளுக்குத் தொட்டுச் சாப்பிட இது மிகவும் நன்ருக இருக்கும். அதிலும் மசாலா வாசனைப் பிரியர்களை இது வெகுவாகக் கவரும்.

**குறிப்பு :** இம்முறைகளில் வீட்டிலேயே, பழரச பானம், ஜாம் முதலியவைகள் தயாரித்தால் செலவு மிகவும் குறையும். கடையில் சுமார் நாலு, நாலரை ரூபாய்க்கு வாங்கக்கூடிய இவற்றை வீட்டில் சுமார் இரண்டரை ரூபாய் செலவுக்குள் தயாரித்து விடலாம்.



**பழச்சாறு தயாரிப்புப் பயிற்சி நடைபெறுகிறது.**




# உரமிடும் செலவு குறைய...

"வயிற்றுக்குச் சோறிடவேண்டும், இங்கு வாழும் மாந்தருக்கெல்லாம்" என்று பாடினார் பாரதியார். அவ்வாறு செய்ய வேண்டுமானால் வயல் வளம் பெருக்க வேண்டும்; அதற்கு இரசாயன உரமிடுதல் மிகவும் இன்றியமையாததாகும்.

விளைச்சலில் 40 சத அளவை மண்ணின் வளமும், இரசாயன உரமுமே கொடுக்கின்றன என்பது ஆராய்ச்சியின் முடிவாகும். இன்று தமிழ்நாட்டு உழவர் பெருமக்களால் பெரிதும் விரும்பப்படும் உயர்விளைச்சல் வகைகள் அதிகவிளைச்சலைக்கொடுப்பதற்குக் காரணமே, அவைகள் அதிக அளவு உரத்தை ஏற்றுக்கொள்ளும் சக்தியைப் பெற்றிருப்பதேயாகும்.

சென்ற ஆண்டில், பல உழவர் பெருமக்கள் உயர்விளைச்சல் நெல் வகைகளைப் பயிரிட்டு ஏக்கருக்கு 4 டன், 4½ டன், 5 டன் என்றெல்லாம் மகசூல் பெற்றுள்ளார்கள். இதிலிருந்து இரசாயன உரங்களும், உயர் விளைச்சல் வகைகளுமே தமிழ் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்க வழி வகுக்கும் என்பது புலனாகிறது. ஆனால், பொதுவாக உயர் விளைச்சல் வகைகளுக்கு இரசாயன உரமிடச்செலவு அதிகம் ஆவதாகவும், அதுவும் குறிப்பாக அதிசய நெல் ஐ.ஆர். 8-க்கு இரசாயன உரமிட மிகவும் அதிகச் செலவு ஆவதாகவும் பெரும்பாலான உழவர் பெருமக்கள் கருதுகிறார்கள்.

இரசாயன உரங்களில் அமோனியம் சல்பேட், யூரியா என்ற உரங்களே உழவர் பெருமக்களிடையே மிகவும் பிரபலமடைந்துள்ளன. தழைச்சத்தை மட்டுமே கொண்டுள்ள அமோனியம் சல்பேட், யூரியா ஆகியவைகளை மட்டும் உரமிடப் பயன்படுத்தினால், எதிர்பார்க்கும் மகசூல் கிட்டாது. மணிச்சத்தும், சாம்பல் சத்தும் போதுமான அளவுக்கு இட்டால் தான் மகசூல் பெருகும். எனவே தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து, ஆகிய மூன்றுசத்துகளையும் பயிர்களுக்கு அளிக்க வேண்டுமானால் யூரியா, அமோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட், மூரியேட் ஆப் பொட்டாஷ் ஆகிய நேரடி இரசாயன உரங்களையோ, தழைச் சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகிய மூன்றும் கலந்த கலப்பு உரங்களையோ, அமோனியம் பாஸ்பேட், டை-அமோனியம் பாஸ்பேட், என்.பி.கே. காம்ப்ளெக்ஸ் போன்ற கூட்டு உரங்களையோ இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. இவ்வுரங்களைப்பயன்படுத்தி 3 சத்துக்களையும் பயிர்களுக்கு அளிக்க, செலவு அதிகமாவதாக பெரும்பாலான உழவர் பெருமக்கள் கருதுகிறார்கள்.

'டை-அமோனியம் பாஸ்பேட்' என்னும் கூட்டுஉரம், பற்றிப் பலர் அறியாததனாலேயே, உரமிடும் செலவு அதிகமாவதாக நினைத்துக்கொள்கிறார்கள். உரமிடும் செலவைக் குறைத்து, நிகர லாபத்தைப் பெருக்கிட 'டை-அமோனியம் பாஸ்பேட்' மிகவும் துணை புரியும்.

'டை-அமோனியம் பாஸ்பேட்' என்ற கூட்டு உரம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் சக்தியைக் கொண்டுள்ளது; தழைச்சத்துடன், மணிச்சத்தையும்ஒருங்கே பெற்றுள்ளது. இதில் 18 சதம் தழைச் சத்தும், 46 சதம் மணிச் சத்தும் அடங்கியுள்ளது. அமோனியம் சல்பேட் அல்லது யூரியாவுடன் சூப்பர் பாஸ்பேட்டைச் சேர்த்து உரமிடுவதைவிட, டை-அமோனியம் பாஸ்பேட்டை உரமிட பயன்படுத்துவது மிகவும் சிக்கனமாக உள்ளது.

ஒரு மெட்ரிக் டன் எடையுள்ள டை-அமோனியம் பாஸ்பேட்டின் விலை ரூ. 1,098-88. அமோனியம் சல்பேட், யூரியா ஆகியவைகளின் விலையுடன் ஒப்பிட்டால், இவ்விலை மிகவும் அதிகமாகவே தோன்றும். ஆனால், உண்மையிலேயே அமோனியம் சல்பேட், யூரியா ஆகியவைகளைவிட, டை-அமோனியம் பாஸ்பேட் விலை மலிவானது! எப்படி?

டை-அமோனியம் பாஸ்பேட்டில் அடங்கியுள்ள பயிருணவுச் சத்துக்களின் (Plant-nutrient Contents) அளவை அடிப்படையாகக் கொண்டு கணக்கிட்டால், விலை மலிவானது என்ற உண்மை விளங்கும். ஒரு மெட்ரிக் டன் (1,000 கிலோ) டை-அமோனியம் பாஸ்பேட்டில் 180 கிலோ தழைச் சத்தும், 460 கிலோ மணிச் சத்தும் அடங்கியுள்ளன. இதே அளவு சத்தை 900 கிலோ அமோனியம் சல்பேட்டும், 2,875 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் சேர்ந்தே கொடுக்கக்கூடும். எனவே, 1 மெட்ரிக் டன்டை-அமோனியம் பாஸ்பேட்டிற்கு, 900 கிலோ அமோனியம் சல்பேட்டும், 2,875 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் சேர்ந்தே சமமாகும். அது போலவே, 410 கிலோ யூரியாவும், 2,875 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் சேர்ந்தே 1 மெட்ரிக் டன் டை-அமோனியம் பாஸ்பேட்டிற்குச் சமமாகும்.

900 கிலோ அமோனியம் சல்பேட்டின் விலை ரூ. 502-11 ஆகிறது. 2,875 கிலோ சூப்பர் பாஸ்பேட்டின் விலை ரூ. 980-38 ஆகிறது. ஆக இரண்டும் சேர்ந்து ரூ. 1,482-49 ஆகிறது. ஆனால் ஒரு டன் டை-அமோனியம் பாஸ்பேட்டின் விலை ரூ.1,098-88தான்

ஆகிறது. எனவே ரூ. 399-60-ஐ மிச்சப்படுத்தலாம்.

அதுபோலவே, 410 கிலோ யூரியாவின் விலை ரூ. 391-19-யும், 2,875 கிலோ சூப்பர் பாஸ்பேட்டின் விலை ரூ. 980-33-யும் சேர்த்தால் மொத்தச் செலவு ரூ. 1,371-56 ஆகிறது. ஆனால் ஒரு மெட்ரிக் டன் டை-அமோனியம் பாஸ்பேட்டின் விலை ரூ. 1,098-88 தான் ஆகிறது. இம்முறைப்படி பார்த்தாலும் ரூ.272-68-ஐ மிச்சப்படுத்தலாம்.

எனவே, **அமோனியம் சல்பேட் அல்லது யூரியாவுடன் சூப்பர் பாஸ்பேட்டைச் சேர்த்து இடுவதை விட, டை-அமோனியம் பாஸ்பேட் இடுவதால் ஒரு மெட்ரிக் டன்னிற்கு சுமார் ரூ. 272·00 முதல் ரூ. 400·00 வரை உரத்திற்கு ஆகும் செலவைக் குறைக்கலாம்.**

அடுத்து, 'அதிசய நெல்' ஐ.ஆர். 8-க்கு டை-அமோனியம் பாஸ்பேட்டைப் பயன்படுத்தினால் ஏக்கருக்கு என்ன செலவாகும் என்பதையும், இதர இரசாயன உரங்களைப் பயன்படுத்தினால் ஏக்கருக்கு என்ன செலவாகும் என்பதையும் கவனிப்போம். ஐ.ஆர். 8 நெல்லிற்கு 75 கிலோ தழைச்சத்து, 35 கிலோ மணிச் சத்து, 35 கிலோ சாம்பல் சத்து, இடுமாறு பரிந்துரைக்கப்படுகிறது. இந்த அளவுச் சத்துக்களை அளிக்க என்னென்ன உரங்களை இடலாம், அவைகளுக்கு ஆகும் செலவு என்ன என்பதை கீழ்க் கண்ட முறைகள் விளக்கும்:

*முறை 1 : 76 கிலோ டை-அமோனியம் பாஸ்பேட் (ரூ. 83-52), 135 கிலோ யூரியா (ரூ. 128-81), 58 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் (ரூ. 31-40) ஆகிய உரங்களை ரூ. 243-73 செலவில் இடலாம்.

*முறை 2: 165 கிலோ யூரியா (ரூ. 157-42), 220 கிலோ சூப்பர் பாஸ்பேட் (ரூ. 75-02), 58 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் உரங்களைப் பயன்படுத்தி ரூ. 263-84 செலவில் உரமிடலாம்.

*முறை 3 : 127 கிலோ யூரியா (ரூ. 121-07), 146 கிலோ 12:24:12 காம்ப்ளெக்ஸ் (ரூ. 138-27), 30 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் (ரூ. 16-24) ஆகியவைகளை இட ரூ. 275-58 செலவு ஆகும்.

*முறை 4 : 127 கிலோ யூரியா (ரூ. 121-07), 125 கிலோ 14:28:14 காம்ப்ளெக்ஸ் (147·00), 30 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் (ரூ. 16-24) ஆகிய உரங்களுக்கு ரூ. 284-31 ஆகும்.

*முறை 5 : 104 கிலோ யூரியா (ரூ. 99-23), 175 கிலோ அமோனியம் பாஸ்பேட் (ரூ. 158-47), 58 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் (ரூ. 31-40) ஆகியவைகளுக்கு ரூ. 289-10 செலவு ஆகும்.

*முறை 6 : 88 கிலோ யூரியா (ரூ. 83-96), 250 கிலோ 14:14:14 காம்ப்ளெக்ஸ் உரமிட செலவு ரூ. 298-73 ஆகும்.

*முறை 7 : 375 கிலோ அமோனியம் சல்பேட் (ரூ. 195-27), 220 கிலோ சூப்பர் பாஸ்பேட் (ரூ.75-02), 58 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ்


# பார்க்.:.பேர் பொருட்காட்சி

தமிழகத்து மக்களின் உள்ளங்களை எல்லாம் கவர்ந்திழுக்கும் பார்க்.:.பேர் பொருட்காட்சி வழக்கம்போல் டிசம்பர் மாதக் கடைசியில் தொடங்கப்படுகிறது.

கடைகள், அரங்குகள் அமைக்க விரும்புவோர் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

முதல் வகுப்புக் கடைக்கு வாடகை ரூ. 250.

இரண்டாம் வகுப்புக் கடைக்கு வாடகை ரூ. 200.

கடை 10 அடி நீளம் 10 அடி அகலம் கொண்டது.

மொத்த வாடகையில் 50 சதவீதம் முன்பணமாகச் செலுத்த வேண்டும்; கடை ஒதுக்கப்பட்டவுடன் மீதி 50 சத வீதத்தையும் கட்ட வேண்டும்.

ரேக்ளா விளையாட்டு, காவடி, கரகம், பொய்க்கால் குதிரை நடனம் ஆகியவை பார்க்.:.பேரின் தனிச் சிறப்பு.

எண்ணற்ற மக்கள் கண்டுகளிக்கும் கண்காட்சி இது ஒன்றே.

விவரங்களுக்கு

அசன் அலி-ஆர். எஸ். கன்னையா, ஜே. பி.

சிறப்புச் செயலாளர்கள்

எஸ். ஐ. ஏ. ஏ. லிமிடெட்

சென்னை-3.

(ரூ. 31-40) ஆகிய உரங்களை இட ரூ. 301-69 ஆகும்.

*முறை 8 : 88 கிலோ யூரியா (ரூ. 83-96), 234 கிலோ 15:15:15 காம்ப்ளெக்ஸ் (ரூ. 220-88) ஆகிய உரங்களுக்கு ரூ. 304-84 ஆகிறது.

*முறை 9 : 115 கிலோ யூரியா (ரூ. 109-75), 390 கிலோ 6:9:6 கலப்பு உரம் (ரூ.206-70), 20 கிலோ மூரியேட் ஆப் பொட்டாஷ் (ரூ. 10-83) ஆகியவைகளுக்கு ரூபாய் 327-26 ஆகும்.

*முறை 10 : 88 கிலோ யூரியா (ரூ. 83-96), 390 கிலோ 9:9:9 கலப்பு உரம் (ரூ. 250-38) ஆகிய உரங்களுக்கு ரூ. 334-34 ஆகிறது.

**ஐ.ஆர்.** 8 நெல்லிற்கு மேற்கூறிய 10 முறைகளில் உரமிட முடியுமெனினும், முறை 1-ல் கூறப்பட்டுள்ளது போல் டை-அமோனியம் பாஸ்பேட்டைப் பயன்படுத்தி உரமிடுவதே மிகவும் சிக்கனமானது என்பது தெளிவாகிறது. கலப்பு உரங்களைப் பயன்படுத்தும்போது உரமிடும் செலவு உச்ச அளவாக இருக்கிறது என்பதும் புலனாகிறது. இதிலிருந்து டை-அமோனியம் பாஸ்பேட்டைப் பயன்படுத்தி ஐ.ஆர். 8 நெல்லிற்கு உரமிடுவதால், ஏக்கருக்கு குறைந்தது ரூ. 20-00 முதல் ரூ. 95-00 வரை மீதமாகும் என்பது தெரிய வருகிறது. எனவே, டை-அமோனியம் பாஸ்பேட்டைப் பயன்படுத்தி உரமிடுவதே மிகவும் சிக்கனமாக உள்ளது என்பது தெளிவாகிறது.

இதுபோலவே நிலக்கடலை, கரும்பு, கேழ்வரகு, மற்றும் இதர உயர்விளைச்சல் வகைப் பயிர்களுக்கும் டை-அமோனியம் பாஸ்பேட்டைப் பயன்படுத்தி உரமிடும் செலவைக் குறைக்கலாம்.

இப்படிப் பலவகையிலும் பயனளிக்கும் டை-அமோனியம்பாஸ்பேட்டைப் பயன்படுத்தி, உரமிடும் செலவைக் குறைத்து, உற்பத்தியைப் பெருக்கி, நிகரலாபத்தைஅதிகமாக்கிக்கொண்டு வளமாக வாழுமாறு உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.




கடந்த கால நிகழ்ச்சிகளை மறந்துவிடாமல், இன்றைய நிலை கண்டு இறுமாப்பு அடைந்துவிடாமல், எதிர்காலத்தை எண்ணிப் பார்த்து இன்றைய தமிழ் நாடு அரசு செயல்படுகிறது என்பதற்கோர் எடுத்துக்காட்டு இது !

**நேற்றைய நிலை.**

தமிழ்நாட்டில் உணவுதானிய உற்பத்தி
(லட்சம் மெட்ரிக் டன்களில்).

| | |
|---|---|
| 1950-51 (திட்ட காலத்திற்கு முன்பு) | 31·63 |
| 1955-56 (முதல் திட்ட இறுதியில்) | 45.45 |
| 1960-61 (இரண்டாம் திட்ட இறுதியில்) | 53·13 |
| 1965-66 (மூன்றாம் திட்ட இறுதியில்) | 50·60 |
| 1969-70 (சென்ற ஆண்டில்) | 63·00 |

**இன்றைய நிலை.**

தீவிர சாகுபடித் திட்ட வெற்றியால் தீர்ந்தது உணவு கட்டுப்பாடு ! கட்டாயக் கொள் முதல் நிறுத்தப்பட்டுவிட்டது !! தமிழ் நாட்டிற்குள் எங்கு வேண்டுமானாலும் தடையின்றி அரிசி எடுத்துச் செல்லலாம் !!! இந்த ஆண்டில் (1970-71) உயர் விளைச்சல் தரும் வகைத் திட்டத்தையும், பல பயிர் சாகுபடி திட்டத்தையும் விரிவு படுத்துவதன் மூலமாகவும், இரசாயன உர உபயோகத்தை மேலும் தீவிரப்படுத்துவதன் மூலமாகவும் 67 லட்சம் மெட்ரிக் டன்கள் உணவு தானியங்களை உற்பத்தி செய்ய தமிழ் நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

**நாளைய திட்டம்.**

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (1973-74) 79 லட்சம் மெட்ரிக் டன்கள் உணவு தானியங்களை உற்பத்தி செய்ய தமிழ் நாடு அரசு திட்டமிட்டுள்ளது. இதனால் வயது வந்த ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 18 அவுன்சு உணவு தானியம் கிடைக்கவும், பருவநிலை பாதகமானால் ஏற்படும் தேவைக்காக 10 லட்சம் டன்களை இருப்பு வைக்கவும், விதைத் தேவைக்காக 1.5 லட்சம் டன்களை உபயோகிக்கவும், 3 லட்சம் டன்களை வெளி மாநிலங்களுக்கோ அல்லது வெளி நாடுகளுக்கோ ஏற்றுமதி செய்யவும் வழி பிறக்கும். எனவேதான் தமிழ் நாடு அரசு உணவு உற்பத்தியில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

# முதலாண்டிலே பல விதங்களில் முதல்!

## மதராஸ் ரிஃபைனரீஸ்



ஜனாதிபதி திரு. வி. வி. கிரி அவர்கள் செப்டம்பர் 27, 1969-ல் துவக்கி வைத்ததிலிருந்து எங்கள் வளர்ச்சி தங்கு தடையின்றி சென்றுகொண்டிருக்கிறது.

ஆறு பொருட்கள் உற்பத்தியுடன் தொடங்கிய நாங்கள், இன்று உற்பத்தி செய்வது 11 பொருட்கள்: பெட்ரோல், சமையலுக்கு உதவும் எரி வாயு, டீஸல் எண்ணெய், உயர்ரக கெரோஸின், விமான எரிபொருள் எண்ணெய், ஜெட் எரி பொருள் எண்ணெய், தொழிற்சாலைகளுக்குத் தேவையான எரிபொருள் எண்ணெய், நாஃப்தா, உராய்வு தடுப்பு எண்ணெய்ப் பொருள்கள், தார், கந்தகம்.

போக்குவரத்துச் சாதனங்கள், இல்லங்கள், விவசாயத்துறை, தொழிற்சாலைகள் இவற்றுடன் நாட்டின் பொருளாதார வளர்ச்சி—அத்தனைக்கும் நாங்கள் அளிப்பது-சக்தி.

மதராஸ் ரிஃபைனரி இந்தியாவின் ஒன்பதாவது எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை — ஆனால் பலவிதங்களில் இது முதலாவதாக இருக்கிறது.

- முதன் முதலாக ஹைட்ரஜன் யூனிட் கொண்டது
- முதன் முதலாக 11 கிரேடுகளில் லியூப் பேஸ் ஸ்டாக் கொண்டது
- முதன் முதலாக கந்தகத் தயாரிப்பு யூனிட் கொண்டது
- முதன் முதலாக எல்.பி.ஜி.யை (சமையலுக்கு உதவும் எரிபொருள்) துவக்கத்திலேயே உற்பத்தி செய்தது
- இங்கு செய்யப்படும் சுத்திகரிப்பு முறைகளில் ஒன்று இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் பெட்ரோலியமால் அனுமதி வழங்கப் பெற்றது
- முதன் முதலாக 48.5% மதிப்புள்ள சுதேசி பொருட்களைக் கொண்டு எழுந்த ஆலை இது

*MRL—வளரும் தொழில் பிரதேசத்தில் கேந்திரமாக விளங்குகிறது*

*MRL—வயதில் சிறியது, வளர்ச்சியிலோ மிகப்பெரியது*

**மதராஸ் ரிஃபைனரீஸ் லிமிடெட்**
சென்னை

FDSMR-1496TMA

# கைது செய்தவர்க்குப் பதக்கம்!

ஒரு நீலப்பட்டாடை உடுத்தி வான மங்கை எழிலுக்கு எழில் கூட்டிக் கொண்டிருந்தாள். 'சில்'லென்ற குளிர்ந்த காற்று கூடியிருந்த மக்களின் உள்ளங்களிலே புல்லரிப்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. பாலக்காட்டுப் பள்ளத்தாக்கு வழியாகப் புகுந்து கோவை மாநகர மக்களின் நாடி, நரம்புகளையெல்லாம் வருடி விடும் குளிர்ந்த காற்று மனோரம்யமான கிளுகிளுப்பை ஊட்டிக் கொண்டிருந்த மாலை வேளை. கோவை நகரின் காவல்துறைப் பயிற்சித் திடல் புதுமணப் பெண் கோலம் பூண்டிருந்தது. நாட்டுக் கொடி பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருக்கத் திடலைச் சுற்றிப் பறந்து கொண்டிருந்த வண்ண வண்ணக் கொடிகள் காற்றிலே நாட்டியமாடிக் கொண்டிருந்தன.

நாள் செப்டம்பர் 15. அறிஞர் பெருந்தகை பிறந்த நாள். தமிழகக் காவல்துறைப் படையினருக்குத் தமிழக முதல்வரின் விருதுகள் வழங்கும் விழா, அன்று, கோவை மாநகரில். திடலின் ஒரு மருங்கில் அமர்ந்திருந்த மக்கள் கூட்டம்—அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகரப்பிரமுகர்கள், பெண்டிர், சின்னஞ்சிறுசுகள்—அத்தனை பேரின் விழிகளும் ஒரே திசையை எதிர் நோக்கிக்கிடந்தன. சரியாக மணி ஐந்து............ ''கலைஞர் வந்து விட்டார்'' என்று கூறிக் கொண்டே தனது இருக்கையிலிருந்து குதித்து எழுந்து நின்றார் அருகிலிருந்த என் நண்பர்!

தமிழக முதல்வரின் கார் உள்ளே நுழைந்தது. கூடியிருந்த மக்கள் வெள்ளத்திடையே ஒரே ஆரவாரம்! தூய வெள்ளுடை அணிந்த காவல்துறை அதிகாரிகள், மோட்டார் சைகிள்களில் முன்னும் பின்னும் அணியாக வர, முதல்வர் பவனி வந்தது கண் கொள்ளக் காட்சியாக இருந்தது.........

திடலில் போடப்பட்ட மேடை மீது நின்று, காவல் படையினரின் கம்பீரமான அணி வகுப்பு மரியாதையை முதல்வர் ஏற்றுக் கொள்கிறார். திடலெங்கும் ஊசி விழுந்தால் கூடக் கேட்கும்படியான நிசப்தம்..........அணி வகுப்பு வீரர்களின் காலணி ஓசை தவிர............வேறு ஓசையே கிடையாது...... பாண்டு வாத்தியப் பிரிவினர் வண்ண உடை அணிந்து அழகாக அணி வகுத்துச் செல்கின்றனர். அவர்கள் எழுப்புகின்ற இனிய பாண்டு வாத்திய ஒலி...... ..காவல்துறை வீரர்களின் கண்ணைக் கவரும் அணி வகுப்பு.....முதல்வர் கம்பீரமாகக் காவல்துறைப் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார்!

காவல்துறைத் தலைமை அதிகாரி தமிழக முதல்வரை வரவேற்றுப் பேசுகிறார். ''அரசுக்கும் மக்களுக்கும் காவல் துறையினர் கடமை உணர்வுடனும், உள்ளத்தூய்மையுடனும், நம்பிக்கைக்கும் பாத்திரமாகவும் பாடுபடுவார்கள்'' என்ற உறுதிமொழியினைத் தமிழக முதல்வருக்கும், மக்களுக்கும் அளிக்கிறார் அவர். சீரிய பணியாற்றிய காவல் துறை வீரர்களுக்கு வீரப் பதக்கங்களையும், சிறப்புப் பதக்கங்களையும் வழங்க வேண்டுமென முதல்வரை அவர் கேட்டுக் கொள்கிறார். விருது பெறும் ஒவ்வொரு வீரரின் குண நலன்களையும் செயல் திறனையும் பற்றித் தன் கம்பீரக் குரலில் அவர் படிக்க, விருது பெறும் வீரர்கள் ஒவ்வொருவராக வந்து முதல்வரிடமிருந்து பதக்கங்கள் பெற்ற காட்சி கண் கொள்ளாக் காட்சியாகும்!

வீரப்பதக்கங்களை நான்கு பேருக்கும், தன்னிகரற்ற பணிக்காகச் சிறப்புப்பதக்கங்களை 20 பேருக்குமாக, ஆக மொத்தம் 24 வீரர்களுக்கு முதலமைச்சர் விருதுகள் வழங்குகிறார். பதக்கங்களை வழங்கிய பின் முதலமைச்சரின் கம்பீரக் குரல் ஒலிபெருக்கி மூலமாகப் பரவி வந்து, கூடியிருந்தோரின் செவிகளிலே தேன் மழை போல் பொழிகிறது. முதலமைச்சர் உரையாற்றுகிறார் :—

காவற் படையினரின் அணிவகுப்பு. முதல்வர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்கிறார்.



'' அண்ணாவின் மறைவிற்குப் பின்னர் நான் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு காவல் துறையில் வீரச் செயல் புரிந்தவர்களுக்கு ஊக்கம் அளிக்க இப்படி ஒரு பரிசளிப்பு விழா நடத்த வேண்டுமெனக் காவல்துறைத் தலைமை அதிகாரியிடம் கேட்டுக் கொண்டேன். இந்தப் பரிசு, முதல் அமைச்சர் பதக்கம் என்ற பெயரில் அண்ணா பிறந்த நாளில் வழங்கப்பட வேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தேன். என் கருத்தை ஏற்று, சென்ற ஆண்டு சேலத்திலும், இவ்வாண்டு கோவையிலும் சிறப்பாக இவ்விழா நடந்தேறியுள்ளது.

''தமிழ்நாடு காவல்துறை, அனைத்திந்தியாவிலும் சிறப்புடையது... சென்ற ஆண்டு சேலத்தில் இவ்விழா நடைபெற்ற பொழுது நடந்த ஒரு சம்பவம் இன்றும் என் நெஞ்சத்தில் பசுமையாக இருக்கிறது. அவ்விழாவில் ஒரு விதவை அம்மையார் பதக்கம் வாங்கினார்கள். கொடியவன் ஒருவனைப் பிடிக்கும்பொழுது, தன் கடமையே பெரிதாகக் கருதி உயிரைத் துச்சமாக எண்ணிச் செயலாற்றும்பொழுது உயிர் நீத்தார், அந்த அம்மையாரின் கணவர். உறுதியான குணமும் உத்தமச் சிந்தனையும் படைத்த காவல்துறையைச் சார்ந்த அந்த வீரத்திருமகனாரின் சார்பாகத் தன் கணவனைப் பறிகொடுத்த அந்த அம்மையார் மேடை மீது வந்து பதக்கம் பெற்ற காட்சி இன்னும் என் கண் முன்னால் இருக்கிறது...... அப்படிப்பட்ட கடமை உணர்வுகளை நெஞ்சத்திலே பதித்துக்கொண்ட வீரர்களைக் கொண்டது நம்முடைய காவல்துறை. மிகவும் சிறப்பான முறையில்அவர்கள் செயலாற்றி வருகிறார்கள். சென்னைக் கோடம்பாக்கத்தில் பதுங்கி மறைந்து கொண்டு சதி ஆலோசனை செய்து கொண்டிருந்த ஆந்திராவைச் சேர்ந்த புரட்சிவாதிகளை அற்புதமான முறையில் மடக்கிப் பிடித்துத் தமிழ்நாட்டினுடைய பெருமையினையே உயர்த்தியுள்ளார்கள்.



தன்னிகரற்ற பணிக்காகக் குற்றப் புலனாய்வுத்துறை ஆய்வாளர் திரு. பழனிதுரை மீனாட்சிசுந்தரம் பரிசு பெறுகிறார்.

'' எதிர்க்கட்சியில் நான் இருந்த பொழுதும் காவல்துறையினரைப் பாராட்டியுள்ளேன். ஆட்சிக்கு வந்த பொழுதும் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். எனக்கும் காவல்துறையினருக்கும் நிறையத் தொடர்பு உண்டு. இப்பொழுது நான் வரும்பொழுது முன்னும் பின்னும் போலீசார் புடைசூழ வந்ததை நீங்கள் பார்த்தீர்கள். முன்பு நான் எதிர்க் கட்சியில் இருந்த பொழுதும், பாளையங்கோட்டைச் சிறைக்கு என்னைக் கொண்டு போன போதும், இப்படித் தான் முன்னாலும், பின்னாலும் புடைசூழ அவர்கள் வ[illegible] தான் செய்தார்கள்.

'' இன்று இங்கே பதக்கங்களைப் பல வீரர்கள் பெற்றனர். அதிலே தாசையா என்று ஒருவரும் பதக்கம் பெற்றார். அவர் பதக்கத்தை என்னிடமிருந்து பெறும்பொழுது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது. என்னையுமறியாமல் சிரித்து விட்டேன். அவருக்கும் விஷயம் புரிந்திருக்கும்! நான் மதுரையில் சட்ட எரிப்புப் போராட்டம் நடத்திய பொழுது என்னைக் கைது செய்தவர் அவர்! சிரிப்பு வராமலிருக்குமா? இப்படிப் பல சுவையான சம்பவங்களை நாம் பொது வாழ்வில் சந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

'' காவல்துறை பொதுவானது...... கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது. அரசின் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும், அமைதியை நிலை நிறுத்தி, மக்களின் வாழ்வுக்குப் பாதுகாப்பு அளித்துத் தரவேண்டிய கடமை உணர்ச்சியுடன் பணியாற்ற வேண்டியவர்கள் காவல்துறையினர். தமிழகக் காவல்துறை அனைத்திந்தியாவிலும் சிறப்புடையதாகத் திகழ்வது கண்டு பெருமை அடைகிறேன்.

'' உங்களது தலைமை அதிகாரி சில கோரிக்கைகளை இங்கே வைத்தார்கள். அவர் மிகவும் தந்திரசாலி. ஆயிரக்கணக்கானவர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு சொன்னால் 'இல்லை' என்று சொல்ல மாட்டார்கள் என்று இங்கே சொன்னார்கள். அதில் ஒன்று போலீஸ் கமிஷன் அறிக்கை மிக விரைவில் வந்து நிறைவேற்றப்பட வேண்டும் என்பது. சேலம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு நடந்த பரிசளிப்பு விழாவில் அறிவித்தபடி போலீஸ் கமிஷன் நிறுவப்பட்டு உள்ளது. வெகு விரைவில் கமிஷனிடமிருந்து அறிக்கை கிடைக்கும். அந்தப் பரிந்துரைகளை இந்த அரசு நிச்சயமாக நிறைவேற்றும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்'' என்று முதலமைச்சர் கூறி முடித்தாரோ இல்லையோ........ கூடியிருந்தோர் மகிழ்ச்சிப் பெருக்கினால் எழுப்பியகரவொலி தமிழக முதல்வர் மீது மக்கள் கொண்டுள்ள பாசத்திற்கும் குறிப்பாகக்காவல் துறையினர் கொண்டுள்ள நன்றியுணர்ச்சிக்கும் மரியாதைக்கும் சான்றாகத்திகழ்ந்தது!

கரவொலி அடங்கியதும் மேலும் முதலமைச்சர் சொன்னார்—'' மற்றும் காவல்துறையினருக்கு

நிலப்பட்டா வழங்குதல், வீட்டுமனை வசதி இவை களைப் பற்றிப் பரிசீலித்து மனம் நிறைவு பெறத் தக்க வகையில் ஆவன செய்வேன்.

"மக்களுடன் காவல் துறையினர் ஒத்துழைக்க வேண்டும். பொதுமக்களும் காவல்துறையின ருடன் ஒத்துழைக்க வேண்டும். காவல்துறையின ரும் நம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தான். சமுதாயப் பாதுகாப்புப் பணியில் தான் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.



தன்னிகரற்ற பணிக்காகத் தலைமைக் காவலர் திரு. அ. மாணிக்க நாயுடு பரிசு பெறுகிறார்.

விழாப்பதக்கம் பெற்றவர்களுக்கு என் பாராட்டு தல்கள். மற்றவர்கள் எல்லாம் பரிசு பெறத் தங்களைத் தகுதியுள்ளவர்களாக ஆக்கிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

முதலமைச்சரின் உரை முடிந்ததும், நாட்டுப் பண் இசைக்கப்பட்டு............விழா இனிது நிறைவு பெற்றது.

கண்ணுக்கு விருந்தாய், கருத்துக்கும் விருந்தாய் அமைந்து விட்ட நல்லதொரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மனநிறைவுடன் நான் வீதியில் நடை போட்டேன்.

## காவல்துறையினருக்குத் தமிழக முதல்வரின் விருதுகள்

*(15—9—1970).*

**விருது பெற்ற வீரர்கள் :**

**வீரப்பதக்கம் பெற்றவர்கள் :—**

1 திரு. ஆர். செல்லையா, காவலர், படைக்கலந் தாங்கிய சிறப்புக் காவற்படை, ஆவடி.

2. திரு. டி. நடராசன், காவல்துறை ஆய்வாளர் சிறப்புப் பிரிவு, (குற்றப்புலனாய்வுத் துறை).

3. திரு. ஏ. இராமசாமி, காவல்துறை ஆய் வாளர், தனிப்பிரிவு, குற்றப்புலனாய்வுத் துறை.

4. திரு. எஸ். கணேசன், காவல்துறை ஆய்வா ளர், சென்னை மாநகரக் காவல்துறை.

**சிறப்புப் பதக்கங்கள் பெற்றவர்கள் :—**

*(தன்னிகரற்ற பணிக்காக அளிக்கப்பட்டது)*

1. திரு. நாராயண வஸ்தாது, துணைக் கண் காணிப்பாளர், வட ஆர்க்காடு மாவட்டம்.

2. திரு. கே. நாராயணசாமி, கண்காணிப்பா ளர், தென்ஆர்க்காடு மாவட்டம்.

3. திரு.பி. அப்துல் மஜீது, துணைக்கண்காணிப் பாளர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

4. திரு. எம். வேலுச்சாமி, உதவித்தளவாய், மலபார் சிறப்புக் காவல்படை முதல் அணி, (நேபாவிற்கு முதன்மையில் சென்றவர்).

5. திரு. எம்.எஸ். சுப்பிரமணியம், கோட்ட தீயணைப்புப்படை அதிகாரி, திருச்சி.

6. திரு. ஆர். கோவிந்தராஜுலு, ஆய்வாளர், குற்றப்புலனாய்வுத் துறை, சென்னை.

7. திரு. டி. தாசையா, ஆய்வாளர், திருநெல் வேலி மாவட்டம்.

8. திரு. ஆர். எச். டெய்லர், ஆய்வாளர், ரயில்வே காவல்துறை மாவட்டம், தமிழ்நாடு.

9. திரு.கே.கே. செந்தாமரை சேஷன், ஆய்வா ளர், தஞ்சாவூர் மாவட்டம்.

10. திரு. வி. எஸ். கந்தசாமி, ஆய்வாளர், உணவுப் பிரிவு, குற்றப்புலனாய்வுத் துறை.

11. திரு. வி. முத்தையா, ஆய்வாளர், ஒழுக் கம் கண்காணிப்பு, இலஞ்ச ஒழிப்பு.

12. திரு. எஸ். நடராசன், ஆய்வாளர், உயர் நீதி மன்றத்துப் பிரிவு, சென்னை.

13. திரு. பி. மீனாட்சிசுந்தரம், ஆய்வாளர், சிறப்புப்பிரிவு, குற்றப்புலனாய்வுத்துறை, சென்னை.

14. திரு. பி.ஜே. மானுவல், சேம ஆய்வாளர் சென்னை மாநகரக் காவல்துறை.

15. திரு. சி. அரங்கநாதன், ஜமேதார், படைக் கலந்தாங்கிய சிறப்புக் காவல்படை, ஆவடி.

16. திரு.எம். சோமசுந்தரம், உதவி ஆய்வாளர், குற்றப்புலனாய்வுத் துறை.

17. திரு. ஆர். மாணிக்க நாயுடு, தலைமைக் காவலர், இலஞ்ச ஒழிப்பு கண்காணிப்பு இயக்குநர் அலுவலகம்.

18. திரு. ஆர். கருப்பையா, தலைமைக் காவலர், இராமநாதபுரம் மாவட்டம்.

19. திரு. எம்.டி. சுப்பிரமணியம், காவலர். செங்கற்பட்டு கிழக்கு மாவட்டம்.

20. திரு. கே. வேலாயுதம், காவலர், நீலகிரி மாவட்டம்.

# எதிர்காலத்தை நோக்கி இன்ப ஊஞ்சலில்



## செல்வனும் செல்வியும்

வளமான வாழ்வு. எதிர்காலம் பற்றிய அச்சமில்லை. புன்னகையுடன் வருங் காலத்தை வரவேற்கக் காத்திருக்கும் இக்குழந்தைகளுக்கு மட்டும் இந்த இன்பச் சூழ்நிலை எப்படி வந்தது ? பிறக்கும் போதே அதிர்ஷடத்தை அணைத்துக் கொண்டா பிறந்தனர் ? இலலை.

வருமுன் காக்கும் வகையறிந்த இவர் தம் பெற்றோர், திட்டமிட்டுப் பொருளைச் சேர்த்தனர், திட்டமிட்டே குடும்பத்தைக் காத்தனர். வருவாய் குறைவாக இருப்பினும், குடும்பம் விரிவாகவிலலை. திட்டமிட்ட குடும்பமே தெவிட்டாத இன்பம் என்பதை உணர்ந்து போற்றினர் ; பின்பற்றினர்.

உங்கள் இன்பமும் உங்கள் குழந்தைகளின் வருங்கால இன்பமும் உங்கள் கரத்திலேயே உள்ளது. திட்டமிட்டுக் குடும்பத்தை அமையுங்கள். மட்டில்லா இன்பம் பெறுவீர்கள்.

தமிழகத்தில பதது லடசம் பேர் குடும்ப நலத் திட்டத்தால் பயனடைந் துள்ளனர். வளமிக்க நிறைவாழ்வும் எழில் குன்றா இன்னுடலும் பெற்று மகிழ்கின்றனர். பெற்றோரும் குழந்தைகளும் இனிமைமிக்க எதிர் காலத்தை இப்போதே அமைத்துக் கொண்டனர்.

உங்கள் வாழ்வையும் குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாழ்படுத்திட வேண்டாம் ; பாதுகாத்திடுங்கள் ! உங்கள் மருத்துவரைச் சந்தியுங்கள் ; நண்பர்களிடம் கேளுங்கள் !

குடும்ப நலத் திட்டப் பணியகத்திற்குச் செல்லுங்கள். பயிற்சி பெற்ற பணியாளர்கள் கனிவு காட்டுவர்; கருத்துரை தருவர்; கருவிகளும் கிடைக்கும்; பயன் பெறுக !

*திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்*

வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை - 9

MOULIS




# சிறுவாணி குடிநீர் பெறுகின்றது கோவை

செப்டம்பர் 15, தமிழகத்தின் தவப்புதல்வன் பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்த நாள். ஏழை, எளிய மக்கள் ஏற்றம் பெறத் தமது வாழ்வையே பணயம் வைத்துப் பாடுபட்ட ஏந்தலின் பிறந்த நாளன்று கோவை மாநகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. கொங்கு நாட்டு மக்களுக்கு அன்று இரட்டிப்பு மகிழ்ச்சி. அண்ணா வழி நடக்கும் தானைத் தலைவராம் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கோவைக்கு வருகை தந்திருந்தார். அன்று அண்ணா பிறந்த நாள்; முதல்வரின் வருகை; எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்தது போல் ஒரு சிறப்பு நிகழ்ச்சி அன்று கோவையில் நடை பெற்றது. சிறுவாணி குடிநீர்த் திட்டக் கால்கோள் விழா சீருடனும் சிறப்புடனும் அன்று மாலை கோவை பாரதி பூங்காவில் நடைபெற்றது. கோவை நகர மக்களின் நீண்ட நாளைய கனவு நனவாகிய திருநாள் அன்று; ரூபாய் ஆறரைக் கோடி செலவில் உருவாகும் சிறுவாணி குடிநீர்த் திட்டம்; நீண்ட நெடு நாட்களாகச் செயல்படாமல் தேக்க நிலையில் இருந்துவிட்ட ஒரு பிரச்னைக்கு விடிவு பிறந்தது அன்று. இத்திட்டத்திற்குத் தன்னுடைய பொற்கரங்களினால் கலைஞர் அவர்கள் அடிக்கல் நாட்டிய பொழுது, கூடியிருந்த மக்கள் கூட்டம் மகிழ்ச்சிப் பெருக்கினால் எழுப்பிய ஆரவாரமும் கையொலியும் வானையே அதிர வைத்தன.

மக்கள் கொண்ட மகிழ்ச்சிக்குக் காரணம் இல்லாமலில்லை. வளர்ந்து வரும் கோவை நகரின் குடிநீர்ப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினையாக நீண்ட நெடு நாட்களாக இருந்து வந்துள்ளது. தொழில் துறையில் ஏறு நடை போடும் கோவைப் பகுதி மக்கள், உழைப்புக்குப் பெயர் போனவர்கள். அக் கரிசல் நில மக்களின் உழைப்புத் திறனால், கோவைப் பகுதியே பொன் கொழிக்கும் பூமியாக மாறி வருகிறது. உழைக்கும் கரங்கள் ஊரையே உயர்த்தி வருகின்றன. அவர்கள் கடுமையாக உழைக்கிறார்கள். இயற்கை அவர்களுக்குக் கை கொடுக்கிறது. பாலக்காட்டுக் கணவாய் மூலம் கோவை நகரை வந்து தழுவும் குளிர்ந்த காற்று—தமிழகத்தில் எந்த நகரத்திலும் காணமுடியாத, கிடைக்க இயலாத தட்ப வெப்ப நிலை கோவை நகரைச் சொர்க்கபுரியாக மாற்றியமைக்கச் சாதகமான ஒரு சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. தொழில் வளத்தில் கோவைக்கு நிகர் கோவைதான். அந்தப் பகுதியிலே மக்கள் கடுமையாக உழைக்கிறார்கள்; அயராது உழைக்கிறார்கள்; வளம் கொழிக்கிறது; வாழ்வு சிறக்கிறது. கொங்கு நாட்டு மக்களின் தங்கமான மனம்—சீரிய விருந்தோம்பல் பண்பு; வாழ்விலே முன்னேற வேண்டும் என்பதிலே அவர்களுக்கு உள்ள வலுவான பிடிப்பு; அத்தனைச் செல்வங்கள் இருந்தும் கோவை நகரச் சுற்றுப்புற மக்கள்—போதிய குடிநீர் வசதி இல்லாமல் அவதியுறும் நிலை நீண்ட நெடுநாட்களாகவே நிலவியுள்ளது. இந்நிலையை நன்கு உணர்ந்த மக்கள் அரசு—தமிழக அரசு—இக்குறையினைப் போக்க, கோவை நகர மக்களின் நீண்ட நெடுநாள் தேவையை -நியாயமான கோரிக்கையைத் தீர்த்து வைக்கத் திட்டம் ஒன்றினைத் தீட்டிச் செயல்படுத்த முன் வந்துள்ளது. அத்திட்டம் தான் கோயமுத்தூர் குடிநீர்ப் பெருக்குத் திட்டம்! அத்திட்டத்திற்குத் தான் தமிழக முதல்வர் கோவை

நகரில் 15—9—70-ல் அடிக்கல் நாட்டினார்.

''கோவை மக்கள் அனைவரும் கொண்டாடி மகிழும் நிகழ்ச்சியில் பங்கு கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். கோவையில் குடி தண்ணீருக்குக் கடந்த பல ஆண்டுகளாகத் தீராமல் இருந்த சிறுவாணிப் பிரச்னை தீர்க்கப்பட்டு, அதன் பலனை இந்தப் பகுதி மக்கள் அடைகின்ற பூரிப்பில் இந்த விழா, மிகுந்த உற்சாகம் அளிப்பதாக அமைந்து இருக்கிறது'' என்று தமிழக முதல்வர் தன் உரையின் துவக்கத்தில் குறிப்பிட்டார். உண்மை. நீண்ட நெடு நாட்களாகத் தீர்க்கப்படாமல் இருந்த பிரச்சினை சிறுவாணி பிரச்சினை. ''பெயர்தான் சிறுவாணியே தவிர இப்பிரச்சினை கொடுத்த கஷ்டங்கள் பெரிய அளவாகும்'' என்றார் முதல்வர். இக்கூற்றில் புதைந்துள்ள வரலாற்றுப் பின்னணி சுவையானது.

'சிறுவாணி' உலகப்புகழ் பெற்றது. சிறுவாணி நீர் அத்துணை சுவையுடையது. உலகத்திலேயே கிடைக்கின்ற சுவையான நீர்களில் சிறுவாணியில் கிடைக்கின்ற நீரும் ஒன்றாகும். நமது நாட்டிலும் சிறுவாணி நீர்தான் மிகுந்த சுவையானது என்கிறார்கள். கோவை சிறுவாணித் தண்ணீர் குடிக்கக் குடிக்கச் சுவை தரும்! ஆனால், அதிகமாகக் கிடைப்பதில்லை. நல்லவை அத்தனையும் அப்படித்தானே! மனிதர்களானாலும் சரி, மற்ற பொருள்களானாலும் சரி, நல்லவை அதிகமாகக் கிடைப்பதில்லை; அரிதாகவே கிடைக்கின்றன. சிறுவாணி நீரும் இதற்கு விலக்கல்ல!

மேலே மலைச் சாரலில் அட்டப்பாடி பள்ளத்தாக்கு வழி நிறைந்து ஓடுகிறது சிறுவாணி ஆறு. கோவை நகரிலிருந்து சிறுவாணி 20 மைல்களுக்கு அப்பால் உள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் பகுதி அப்பகுதி. அச்சிறுவாணி நதியிலிருந்து கோவை நகரத்துக்கான குடி நீர்த் திட்டம் 1931-லிருந்து செயல்பட்டு வருகிறது. சிறுவாணி நதியின் குறுக்கே உள்ள சிறு அணையின் மூலம் நீரைத் தேக்கிச் சுரங்கப் பாதையின் வழியாக ஒரு பகுதியைக் கோயமுத்தூர்ப் பக்கமாக நொய்யல் பள்ளத்தாக்குக்குக் கொண்டு வரப்படுகிறது. சுரங்கப்பாதை வழி கொணர்ந்த நீர் சுமார் ஒரு மைலுக்கு மேலுள்ள ஆணையாறு சிற்றாறுக்கு இயற்கையான படிவழி மூலம் கொண்டுசெல்லப்படுகிறது. அங்கு இரு வடிநீர்த் தேக்கத் தொட்டிகளில் நீர் வடிகட்டப்பட்டு 18 அங்குல வார்ப்பு இரும்புக் குழாய்கள் மூலம் சுமார் 21 மைல்களுக்கப்பால் உள்ள கோவை நகருக்குக் கொண்டு வரப்படுகிறது.

மேற்கூறியவாறு உருவாக்கப்பட்டு 1931-லிருந்து செயல்பட்டு வரும் இக்குடிநீர்த் திட்டம் நகரத்தினரில் ஒரு இலட்சம் மக்களுக்குத் தலைக்கு 20 காலன் என்ற அளவில் வழங்குவதற்காகத்தான் அன்று நிர்மாணிக்கப்பட்டது. சிறுவாணி நதியில் சரியான, பெரிய அளவில் நீர்த் தேக்க அமைப்பு இல்லாததால், இத்திட்டம், ஆற்றுவழி செல்லும் நீரைப் பொறுத்துத்தான் உள்ளதாகும். மற்றும் கோடைக் காலங்களில் சிறுவாணி நதிக்கு முக்கிய நீர் நிலையான முந்திக் குளம் நீர்வீழ்ச்சி வரண்டு போகும் தன்மையுடையது. இன்றுள்ள சிறுவாணி குடிநீர் வழங்கும் திட்டம், கோவை நகரைப் பொறுத்தவரையில் 'யானைப் பசிக்குச் சோளப் பொறி' போட்ட கதை தான்! இன்று கோவை நகரின் மக்கட் தொகை சுமார் 3·5 இலட்சமாகும். எல்லா மக்களுக்கும் போதிய குடிநீர் வழங்கவேண்டுமென்றால் சுமார் 90 இலட்சம் காலன் குடிநீர், நாள் ஒன்றுக்குத் தேவைப்படும். இன்றுள்ள திட்டப்படி, நாள் ஒன்றுக்கு 50 இலட்சம் காலன் நீர்தான் கிடைக்கிறது. இதனால் மக்களின் குடிநீர்த் தேவையைச் சரிவரப் பூர்த்தி செய்ய இயலவில்லை. கடந்த இருபது ஆண்டுகளாக இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வந்தும், முழுக்க முழுக்க இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை. ஆனால், இன்றையத் தமிழக அரசு எடுத்துக் கொண்ட பெருமுயற்சியினால் இன்று இப்பிரச்சினைக்கு விடிவு தோன்றியுள்ளது. சிறுவாணி நீர்ப் பிரச்சினை மிகச் சிக்கலான பிரச்சினை. தமிழகம், கேரளம், இரு மாநிலங்களும், கூடிப் பேசித் தீர்வு காண வேண்டிய பிரச்சினையாகி விட்டபடியால், உடனடியாகத் தீர்வு காண முடியவில்லை.

கோவை நகரத்துக்கும், சுற்றுப்புற கிராமங்களுக்குமான குடிநீர்த் தேவையினை 1951 முதல் 1981 வரைக்கும் பூர்த்தி செய்யும் அளவுக்கு 125 லட்சம் காலன் நீர் விநியோகிக்க, சிறுவாணி நதியின் குறுக்கே தக்கதொரு நீர்த்தேக்கம் கட்டுதல் என்பது இத்திட்டத்தின் முக்கிய கூறாகும். கேரள மாநிலத்துடன் தமிழகப் பகுதிகள் இணைக்கப்பட்ட பின்பு சிறுவாணி நதியும், அணையைச் சார்ந்த இடமும் கேரள அரசின் எல்லைக்குட்பட்டதாகி விட்டன. ஆகவே, இதற்காகக் கேரள அரசின் ஒப்புதல் வாங்க வேண்டி வந்தது. இரு மாநில அரசுகளுக்கிடையே இது குறித்துத் தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடந்தன. சிறுவாணித் திட்டக் கால்கோள் விழாவில் தமிழக முதல்வர் இதுபற்றிக் குறிப்பிடும் பொழுது ''பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் பற்றிப் பேசினால் 'சிறுவாணித் திட்டம் எங்கே?' என்பார்கள். சிறுவாணித் திட்டம் பற்றிப் பேசினால் 'பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் எங்கே?' என்பார்கள். அந்த வகையில் ஒன்றோடொன்று இணைந்த பிரச்சினைகள் இவை; பரம்பிக்குளம் ஆளியாறு, சிறுவாணித் திட்டங்கள் பற்றி இரு மாநில அரசுகளும் இறுதிப் பேச்சுவார்த்தைகள் நடத்தி வெற்றி கண்டோம். அதன் பயன்தான் இன்று இங்கு நடக்கும் கால்கோள் விழா'' என்று குறிப்பிட்டார்கள்.

இந்தத் திட்டத்தின் மூலம் சிறுவாணிப் பள்ளத்தாக்கில் 6,500 இலட்சம் கன அடி கொண்ட நீர்த் தேக்கத்தைக் கட்டி, குடிநீர் எடுக்க வசதியுள்ள அமைப்பு மூலம் தற்போதுள்ள சுரங்கப்பாதை வழியே கோவை மாவட்ட எல்லைக்குள் உள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீர் கொண்டு வர ஏற்பாடு செய்யப்படும். சுத்திகரிக்கப்பட்ட பின்னர் 33 அங்குல

விட்டமுள்ள குழாய் மூலம் நீர், கோவை நகருக்குக் கொணர்ந்து விநியோகிக்கப்படும். கோவை நகரத்துக்கும், நகரை ஒட்டியுள்ள சுற்றுப்புறச் சிற்றூர்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, மக்களின் நெடுநாள் குடி நீர்த் தேவை பூர்த்தி செய்யப்படும்.

இத்திட்டத்திற்கு முதலீட்டுத் தொகையாக ரூ. 6.33 கோடி ரூபாயும், ஆண்டொன்றுக்குப் பராமரிப்புச் செலவுக்கு ரூ. 15 இலட்சமும் ஆகும்.

| | ரூபாய் இலட்சத்தில். |
|---|---|
| முன்னோடி வேலைகளுக்காக. | 93·802 |
| தலைமைக் குடிநீர் நிலையம் அமைக்க | 188·843 |
| குடிநீர் சுத்தி கரிப்பு நிலையம் அமைக்க. | 56·000 |
| தலைமையிடத்திலிருந்து கோவை நகருக்குக் குடிநீர் கொண்டுவரும் குழாய்க்காக. | 206·400 |
| அரசுச் செலவுகள் | 84·947 |
| | 632·992 |

இம்முழுத் திட்டத்தையும் மூன்று வகையாகப் பிரித்துச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் தற்பொழுது கிடைக்கும் குடிநீர் அளவு ஐந்து மடங்கு அதிகமாகும்.

இத்திட்டத்தின் கால்கோள் விழாவில் தமிழக முதல்வர் அவர்கள் பேசும்போது ஒரு சுவையான நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார்கள்.

''நீதிக்கட்சி ஆட்சி செய்த காலத்தில் முதலமைச்சர் பனகல் அரசர் அவர்கள் குடி தண்ணீர்த் திட்டத்துக்கு இங்கே இதே இடத்தில் 1935-ல் அடிக்கல் நாட்டினர் என்பதைப் பார்க்க நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நீதிக் கட்சியின் பாரம்பரியத்தில் வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசின் முதல்வனாக இங்கே வந்து சிறுவாணி குடி நீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!

''பனகல் அரசர் நீதிக்கட்சிக் காலத்தில் முதல்வராக இருந்தார். நான் பள்ளியில் படிக்கும் பொழுது அவர் வாழ்க்கைச் சரித்திரத்தைத் துணைப்பாடப் புத்தகமாக வைத்திருந்தார்கள். அவருடைய சரிதத்தை மனப் பாடம் செய்து ஒப்புவித்துப் பள்ளியில் முதல் மார்க் வாங்கினேன். அதே பனகல் அரசர் அடிக்கல் நாட்டிய இடத்திற்கருகில் முதலமைச்சராக வந்து அடிக்கல் நாட்டும் வாய்ப்புக்கிடைத்ததை நினைக்கும்பொழுது நான் மிகவும் கொடுத்து வைத்தவன் என்றே நினைக்கிறேன்.''

மேலும் அவர் பேசுகையில், ''ஒரு மாதம் கழித்துக் கருணாநிதி அடிக்கல் நாட்டினாரே, எங்கே தண்ணீர்? என்று கேட்பார்கள். அப்படிக் கேட்பவர்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியும். இந்தத் திட்டம் நிறைவேற $1\frac{1}{2}$ ஆண்டுகள் ஆகலாம். அப்பொழுது நானும் வந்து உங்கள் மகிழ்ச்சியில் பங்கு கொள்வேன்........'' என்று குறிப்பிட்டார்.

பொதுப்பணித் துறை அமைச்சர் மாண்புமிகு சாதிக்பாட்சா தலைமையில் நடைபெற்ற இவ்விழா கோவை நகர வரலாற்றில், ஒரு மைல் கல்; முக்கியமான திருப்பு முனையாகும்! இத்திட்டத்திற்குப் பச்சைக் கொடி காட்டியாகிவிட்டது. நீண்ட நெடுங்காலமாகத் தேங்கிக் கிடந்த ஒரு பிரச்சினைக்குத் தமிழக அரசு தீர்வு கண்டு விட்டது! கோவை நகர மக்களின் நீண்டகாலக் கனவு இன்று நனவாகத் தொடங்கி விட்டது! உழைப்புக்குப் பெயர் பெற்ற கோவை மாவட்டம், குறிப்பாகக் கோவை நகரம், தொழில் துறையிலும் மற்றத் துறைகளிலும் மேலும் மேலும் ஏற்றம் பெறவும், செல்வம் கொழிக்கவும், வளம் பெருகவும் காரணமாக அமைந்து அவற்றிற்கு வழி வகுத்துத் தரும் சிறுவாணி குடி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட தமிழக அரசினை இதயப் பூர்வமாகப் பாராட்டுகிறது, குடும்பம் குடும்பமாகப் பல்லாயிரக் கணக்கான கோவை மக்கள் அக்கால்கோள் விழாவிலே இதயப் பூரிப்புடன் மகிழ்ச்சி பொங்கக் கோலாகலமாகக் கலந்து கொண்டதே, அதற்கு அசைக்க முடியாத சான்றாகும்!



வ.ச.



# சீரணிச் செய்திகள்

சீரணிப் படையினர் பார் புகழும் வண்ணம் பல நல்ல பணிகளைச் செய்து வருகின்றனர். அவர்கள் உழைப்பால் உருவான பள்ளிக் கட்டடங்கள் பல; சாலைகள் ஏராளம்.

மாவட்டந்தோறும் ஆர்வமுள்ள இளைஞர்களும், பெண்களும் இந்தச் சீரணியில் சேர்ந்து மக்களுக்குச் சீரிய தொண்டாற்றி வருகிறார்கள்.

20 9-1970 ஞாயிறு அன்று சென்னை பெரம்பூர் பகுதியிலுள்ள டாக்டர் பெசண்ட் நகரில் துப்புரவுப் பணி தொடக்க விழா, சீரணிச் சார்பில் நடந்தது. இந்த விழாவில் வேளாண்மை, அரிசனநல அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களும், சீரணி அமைச்சர் திரு. என்.வி. நடராசன் அவர்களும் கலந்து கொண்டனர்.

அமைச்சர் திரு. என். வி. நடராசன் அவர்கள் மண் வெட்டியால் குப்பை கூளங்களை அள்ளிக் கூடையில் கொட்ட, அதனை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்கள் எடுத்துச்சென்று அப்புறப்படுத்தினார்கள். பின்பு இருவரும் நீண்ட துடைப்பத்தினை எடுத்துத் தெருக்களைத் துப்புரவு செய்தார்கள்.

இதைத் தொடர்ந்து ஏராளமான சீரணித் தொண்டர்கள் துப்புரவுப் பணிகளை மேற்கொண்டார்கள்.



# அண்ணலின் திட்டத்தை நிறைவேற்றும் சீரணிச் செல்வங்கள்



20-8-1970 அன்று தர்மபுரியில் மாவட்ட சீரணித் துவக்க விழா நடந்தது. தமிழகக் கல்வி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் மாவட்ட சீரணியை அங்கு துவக்கி வைத்தார்கள். பிற்பட்டோர் மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் திரு. என்.வி. நடராசன் அவர்கள் இந்த விழாவிற்குத் தலைமை தாங்கினார்கள்.

இத்துவக்க விழாவோடு மாவட்ட குடும்ப நலக் கருத்தரங்கும் சேர்ந்து நடைபெற்றது.

இதையொட்டி, சுமார் இரண்டாயிரம் சீரணித் தொண்டர்கள் அணிவகுப்பு நடத்தினர். அவர்களது ஊர்வலத்தில், சீரணியினரின் தொண்டு, குடும்ப நலத் திட்டம், மாவட்டத்திலுள்ள வளர்ச்சிப் பணிகள் ஆகியவற்றைச் சித்தரிக்கும் அலங்கார வண்டிகளும் இடம் பெற்றன.

இந்த பிரம்மாண்டமான அணி வகுப்பினை அமைச்சர்கள் பார்வையிட்டுப் பாராட்டினர்.

இந் நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட படங்கள் இங்கு வெளியிடப்பட்டுள்ளன.



# தலையான செய்தி



[சென்னை பெரிய மருத்துவ மனையின் தனி விடுதி ஒன்றில் மோட்டார் சைக்கிள் விபத்தினால் பாதிக்கப்பட்ட மருத்துவக் கல்லூரி மாணவன் மாணிக்கம் படுக்கையில் சாய்ந்து கொண்டிருக்கிறான். கலைக் கல்லூரியில் படிக்கும் அவன் நண்பன் கண்ணப்பன் வருகிறான் ]

கண்ணப்பன் : மாணிக்கம் ! எப்படிடா இருக்கே? எனக்குத் தெரியவே தெரியாது. இப்போதுதான் ஊரிலிருந்து வருகிறேன். வந்ததும் இந்த அதிர்ச்சியான செய்தியைக் கேள்விப்பட்டேன். எனக்கு ஒரு கடிதம் எழுதக் கூடாதா?

மாணிக்கம் : வாடா கண்ணப்பா! உன்னைப் பார்த்ததுமே எனக்கு உற்சாகமாகஇருக்கிறது. நீ கல்லூரிக்கு விடுமுறை எழுதிக் கொடுத்து விட்டு, உடம்பு சரியில்லாத உன் தாயைப் பார்க்கப் போனாய். நான் கடிதம் எழுதி உன்னை அதிர்ச்சியுற வைக்கலாமா?

க. : நன்றாகத்தானிருக்கிறது! துக்கத்தில் துணையிருக்கத்தான் நண்பன் வேண்டும். நீ என்ன சொன்னாலும்எனக்குச் சமாதானமாகாது. ஆமாம்! ஒரு மாதத்துக்கு முன்னாலே ஒரு நாள் எங்கள் கல்லூரி விடுதி நாளுக்கு உன்னை விருந்தினனாகக் கூப்பிட்ட போது நீ என்ன சொன்னாய்? ''நானும், என் மோட்டார் சைக்கிளும் போட்டி போட்டுக்கொண்டு கீழே உருண்டு விழுந்தோம். மோட்டார் - சைக்கிள் நசுங்கியது. எனக்கு, சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டுள்ளன. என்னுடைய மோட்டார் சைக்கிள் ஒர்க்ஷாப்பிலும், நான் சிராய்ப்புப் பிளாஸ்டருடன் கல்லூரி விடுதியிலும் கிடக்கிறோம்'' என்று சொன்னாய். இதற்குள் நீ எப்படி இரண்டாவது தடவையாக இன்னொரு விபத்தைச் சந்திக்க நேர்ந்தது ?



மூளையில் ஏற்பட்டுள்ள மாறுதலைக் கண்டறிய பரிசோதனை (E.E.G.) நடைபெறுகிறது.

மா. : அதுதான் ஆச்சரியமான விஷயம்! எந்த விபத்தில் கையும், காலும் போகாமல் தப்பித்துக் கொண்டு நகைச்சுவையாக உன்னிடம் வர்ணித்தேனோ, அதே விபத்து தான் இத்தனை நாள் கழித்து என் உயிருக்கு உலை வைக்கப் பார்த்தது!

க. : இது என்னடா வேடிக்கை!

மா. : வேதனையான வேடிக்கைதான்! அன்று பெரிய மருத்துவ மனைக்குப் புறப்பட நேரமாகிவிட்டதே என்று கொஞ்சம் வேகமாக மோட்டார் சைக்கிளில் சென்றேன். இரு-சக்கர வண்டியில் இந்த வேகமும் அவசரமும் ஆபத்தில் தான் போய் முடியும் என்பது நம்மில் பலபேருக்குத் தெரியும். தெரிந்தும் அப்படித்தான் செல்கிறோம்! எதிரில் வந்த ஒரு லாரியையும், பக்கத்தில் வந்த ஒரு டாக்சியையும் கண்டு திசை திருப்ப வழியில்லாமல், அவற்றில் மோதி, விபத்து உண்டாகி விடுமோ என்று நடுங்கி, நடைபாதைப் பக்கம் 'சட்'டென ஒடித்த போது நானும், மோட்டார் சைக்கிளும் ஒன்றாக விழுந்தோம். விழுந்த வேகத்தில் நினைவற்றுச் சிறிது நேரம் அதே இடத்தில் கிடந்திருக்கிறேன். சுற்றிலும் கூடிய கூட்டத்தில் சிலர் பரிவுடன் என்னை ஆசுவாசப் படுத்தி, ஆறுதல் கூறி, சிறிது நேரம் அமரச் செய்து சோடா வாங்கிக் கொடுத்தார்கள். எனக்கு அப்படி ஒன்றும் உடலிலோ, தலையிலோ, பெரிய காயங்களோ, எலும்பு முறிவோ ஏற்படவில்லை. ஆனால் உடம்பில் அங்குமிங்குமாய் இலேசான உரசல்கள்தாம். என் ''டெரிலீன் பேன்ட்'' தரையில் தேய்ந்து கிழிந்து துடையில் சிராய்ப்புக் காயம் பட்டிருந்தது. மோட்டார் சைக்கிள் நசுங்கல்கள் கண்டிருந்தாலும் நல்ல நிலையிலிருந்தது. எனவே நான் எழுந்து மோட்டார் சைக்கிளிலேயே மருத்துவ விடுதிக்குச் சென்றேன். அவசர சிகிச்சைப் பகுதியில் (Casuality Department) தடுப்பு ஊசி போட்டுக்

கொண்டேன். பிறகு வழக்கம் போல் எனக்குரிய வார்டு வேலைகளுக்குச் சென்றேன். அன்றுதான் என்னை உன் விடுதியின் விருந்துக்கு அழைத்தாய் !

க. : அதற்கு நீ நகைச்சுவையாகச் சொன்னதை விளையாட்டுக்கு மிகைப் படுத்திச் சொல்கிறாய் என்று இருந்து விட்டேன். அப்புறம் இரண்டு, மூன்று வாரம் கழித்துத்தான் நான் ஊருக்குப்போனேன்.

மா. : ஆனால் உண்மையில் அந்தநிகழ்ச்சிக்குப் பின் ஒன்றுமே நேராதது போல்தான் மிகவும் நலமாக இருந்தேன் நான். வழக்கம் போல் மருத்துவ மனைக்கும், மருத்துவக் கல்லூரிக்கும் சென்று கொண்டுதானிருந்தேன். இப்படியே ஒரு மாதம் சென்று விட்டது. பூரண நலத்துடன் தான் அந்த ஒரு மாதமும் இருந்தேன். நடந்த விபத்தையே நான் மறந்து விட்டதாகக் கூடச் சொல்லலாம். அப்புறம் கொஞ்சம், கொஞ்சமாகத் தலைவலி ஆரம்பமாகியது. அவ்வப்போது தூக்கமும், மயக்கமுமாக ஒரு குழம்பிய நிலை இருந்தது. பின் சற்றைக்கெல்லாம் பழையபடி சீராகிவிடும். இப்படி மாறிமாறி இந்நிலை நீடித்து என்னை வாட்டி எடுக்க ஆரம்பித்தது. சினிமாவுக்கோ. கடற்கரைக்கோ நண்பர்கள் அழைத்தால் உற்சாகமாகக் கிளம்பும் நான் மந்தத்தோடு மறுக்க ஆரம்பித்தேன். முதலில் இது குறித்து நான் அத்தனை கவலையுறவில்லை. ஆனால் இந்நிலை தொடரவே, உள்ளத்தில் அச்ச உணர்வு தோன்ற ஆரம்பித்தது. உடம்பில் ஏதோ ஒரு நோய் உறைந்துள்ளது என்று சந்தேகப்பட்டேன். அதை நிரூபிப்பது போல் ஒரு வாரத்திற்குப் பின் என் வலது கையும், வலது காலும் சற்று பலவீனமாகி விட்டதை உணர்ந்தேன். பேசும் சக்தியும் சற்று பாதிக்கப்பட்டது.

க. : அடடா! இத்தனை விஷயம் நடந்திருக்கிறதேடா? துணைக்கு ஒரு ஆளில்லாமே எப்படித் தவிச்சிருப்பே நீ?

மா. : அதெல்லாம் ஒன்றுமில்லேடா. நீ அதை நினைத்து வேதனைப்படாதே! நான் பேசும் சக்தியை இழக்கவாரம்பிக்கிறேன் என்றதுமே..



புற்றுநோயுள்ள தசையை எடுத்து மைக்ரோடோம் (Microtome) என்ற நவீன கருவியில் சோதனை செய்யப்படுகிறது.

என்னுடன் படிக்கும் மற்ற மருத்துவ மாணவர்கள் என்னை நியூரோ ஸர்ஜனிடம் ( Neuro Surgeon ) அழைத்துச் சென்றார்கள். நடந்ததனைத்தையும் அவரிடம் தெரிவித்தேன். தலை முதல் கால் வரை என்னைப், பூரணமாகச் சோதித்தனர்: இரவு, பகல் என்று பாராமல் என் நாடித் துடிப்பு, இரத்த அழுத்தம், கண்களில் பாப்பாவின் அளவு ( Size of pupils ) கண்களின் ஆழத்தில் கண் நரம்பின் தோற்றம் (Fundus examination), என் உணர்வு நிலை முதலிய எத்தனையோ விஷயங்கள் தொடர்ந்து குறிக்கப்பட்டன.

E.E.G. பரிசோதனை நடைபெறுகிறது.





நோயாளிக்கு மூளையில் அறுவை சிகிச்சை நடத்துகின்றனர்.

தலையைப் பல கோணங்களில் எக்ஸ்ரே எடுத்தார்கள். நரம்பு மண்டலத்தைச் சூழ்ந்துள்ள நீர் (Cerebro spinal fluid) பரிசோதிக்கப்பட்டது. மூளையின் நுண்ணிய மின்னலைகளில் காணும் மாறுதல்களை அறிய எலக்ட்ரோ என்கெஃபலோ கிராபி (Electro encephalography--E.E.G.) எடுக்கப்பட்டது. கரோடிட் ஆன்ஜியோ கிராபி (Carotid Angiography) யும், வென்ட்ரி குலோகிராபியும் (Ventre culography) மூளைக்குமேல், தலை எலும்புக்குக் கீழ் இடது பக்கத்தில் தோன்றியிருந்த இரத்தக் கட்டியைத் தெள்ளெனக் காட்டி ந்யூரோ ஸர்ஜனின் கண்டுபிடிப்பை (Diagnosis) உண்மையென நிரூபித்தன.

க. : மூளையில் இரத்தக் கட்டியா? நினைக்கவே பயமாக இருக்கிறதடா?

மா. : உடனே இரத்தக் கட்டியை அகற்றி என்னைப் பிழைக்கச் செய்ய ஆபரேஷன் தியேட்டருக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு அதற்குப் பின் என்ன நடந்தது என்று உனக்குத் தெளிவாக விளக்கிச் சொல்ல எனக்கு அப்போது உணர்வில்லை...... சில மணி நேரத்திற்குப் பின்னர் எனக்கு உணர்வு வந்தபோது நான் பின் சிகிச்சை விடுதியில் (Post Operative Ward) இருப்பதை உணர்ந்தேன். மூளை மேல் அமர்ந்திருந்த பெரிய இரத்தக் கட்டி அகற்றப்பட்டதறிந்து அதிர்ச்சியாகவும், மகிழ்ச்சியாகவுமிருந்தது.

என்னதான் நானும் மருத்துவக் கல்வி பயிலும் மாணவன் என்றாலும், எனக்கும் ஓர் அச்சம் ஏற்பட்டது. இன்னும் சற்றுக் காலதாமதமாகியிருந்தால்..? கண்ணப்பா! நீ என்னை விடக் கடுமையாகக் கண்மண் தெரியாமல் மோட்டார் சைக்கிள் ஓட்டுவாயே...... நீ தயவு செய்து இரும்புத் தொப்பி (Helmet) வாங்கி வைத்துக் கொள். கூடவே வேகத்தைச் சீராக்கிக்கொள். என்ன? சுவரை வைத்துத்தானே சித்திரம் வரைய வேண்டும்? கொஞ்சம் முன்னதாகக் கிளம்பினால் நிதான வேகத்தில் எங்கும் போகலாம். நேரத்தைக் கடத்திவிட்டுத் தாமதத்தைத் தவிர்க்க வேகமாகத் துடிதுடிப்பும், பரபரப்புமாகப் போகும்போது நாம் உயிரையே பணயம் வைத்துச் செல்கிறோம் என்று இப்போதுதான் எனக்குப் புரிகிறது!

க. : அதிருக்கட்டும். இப்போது உனக்கு உடம்பு நன்றாக இருக்கிறதா?

மா. : ஓ! என் தலைவலி, குழப்பம், பலவீனம் எல்லாம் இருந்த இடமே தெரியவில்லை. நான் ஒரு புது மனிதனாய், மறு பிறவி எடுத்த நிலையில் இருக்கிறேன். நான் மட்டுமா? என்னைப்போல் எத்தனையோ விபத்துக்குள்ளானவர்கள் இங்கு வந்து புத்துயிர் பெற்றுச் செல்கின்றனர். விபத்து என்று மட்டும் இல்லை. வலிப்பு நோய்களுக்கும், (Epilepsy), மூளைக்குள் அபாயகரமாகத் தோன்றும் கட்டிகளுக்கும், ஆபத்தை விளைவிக்கும் இன்னும் எத்தனை எத்தனையோ மூளை, தண்டுவடம் (Spinal cord) நரம்பு சார்ந்த நோய்களுக்கும் இங்கு தரப்படும் சிகிச்சை ஒப்பற்றது. நுண்ணிய கருவிகளைக் கொண்டு, அதைக் காட்டிலும் நுண்ணிய அளவுகளைக் கணக்கிட்டு, மூளையின் ஆழத்தில் செய்யப்படும் ஸ்டீரியோ டாக்சிக் ஸர்ஜரி (Steriotaxic surgery) மூளை சார்ந்த சில நோய்களுக்கு அருமருந்தாக அமைகிறது. இந்த ந்யூராலஜி-ந்யூரோ ஸர்ஜரி டிபார்ட்மென்டைச் சேர்ந்த (Neurology—Neuro surgery Department) ஸர்ஜன்களும், ஃபிசிஷியன்களும் செய்யும் சேவை ஒப்பற்றது. அதன் தலைமையாளர் புரபசர் டாக்டர் பி. ராமமூர்த்தியை நீ பார்த்திருக்கிறாயல்லவா?

கா. : பார்த்ததில்லை. ஆனால் நிறையக் கேள்விப்பட்டிருக்கிகிறேன்.

மா. : ஆசியாவிலேயே தலைசிறந்த ந்யூரோ ஸர்ஜன்களில் ஒருவராகக் கருதப்படுகிறார் அவர்...... அதோ........ தெரிகிறதே ........உயர்ந்த ஒரு புதுக்கட்டடம்! அது தான் ந்யூராலஜி பிளாக்! அது அவரின் பெருமுயற்சியால் உருவானது. அந்த உயர்ந்த கட்டடத்தில் தான் இனி தலைசிறந்த திறமையாளர்களின் சீரிய பணி தொடரப் போகின்றது.








ஒரு நாளில் கடும்பகலில் உந்துவண்டி தனிலேறி
அருமைமிக ஓரத்தில் அயர்ந்தமர்ந்து செல்கையிலே,
வெய்யில்து வெம்மையினால் விழியிமைகள் தொய்ந்திணைய
மெய்சோர்ந்து துஞ்சிவிட்டேன் விண்ணகத்தே பறந்துசென்றேன்!
காந்தியண்ணல் கார்முகிலில் கதிரவனாய் எதிர்வந்தார்!
பூந்துகிலின் தமிழ்ப்புலவர் நீரன்றோ ? புகலுமென்றார்.
சொல்லுதற்கு நாஎழவும் துணிவின்றித் தலையசைத்தேன்!
மெல்லெனவே அரவணைத்தார் மேலுச்சி மோந்திட்டார்!
தமிழ்நாடு காண்பதற்குத் தவம்செய்தேன், சான்றோரே !
அமிழ்தான தாய்மொழியே அனைத்திடமும் ஒலிக்கிறதே !
ஆப்பிரிக்க நாட்டினிலே அன்புறவே என்னுணர்வைக்
காப்பாற்றிக் கைகொடுத்துக் கனன்றெழவே உதவிய தாய்
தில்லையாடி வள்ளியம்மை, செந்தமிழ் நாகப்பர்
நல்விவேகா நந்தரையும் நாட்டமுடன் போற்றியுளீர் !
சிற்றூர்கள் தன்னிறைவாய்த் திகழ்ந்திடுதல் விரும்பியயான்
வெற்றிவெற்றி எனஎங்கும் மின்விசையும் பயிர்வகையும்
கரையில்லாக் கல்விவகை கணக்கற்ற நிறுவனமும்
விரைவாக அமைத்துள்ளீர், விம்முகிறேன், என்தோள்கள் !
கதரோடு கைவினையின் கவின்பொருளும் குறளகத்தே
விதவிதமாய் இருப்பதுவும் மிகநாட்டில் செய்வதுவும்
விற்பனையில் தமிழ்நாடு முன்னணியில் நிற்பதுவும்
பற்றுமிகக் கொண்டஎன்றன் பணிசெய்தல் போற்றுகிறேன் !
பாரதத்தே ராமராஜ்யம் சீரமைய வேண்டுமென்ற
பேரமைதி தமிழ்நாட்டில் பிறங்குவதால் களிக்கின்றேன் !
துப்புரவில் நாட்டமுற்ற தொண்டன்யான் நினைத்ததுபோல்,
இப்பொழுது கூவத்தை இயற்றுகிறீர், தொண்டர்காள் !
என்றவர்தான் ஓயாமல் இயம்பிமிகப் புகழ்ந்துரைத்தார் !
நன்றருகில் கூவத்தை நான்காணும் ஆவலுடன்
துடித்துடனே கண்விழித்தேன் ! தூயவரோ மறைந்துவிட்டார் !
பிடித்தமுறக் கூவந்தான் பெட்புறவே தெரிந்ததுவே !
காந்தியண்ணல் கனவெல்லாம் நனவாகக் கடைவிரித்த
பூந்தோட்டம் போல்நாடு பொன்னாகப் பொலிகிறதே !





பாப்பா! எனக்கு ஒரு தமிழ்நாடு கொடு!
தமிழக அரசு பரிசுச்சீட்டு
ஒரு ஒரிசா, ஒரு பஞ்சாப், ஒரு கேரளா இப்படி ரகத்துக்கு ஒண்ணைக் கொடு!
1.
என்னப்பா நீ வெறும் தமிழ்நாடுதானு? மற்றது வாங்கறதில்லையா??
மற்றது லாட்டரி சீட்டுங்க! தமிழ்நாடுதான் பரிசுச் சீட்டு! நிச்சயம் பரிசு தரும்.
2
லட்சுமி! இந்தா பரிசுச் சீட்டு! பத்திரமாப் பூட்டி வை
3



4
ரவிக்கைத் துணி வாங்கித் தான்னு நாலு மாதமாக் கேக்கிறேன். ஒண்ணை யும் காணோம் உளக்கும்....
பரிசு அழங்கட்டும் புள்ளே! பட்டாடையா தருகிறேன்.
5
லட்சுமி! பரிசுச் சீட்டு முடிவுகள் பேப்பரிலே வந்திருக்கு. நம்ம சீட்டை எடு.
கொண்டா மச்சான்! பக்கத்து வீட்டு அக்கா பதறுமெ பார்க்கட்டும்.
ஆமா! உனக்கு 'வீக் பாடி' மயக்கம் போட்டுடுவே! நானே பார்க்கிறேன்
6
லட்சுமி! உனக்குப் பரிசு விழுந்திருக்கு! பத்தாயிரம் ரூபாய்!
கோ...

# பார்த்தோம்



### அண்ணன் வந்தார்

அண்ணு அவர்களின் உருவத்தையும் கல்லறையையும் மிக அழகாக அச்சிட்டிருக்கும் உங்களுக்கு நன்றி. அவர் தம் செவ்வாழை கதையையும் பொன்மொழிகளையும் தனித்தனியே பல பக்கங்களில் இடம் பெறச் செய்த உங்களுக்குப் பாராட்டு. நானும் என் குடும்பத்தினரும் இவ்விதழைப் படித்துக் கண்ணீர் சிந்தினேம். தமிழ்த்தெய்வமான அண்ணனே சில மணி நேரம் எங்களுடன் அளவளாவியதைப் போன்ற பூரிப்பைப் பெற்ருேம்.

—இரா. தாமோதரன்,
சென்னை-12.

### அங்கேயும் பாரதக் கதை!

ரோமாபுரி மன்னர்கள் எந்த அளவுக்குக் கொடியவர்களாகக் காட்சி தந்திருக்கிருர்கள் என்பதை முதல்வர் கலைஞரின் 'இனியவை இருபது' தெளிவாக்கியுள்ளது. பாரதக் கதைகள் நமது பாரதநாட்டில் மட்டுமல்ல—வெளிநாட்டிலும் உண்டு என்பதை முதல்வர் சுட்டிக் காட்டியிருப்பது சுவையாக உள்ளது.

—சண். நவநீதன்,
வத்தலக்குண்டு.

### இனிப்புக் கலவை.

அறிஞர் அண்ணுவின் (சிறுகதை) செவ்வாழைப் பழமெடுத்து, முதல்வர் கலைஞரின் பயணக்கட்டுரைத் தேன் கலந்து, கவிஞர் பலரின் கற்கண்டுக் கவிதைகளையும் சேர்த்து, வள்ளுவர் வழி நின்று, குடும்ப நலக் குறளைச் சர்க்கரையெனக் கலந்து, பெரியார் போற்றிய தமிழக அரசுச் சாதனையைப் பன்னீரெனத் தெளித்து 'அபிஷேகமாய்' தந்திருந்தீர்கள்—படித்துச் சுவைத்தேன்; மனம் மகிழ்ந்தேன்.

—எஸ். கோதண்டபாணி,
சத்தியமங்கலம்.

### சிட்டுக் குருவிகளின் பாராட்டு!

'சிட்டுக் குருவிகள் சிரிக்கின்றன'—சுவையான சிறுகதை. ஆற்ருெழுக்கு நடை—சிந்தையைக் கிளறச் செய்து, பகுத்தறிவுத் தத்துவத்தைப் போதிக்கும் இனிமை மிகு சொல்லோவியம்! எழுதிய மறைமலையாருக்கு எங்கள் பாராட்டு.

—செல்வராஜ், மீனு,
மானுமதுரை.

### 'பிலிம்' காஞ்சி போற்றுதும்!

'தமிழரசு' செப்டம்பர் 16-ஆம் தேதி இதழில் வெளிவந்த ''புலமைக்காஞ்சி போற்றுதும்'' கட்டுரை என்னைப் பெரிதும் கவர்ந்தது. காஞ்சியின் வரலாற்றுச் சிறப்பினை வடித்துத் தந்ததோடு தமிழகத் தலைமகனும் அண்ணுவின் வாழ்க்கையிலுள்ள சிறப்பு நிகழ்ச்சிகளைப்பற்றிய நிழற்படங்களை திரைப்படங்கள் (பிலிம்) போல் அமைத்து வெளியிட்டிருந்தது, 'தமிழர'சின் எழிலை மேலும் பன் மடங்கு உயர்த்திக் காட்டியது.

—சா. ராஜேந்திரன்,
சேலம்-3.

### சுருக்கமான விளக்கம்

ஒன்பது பக்கத்தில் விளக்க வேண்டிய விவரங்களை ஒன்பதே வட்டங்கள் போட்டுத் தெளிவாக்கி விட்டீர்கள். ''சட்டத்தின் துணைகொண்டு பட்டா பெற்ருேர்'' விவரத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

இப்படி எதையும் தெளிவாய் அழுத்தம் திருத்தமாய்ச் சொல்வதில் 'தமிழரசு'க்கு நிகர் வேறெதுவுமே கிடையாது.

—எஸ். ஆறுமுகம்,
கே. கந்தையா, மதுரை-1.

### மனுத் தேதி தேவை!

ஓவியக் கல்லூரி பற்றிய செய்தியை விரிவாக வெளியிட்ட தாங்கள் அந்தக் கல்லூரியில் சேர்வதற்கு எப்போது மனுக் கொடுக்க வேண்டும் என்பதையும் சொல்லியிருக்கக் கூடாதா?

—ரமாதேவி, அம்பத்தூர்.

### எண்ணெய்க்குப் பாராட்டு

தீபாவளிதினத்தில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்குரிய காரணம் உவமைக் கவிஞர் சுரதாவின் 'ஆற்ருேரம்' என்ற கவிதையைப் படித்த பின்னர்தான் தெளிவாகியது. தீபாவளி தினம்—எள்ளுக்கும் அதன் வழியாகக் கிடைக்கும் எண்ணெய்க்கும் விழா எடுத்த நாள் என்பதை வரலாற்றுச் சான்று கொண்டு நிறுவியிருக்கும் சுரதாவுக்குப் பாராட்டைத் தெரிவித்துக்கொள்ளுகிருேம்.

—சுந்தர், இளங்கோவன்,
கோவை-3.

### அனைவரும் உறவினர்

'தமிழரசு' இதழ் ஓர் பொது இதழ் என்பதை செப்டம்பர் 16 இதழ் நிருபித்துவிட்டது. அண்ணு அவர்களை அட்டைப்படத்தில் தாங்கி வெளி வந்திருக்கும் அந்த இதழின் உள்ளே பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் உருவப்படம் இடம் பெற்றதும், சுவாமி விவேகானந்தருக்கு ஆலயம் அமைத்த வரலாறும் தெளிவாக்கப்பட்டு இருப்பது இதற்குச் சான்று!

—கே. நாராயணசாமி,
கும்பகோணம்.

# படித்தோம்



ஆசிரியர், வெளியிடுபவர்: செய்தித் துறை இயக்குநர், தமிழ்நாடு அரசு. அச்சிடுபவர்: அச்சக எழுதுபொருள் இயக்குநர், அரசினர் அச்சகம், சென்னை-1

## உங்களை வாழவைக்கும்




வாய்ப்பு உங்கள் பக்கம் அமைந்துவிட்டால் வாழ்க்கையை வளப்படுத்த அதிகச் செலவில்லை. ஒரே ரூபாயில் நீங்களும் லட்சாதிபதியாக முடியும்! நினைவில் வையுங்கள்: தமிழ் நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம்தான் எண்ணிக்கையில் அதிகப் பரிசுகளை வழங்குகிறது.

அதிக உணவு, உடை, நல்ல வீடுகள், இலவசக் கல்வி, தேவையான மருத்துவ வசதிகள் எல்லாம் சரிவரக் கிடைப்பதற்காக தேசியத் திட்டங்களில் உங்கள் முதலீடு செலவழிக்கப்படுகிறது.

நாடு வளமாக உங்கள் பணம் பயன்படட்டும். ஒவ்வொரு வரிசையிலும் ஒரு லட்சம் அடையலாம்.

**25-வது குலுக்கலுக்கான**
**பரிசுகளின் மொத்தத் தோகை: ரூ. 17,50,000**

தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம்
இது வரை உருவாக்கிய புதிய லட்சாதிபதிகள்: 185 பேர்

**பரிசுச் சீட்டுகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெறுகிறது.**
**ஒரு சீட்டின் விலை ஒரே ஒரு ரூபாய்தான்!**

# இன்றே வாங்குங்கள்
# தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு




**வெளியீடு: இயக்குநர், தமிழ்நாடு அரசு செய்தி விளம்பரத்துறை, சென்னை-9**

★ 5 வரிசை வெளியிட்டுக்குட்பட்டது.

# தமிழரசு

Registered No. M. 8657



